# உனைத்தேன் என நான் நினைத்தேன்



## விஜி பிரபு

# உனைத்தேன்
# என நான்
# நினைத்தேன்

## 1



"சுக்லாம் பரதரம் விஷ்ணும்,

சசிவர்ணம் சதுர்புஜம்,

பிரசன்ன வதனம்..."

கையில் சாம்பிராணிக் கரண்டியுடன் வாயில் விஷ்ணு சுலோகத்துடன் பயபக்தியுடன் அந்த பங்களாவில் ஒவ்வொரு அறையிலும் சாம்பிராணிப் புகை காட்டியவாறு பயபக்தியுடன் நடந்து கொண்டிருந்த அகல்யாவின் கால்கள் மகளது படுக்கையறையில் நுழைந்தவுடன் வழக்கம் போல அங்கேயே நிலைத்து

நின்றன. தூங்கும் புது மலரைப் போல நிர்மலமான அழகுடன், நிச்சலனமாய் தூங்கிக்கொண்டு இருக்கும் மகளைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள் அகல்யா.

மோகனமலர். அகல்யா, கணபதி தம்பதியினரின் ஒரே மகள். கணபதியின் எஸ்டேட் மற்றும் ஸ்டார் ஹோட்டல், அபார்ட்மெண்ட் என்று கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு தானும் ஒரு வாரிசு என்ற எந்த கர்வத்தையும் தூக்கத்திலும் முகத்தில் காட்டாத அகல்யாவின் செல்வபுத்திரி. அருகில் உறங்கும் தன் தம்பி அகிலின் மேல் கம்பளியைப் போர்த்திவிட்டுப் பற்றாக்குறைக்கு தன் கைகளாலும் அவனைத் தன்னுடன் அணைத்துக் கொண்டு உறங்கும் மகளின் பாசம் என்றும் போல அகல்யாவின் நெஞ்சத்தைக் குளிர வைத்தது. உறங்கும் மகளைக் கண்கொட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த அகல்யா மெதுவாக மகளின் தூக்கத்தையும் கலைக்காமல் அறையை விட்டு வெளியேறினாள்.

''என்னம்மா, வழக்கம்போல மகள் தரிசனம் முடிச் சாச்சா'' பெருமையும் கேலியும் கலந்த குரலில் கேட்ட மாமியாரை நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தாள் அகல்யா.

''எனக்கு முன்னாடி நீங்க போய்த் தரிசனம் பண்ணி யிருப்பீங்களே அத்தை? என்னை மட்டும் கேள்வி கேட்கறீங்க?'' புன்முறுவலுடன் கேட்ட மருமகளைப் பெருமையுடன் பார்த்தார் மனோன்மணி.



''என் பேத்தியின் முகத்தில் முழிச்சாத்தான் எனக்கு அந்த நாளே விடியும்னு உனக்குத் தெரியாதா?''

''எது என்னவோ அத்தை. உங்க மகனும் இப்படிச் சொல்லிக்கிட்டுத்தான் எழுந்தவுடன் மோகனா ரூமில் போய் நிற்கிறார்.''

''என் பேத்தி நம்ம வீட்டு மகாலட்சுமிம்மா. அவ முகத்தில முழிச்சா கண்ணும் மனமும் நிறைஞ்சிருமே?'' கூறிய மாமியாரைக் கடந்து பூஜை அறைக்குள் நுழைந்த அகல்யா சாம்பிராணிக் கரண்டியை கீழே வைத்துவிட்டு, கற்பூரத்தை பற்ற வைத்து தெய்வங் களுக்கு ஆராதனை பண்ண ஆரம்பித்தாள். மருமகளின் அருகே வந்து நின்ற மனோன்மணி கண்மூடி கைகூப்பி நின்றார்.

''ஐயா, ஏழுமலையானே இன்னிக்குப் போல் என் னிக்கும் உன்னோட அன்பும், ஆசீர்வாதமும் எங் களுக்கும், எங்க தலைமுறைக்கும் நிலைச்சு நிறைஞ்சு இருக்கணுமய்யா. அம்மா பத்மாவதி தாயாரே அதுக்கு நீங்களும் துணையா இருந்து அருள் புரியணும்மா'' நெஞ்சு நெகிழ வேண்டிக்கொண்ட மனோன்மணி கண்களில் கற்பூத்தைத் தொட்டு ஒற்றிக்கொண்டு நகர்ந் தார். நகர்ந்த மாமியாரை பார்த்த அகல்யா பாசத்துடன் புன்முறுவல் பூத்தாள்.

அந்த வீட்டின் மாமியார் மருமகள் ஒற்றுமை அவர்கள் சொந்தபந்தம் அனைவரிடமும் மிகவும் பிரசித்தமான ஒன்று. மாமியார் நினைப்பதைச் செயலில் கொண்டு வரும் அகல்யாவும், மருமகள் செய்ய நினைக்கும்

காரியத்தை உணர்ந்து செயல்படும் மனோன்மணியும், அன்னையாகவும் மனைவியாகவும் கொண்டிருந்த கணபதிக்கும் அவர்களின் ஒற்றுமை மிகவும் பெருமை யான ஒன்றாக இருந்தது.

''என்னோட அம்மாவையும், பொண்டாட்டியையும் போல எல்லோருக்கும் அமைஞ்சிட்டா உலகமே அமைதியால்ல இருக்கு'' என்பார் கணபதி பெருமை யுடன்.

''அத்தை, காபி எடுத்துக்கங்க'' பணிவுடன் காபிக் கோப்பையை நீட்டிய மருமகளிடம் காபியை வாங்கிய மனோன்மணி அவளை நிமிர்ந்து பார்த்தார்.

''கணபதி எங்கம்மா?''

''அவர் எப்பவும் போல தோட்டத்தில உட்கார்ந்து இருக்கார் அத்தே.''

''எவ்வளவு சொன்னாலும் கேட்கறானா பாரு. இந்தப் பனியில தோட்டத்தில போய் உட்காந்தா உடம்புக்குச் சேருமா?''

''நாம சொன்னா எங்கத்தை கேட்கறாரு? அவர் மனசுக்கு தோணினதைத்தான் செய்வார்.''

''என்னத்தை செய்யறானோ போ? ஒருநாள் போல ஒருநாள் இருக்குமா? இருக்க இருக்க இவனுக்கு வயசு குறையற மாதிரியில்ல ஆடுறான்'' மகனைத் திட்டிக் கொண்டே எழுந்து வெளியேறிய மாமியாரைக் காபி ஜக்குடன் பின் தொடர்ந்தாள் அகல்யா.



அந்த பெரிய பங்களாவின் முன்புறம் இருந்த அகண்ட நிலப்பரப்பு முழுவதையும் தன் ரசனைப்படி அழகான தோட்டமாக வடிவமைத்து இருந்தார் கணபதி.

காம்பவுண்டு கேட்டிலிருந்து பங்களா வரை நீண்ட பெரிய நடைபாதை முழுவதும சிறிய சதுர செந்நிற சிமிண்ட் கற்களைப் பதித்து அந்தச் சிறிய கற்கள் பதித்த இடைவெளியில் புற்களை வளர்த்து, சீராக வெட்டி விட்டு பார்ப்பதற்கு பச்சைப் பட்டில் சிவப்பு கற்கள் பதித்த அழகான தோற்றத்துடன் நேர்த்தியாக வடிவமைக் கப்பட்டது இருந்தது.

நடைபாதையின் இருபுறங்களிலும் மற்றும் தோட்டம் முழுவதிலும் அலங்கார விளக்குகள், மெல்லிய நீண்ட வேலைபாடுகளைக் கொண்ட விளக்கு கம்பங்கள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. பரந்திருந்த தோட்டத்தின் புல்வெளியின் ஓரங்கள் அனைத்திலும் மலைவாசஸ் தலங்களின் சிறப்பம்சமான பலவிதமான மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டு இருந்தன. புல்தரையின் நடுவில் வெண்நிற அலங்கார நாற்காலிகள் போடப்பட்டு நடுவில் டீப்பாயுடன் வசதியாக அமரும் வகையில் மிக வும் அழகாக அமைந்து இருந்தது. அந்த நாற்காலிகளை மழை வெயிலில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக ஒரு மேடையுடன் கூடிய அருங்கோண வடிவ சுற்றுச் சுவர், கூரையுடன் அமைக்கப்பட்டு, அதன் மேல் மல்லிகை முல்லை கொடிகளைப் படரவிட்டு இருந் தார்கள். மாலை நேரங்களில் நறுமணத்தை மனம் நிறைய அள்ளிக் கொடுத்துக் கொண்டு இருந்தன அந்த மலர்கள்.

# 2

புல்வெளியின் நடுவில் இருந்த சேரில் அமர்ந்து கைகளைக் கட்டிக்கொண்டு, கால்களை எதிரே இருந்த டீப்பாயின் மீது போட்டவாறு அமர்ந்திருந்த கணபதியின் புருவங்கள் யோசனையாய் முடிச்சிட்டு இருந்தது. கணவரின் முகத்தை ஆராய்ந்தவாறே டீப்பாயின் ஒரு ஓரத்தில் காபி ஜக்கை வைத்துவிட்டு அவருக்கு எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள் அகல்யா. அவருக்கு கணபதியின் இந்தத் தோற்றம் புதிதாக இருந்தது. ஏனென்றால் எப்பொழுதுமே அவர் தோட்டத்தில் வந்து அமர்ந்துவிட்டாலே அவருடைய அனைத்துக் கவலைகளையுமே மறந்தவராக ஒரு குழந்தையின் குதூகலமான மனநிலைக்கு மாறிவிடுவார். உலகிலேயே அவருக்குப் பிடித்தமான இடம் தன் தோட்டமும், வீடும் தான்.

''என்னங்க, என்ன யோசனை பண்ணிக்கிட்டிருக்கீங்க?''

மனைவியின் கேள்விக்குப் பதிலளிக்காமல் அமர்ந்திருந்த கணபதியைக் கவலையுடன் பார்த்துக் கொண்டே அவர்களுடன் வந்தமர்ந்தார் மனோன்மணி.

''என்னப்பா கணபதி. என்ன விஷயம்? ஏன் அகல்யா கேட்டதுக்குக்கூட பதில் சொல்லாம அமைதியா உட்கார்ந்திருக்க?''



''ஒண்ணுமில்லம்மா...''

''நீ ஒண்ணுமில்லைன்னு சொல்றதினுசே ஏதோ இருக்குன்னு சொல்லுதேப்பா. இதுவரைக்கும் நீ எங்க கிட்ட எதையுமே மறைச்சதே இல்லையே? இன்னிக்கு இது என்ன புதுப்பழக்கம்?'' கண்டிப்புடன் கேட்டார் மனோன்மணி. எவ்வளவோ சாதனைகள் புரிந்து, தொழில்களில் எத்தனை உயரங்களைத் தொட்டவராய் இருந்தாலும் கணபதி என்றுமே தன் தாயார் சொல்லைத் தட்டமாட்டார். அன்னையின் ஆலோசனைகளைக் கேட்காமல் தன்னிச்சையாக என்றுமே, எதற்குமே முடிவெடுக்க மாட்டார் அவர். இன்று அன்னையின் கேள்விகளுக்கும் யோசனையையே பதிலாகக் கொடுத்த கணவரை புதிதாய்ப் பார்த்தாள் அகல்யா.

''என்னங்க ஆச்சு? நீங்க இப்படி உட்கார்ந்திருக்கறதைப் பார்த்தால் எனக்கு ரொம்பக் கவலையா இருக்குங்க.''

''கணபதி வாயைத் தொறந்து பதில் சொல்ல போறயா இல்லை நான் எந்திரிச்சுப் போகவா?'' தாயின் கோபத்தினால் பாதிக்கப்பட்டவராக தலை நிமிர்ந்தார் கணபதி.

''என்னம்மா நீங்க? இப்ப எதுக்காக இவ்வளவு கோபப் படுறீங்க?''

''பின்ன நீ உட்கார்ந்திருக்கற அழகைப் பார்த்தால் துள்ளிக் குதிக்கற மாதிரியா இருக்கு?''

மாமியார் துள்ளிக் குதிக்கும் அழகை மனக்கண்ணில் கண்ட அகல்யா, தனக்குள் தோன்றிய சிரிப்பை மனதுக் குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

"அத்தை சொல்றதும் சரிதானங்க. நீங்க இப்படியே உட்கார்ந்திருந்தால் நாங்க என்னதான் நினைக்கிறது?"

"என்னடி இது பெரிய ரோதனையா இருக்கு? ஒரு மனுசன் கொஞ்சம் யோசனை பண்ணக்கூடாதா இந்த வீட்டில்?"

"அது என்ன யோசனைன்னு சொன்னா நானும் என் மருமகளும் உன்கூடவே உட்கார்ந்து யோசனை பண்ணு வோமில்ல. குடும்பமே காலங்கார்த்தால உட்கார்ந்து யோசிச்சா வீடு உருப்புட்டுரும்ல?" மாமியார் கூறிய தோரணையைப் பார்த்த அகல்யா சிரிப்பை அடக்க முடியாமல் வாய்விட்டுச் சிரித்தாள்.

"ஏண்டி... என்னைப் பார்த்தால் உங்க ரெண்டு பேருக்கும் எப்படித் தெரியுது...?" சிரித்த மனைவியைப் பார்த்து முறைத்தார் கணபதி.

"ம்ம்ம்... கூறு கெட்டவன் மாதிரி தெரியுது. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லாம அங்க என்னடா உறுமுற?"

"அம்மா... சும்மா இருங்கம்மா... இருக்கறது பத்தாதுன்னு நீங்க வேற டென்ஷன் பண்ணாதீங்க..."

"இங்க பாருடா... எனக்கு வாயில நல்லா வந்துரும் பார்த்துக்க. காலங்கார்த்தால வெறும் காபித் தண்ணிய வாயில ஊத்திக்கிட்டு வேற பொழப்பில்லாம உன் மூஞ்சியைப் பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கோம்னு நெனச்சியா? எங்களுக்கு ஆயிரம் வேலை கெடக்கு. ஏதோ ரொம்ப யோசனையா, கவலையா இருக்கியேன்னு என்னான்னு கேட்டா எங்கயோ போற மாரியாத்தா



என்மேல வந்து ஏறாத்தான்னு என்னிக்குமில்லாம ரொம்பக் கடுப்பாப் பேசறே? யாருகிட்டப் பேசறோமின்னு யோசனை பண்ணிப்பேசு. ஆமா. இந்தா அகல்யா, நீ எந்திரிச்சு வா. அவன் காபியைக் குடிச்சாலும் சரி, இல்ல கழுதைய மேச்சாலும் சரி. நமக்கு எதுவும் தேவையில்லை" மகனைப் பார்த்து சத்தமிட்டபடி மருமகளின் கைப்பிடித்து எழுப்பினார் மனோன்மணி. அன்னையின் கோபத்தைக் கண்ட கணபதி பதறிவிட்டார்.

"அம்மா... அம்மா. ஸாரிம்மா. ஏதோ டென்ஷன்ல பேசிட்டேன்... உட்காருங்கம்மா... பிளீஸ்" மகனின் கெஞ்சலில் கொஞ்சம் சமாதானம் அடைந்த மனோன் மணி உட்காராமல் நின்றவாறே மகனை ஏறிட்டார்.

"சரி... சரி... இப்பவாவது என்னன்னு சொல்லு."

"ஒண்ணுமில்லைம்மா... வந்து... வந்து... நம்ம ரெங்கநாதன் இருக்கான்ல..." வாக்கியத்தை முடிக்காமல் இழுத்தார் கணபதி.

"யாரு...? உன்னோட சிநேகிதன் நம்ம ரெங்கநாத னையா சொல்ற?"

"ஆமாம்மா..."

"அவனுக்கென்னடா இப்ப. அவன்தான் சென்னையில் ராஜா மாதிரி கொடிகட்டி வாழ்ந்துக்கிட்டு இருக்கானே?"

"அவனுக்கு ஒண்ணுமில்லைம்மா. நம்ம பக்கத்து லில்லி எஸ்டேட் விலைக்கு வருதுல்ல?"

"ஆமா... அதுக்கு?"

"அவன் இந்த எஸ்டேட்டை வாங்கப் பிரியப்பட றானாம். சென்னையில ஏதோ புரோக்கர் மூலமா இதைப்பத்தி கேள்விப்பட்டான் போல..."

"நல்ல விசயம்தானேடா. நம்ம ரெங்கநாதன் நம்ம பக்கத்து எஸ்டேட்டை வாங்கினா நமக்கெல்லாம் சந்தோஷம் தானே. இதுக்கா இவ்வளவு யோசனை? ஏண்டா கணபதி...? நீ எதுவும் இந்த எஸ்டேட்டை வாங்கலாம்னு நினைச்சிருந்தியா? அப்படியே நினைச்சு இருந்தாலும் அவனுக்காக நீ விட்டுக் கொடுக்கலாம் இல்லையாடா?" கேட்ட தாயை கேள்விக்குறியாய் வெறித்தார் கணபதி.

# 3



'நான் எதை வேண்டுமானாலும் அவனுக்காக விட்டுக் கொடுப்பேன்மா. ஆனால் என் மகளை நான் விட்டுக் கொடுக்க முடியுமா' மனதிற்குள் கேட்டுக் கொண்ட கணபதி மறுபடியும் வெற்றிடத்தை வெறிக்க ஆரம்பித்தார்.

மகனின் அருகே நெருங்கி அமர்ந்து அவர் மடியில் கைவைத்த மனோன்மணி.

"என்னப்பா கணபதி? என்ன விசயம்னு சொல்லு? என் மகன் சிநேகிதனை விட மண்ணைப் பெரிசா நினைக்கிறவன் இல்லைன்றது எனக்குத் தெரியும்ப்பா.



நீ எதை நெனைச்சு மனசைப் போட்டுக் குழப்பிக்கிற?" என்றார் பாசமாக.

"இல்லைம்மா. நான் ரெங்கநாதனுக்குக் கொடுத்த வாக்கு உங்களுக்கு நினைவிருக்கிறதில்லையா?"

"என்ன வாக்கு?" யோசனையுடன் கேட்டார் மனோன்மணி.

"அதான்மா. அவன் மகனுக்கு நம்ம மோகனாவை கொடுக்கறதா சொன்னது...?" கேட்ட மகனைக் கேள்வியாய் நோக்கினார் மனோன்மணி.

"சிறுவயதில சிநேகிதனுங்க ரெண்டுபேரும் பேசிக் கிட்டது அது. ஊருல உலகத்தில எல்லாரும் ஒரு பாசத்தில சொல்ற வார்த்தைதான் அது. அதப்போய் வாக்கு அது இதுன்னுக்கிட்டு இருக்கியே? அப்படியே நீ சொல்றமாதிரி இருந்தாலும் சந்தோஷம்தானப்பா. நம்ம ரெங்கநாதனுக்கு இருக்கறது ஒரே பிள்ளை. அவனும் அவன் பொஞ்சாதியும் தங்கமானவங்க. நம்ம மோகனாவைத் தம் பொண்ணாப் பார்த்துக்குவாங்க. சொத்தும் நம்ம அந்தஸ்துக்கு குறையாம கோடிக் கணக்குல இருக்கு. இதுக்கு மேல வேற என்னப்பா வேணும்?"

"நீங்க சொல்றது எல்லாம் சரிதான்மா. ஆனால்..." தயங்கிய மகனை விநோதமாய் பார்த்தாள் தாய்.

"ஐயா... ராசா... உன் மனசில எதை நினைச்சு நீ இம்புட்டு மறுகற. எதுவா இருந்தாலும் உடைச்சு சொல்லு ராசா..."

"இல்லம்மா. வந்து... அந்தப் பையன... அதான் நம்ம ரெங்கநாதனோட பையன் கோகுலநாதனை நீங்க பார்த்திருக்கீங்கள்ல...?"

"சின்னப் பையனா இருந்தப்ப பார்த்திருக்கேன்யா. அப்புறம்தான் அந்தப்புள்ள காலேசு, மேல்படிப்புக்கு வெளிநாடுன்னு போயிருச்சுல்ல? இப்ப சமீபத்துல பார்த்ததில்ல. ஆனா அப்பவே நல்லா செவப்பா மூக்கும் முழியுமா ராசாவாட்டம் இருப்பானே. இப்ப வயசும் அறிவும் சேர்ந்து ரொம்ப அழகாய்த்தான இருப்பான்?"

"இப்ப எதுக்குங்க இத்தனை கேள்வி கேட்கறீங்க? உங்க மனசில என்ன இருக்குன்னு முதல்ல நீங்க சொல்லுங்க" நறுக்குத் தெறித்தாற்போலக் கேட்ட மருமகளின் அறிவை வழக்கம்போல மனதிற்குள் மெச்சிக்கொண்டாள் மனோன்மணி.

"என் மருமகள் எப்பவும்போல மணிச்சுருக்கமா கேட்டுட்டா? நீ முதல்ல உன் மனசுல இருக்கறத சொல்லு."

"இப்ப அந்தப் பையன் கோகுல் ரொம்ப அழகாய்த்தான் இருக்கான்மா. ஆனா அழகுன்றது வெளித்தோற்றத்துல மட்டும் இருந்தாப் போதுமாம்மா? குணமும் தங்கமா இருந்தாத்தானே நம்ம மோகனாவுக்கு பொருத்தமா இருக்கும்?"

"அப்புறம் என்ன? என் பேத்தி தேவதையில்ல? அதோட குணத்துக்கு பொருந்தற இடத்தில் தான அதை கொண்டு போய் சேர்க்கணும்."



"அதனாலதான்மா இவ்வளவு யோசிக்கிறேன். அந்தப் பையன் கோகுல் வெளித்தோற்றத்துக்கு தங்கம் போல ஜொலிச்சாலும் குணத்தில சுத்தமான பித்தளைம்மா."

'என்னய்யா சொல்ற!?" நெஞ்சில் கைவைத்து நாற்காலியில் சாய்ந்து அமர்ந்துவிட்டார் மனோன்மணி.

"ஆமாம்மா. போன மாசம் ஒரு காண்ட்ராக்ட் விசயமா சென்னை போனப்ப நான் அந்த கோகுலைப் பார்த்தேன்மா. அதுவும் எங்க தெரியுமா? ஒரு ஸ்டார் ஹோட்டல் பாரில். அதுமட்டும் இல்லம்மா. அவன் கூட நெருக்கமா ஒரு நாலு பொம்பளைப் புள்ளைங்களோட பார்த்தேன். இவனும் அவளுங்களுக்குச் சரியா இளிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கான். நான் அவனைப் பார்க்காததுபோல வந்துட்டேன்."

"அதுசரி... நீங்க எதுக்கு அந்த ஹோட்டலுக்குப் போனீங்க?"

"ஏண்டி...நான்தான் குடிக்க மாட்டேன்னு உனக்கு தெரியும்ல. அந்த காண்ட்ராக்ட் விசயமா ஒரு பெரிய மனிதருக்குப் பார்ட்டி கொடுக்கத்தாண்டி போனேன்."

"அந்தப் புள்ளையும் அதுமாதிரி வந்திருக்கலாம் இல்ல?"

"சான்சே இல்லடி. அவனச் சுத்தி உட்கார்ந்து இருந்துதுக எல்லாம் பக்கா லோக்கல் மாதிரி இருந்தாளுக. இவன் மேல விழுந்து கொஞ்சிக்கிட்டு இருக்குதுக, இவன் அதை ரசிச்சுக்கிட்டு இருக்கான். பெரிய கண்றாவிதான் போ" வெறுப்புடன் சொன்னார் கணபதி.

"சரிய்யா கணபதி. உனக்குப் பிடிக்கலைன்னா அதப் பத்தியே நினைக்காத. நீ எப்பவோ சொன்னதை ரெங்கநாதன் இன்னமும் ஞாபகத்துல வெச்சுக்கிட்டா இருக்கப் போறான்?"

"இல்லம்மா., அதை அவன் மறக்கல. அவன் என்னைப் பார்க்கிறபோதெல்லாம் இதப் பத்திப் பேசாம இருந்ததில்ல. நானும் இந்தப் பையன் கோகுலைப் பத்தி தெரியாம, மறுத்துப் பேசாம இருந்துட்டேன். இப்ப ரெங்கநாதன் இந்த எஸ்டேட்டைப் பேசி முடிக்கிறது கூட அந்தப் பேச்சை மனசில வெச்சுக்கிட்டுத்தான்னு நினைக்கிறேன்மா."

"எதை வெச்சு அப்படிச் சொல்ற கணபதி?"

"அவன் போன்ல பேசுறப்ப நம்ம ரெண்டு எஸ்டேட்டும் பக்கத்துல பக்கத்துல இருந்தா எதிர் காலத்துல நல்லதுதானேன்னு கேட்டுட்டு சிரிச்சான்மா. எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம பேசாம இருந்துட்டேன்."

"சரிய்யா. நடந்தது நடந்துருச்சு. இனிமே நடக்கப் போறதைப் பத்தி யோசிப்போம். விடு."

"என்னத்தைம்மா யோசிக்கிறது. அவன் அதான், ரெங்கநாதன் மகன் கோகுல், நாளைக்கு இங்க வர்றானாம்."

"என்னது!! இங்கயா! இங்க எதுக்கு வர்றானாம்?" மாமியார் மருமகள் இருவரும் ஒரே குரலில் பதறினார்கள்.



"லில்லி எஸ்டேட்டை மகன் பேரில் வாங்கப் போறானாம் ரெங்கநாதன். அதுக்கான ஏற்பாடுகளைச் செய்யத்தான் மகனையே அனுப்பறானாம். அவனை நம்ம வீட்டிலேயே தங்க வச்சு வேணும்கிற உதவியைச் செய்யச் சொல்லித்தான் போன் பண்ணினான் ரெங்கநாதன். அதப் பத்தித்தான் யோசனை பண்ணிக்கிட்டு இருந்தேன்" பாவமாக கூறிய கணபதியை தீர்மானமாய் பார்த்தார் மனோன்மணி.

"வரட்டும் கணபதி. நடப்பது எல்லாம் அந்த நாராயணன் செயல். நம்ம கையில என்ன இருக்கு? அந்தப் பையன் கோகுல் எப்படித்தான் இருக்கான்னு நாங்களும்தான் பார்க்கிறோமே. நீ கவலைய விடு. பார்த்துக்கலாம்" கணபதியின் மனதினை மயிலிறகாய் வருடியது அன்னையின் வார்த்தைகள்.

## 4



அந்தப் பெரிய டிஸ்கொதே ஹாலில் கூட்டம் நிரம்பி வழிந்தது. வண்ண வண்ண விளக்குகள் இசைக்கு தகுந்தபடி மின்னி அணைய, ஸ்பீக்கர்களில் பொங்கி வழிந்த பாடல்களுக்கு உற்சாகத்துடன் ஆடிக்கொண்டு இருந்தான் கோகுல் என்று அழைக்கப்படும் கோகுலநாதன். அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டு இருந்த இளம்பெண்களின் கூட்டம் அவன் மேல் விழுந்து கொண்டும், அணைத்துக் கொண்டும், உரசிக்

கொண்டும் அவனை விட உற்சாகத்துடன் ஆடிக்கொண் டிருந்தது. தன்னைச் சுற்றிச் சூழ்ந்து இருக்கும் இளம் பெண்களின் மத்தியில், அந்தந்த பெண்களின் ஆசைக்குத் தக்கபடி இணைந்து ஆடிக்கொண்டிருந்த கோகுலை மற்ற ஆண்களின் பார்வை பொறாமையுடன் மொய்த்தன. தன்னைச் சுற்றியிருப்பவரின் பார்வையில் தெரிந்த பொறாமைத்தீ கோகுலுக்கு மேலும் உற் சாகத்தை கொடுத்துக்கொண்டு இருந்தது.

''அங்க ஆடுறது யாருடா? இந்த ஆட்டம் போடு றான்?'' கேள்வி கேட்ட அந்த ஹோட்டலில் புதிதாக வேலைக்கு அமர்ந்த சிப்பந்தியின் வாயை வேகமாக தன் கைகளால் மூடினான் மற்றவன்.

''மெதுவா பேசுடா. மேனேஜர் காதில நீ பேசுறது மட்டும் விழுந்துச்சுன்னா இப்பவே உன்னை வேலையை விட்டு அனுப்பிடுவார்'' கிசுகிசுப்பாகக் கூறியவனை வியப்புடன் பார்த்தான் புதியவன்.

''யாருன்னுதானே கேட்டேன். அதுக்கு எதுக்கு வேலையை விட்டு அனுப்பணும்?''

''டேய் மடையா. அவன் தான் நாதன் குரூப்ஸ் ஆப் கம்பெனி ஓனரோட ஒரே பையன். அந்தக் கம் பெனியைத் தெரியும்ல? அவங்கப்பாவுக்கு ஏகப்பட்ட தொழில்கள் இருக்கு. நாதன் இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட், மில்லு, ஜவுளிக்கடை, ரியல் எஸ்டேட்னு இவனோட அப்பா ரெங்கநாதன். இவன் அவங்க அப்பா சம்பாதிக்கற பணத்தை எல்லாம் குட்டி, புட்டி ஆட்டம்னு அழிச்சிக்கிட்டு இருக்கான். இவங்களுக்கு



சொந்தமா ஸ்டார் ஹோட்டல் கூட இருக்கு. ஆனா அங்க ஆடுனா அப்பா கண்டிப்பார்னுட்டு நம்ம ஹோட்டல்ல வந்து ஆடிக்கிட்டு இருக்கான். நம்ம ஹோட்டல் பாரில வர்ற வருமானத்தில கால்வாசி வருமானம் இவன் மூலமாத்தான் வருது. அப்புறம் உன்னை வேலையை விட்டு அனுப்பமாட்டாங்களா?'' மெல்லிய குரலில் நீளமாகப் பேசியவனை வியப்புடன் பார்த்தான் புதியவன்.

''பாரில கால்வாசி வருமானம்னா, அவ்வளவு பெரிய குடிகாரனா இவன்?''

''டேய்... நீ ரொம்ப அப்பாவியா இருக்கியேடா. ஏண்டா, இவன் பணம் குடுத்தா இவன் மட்டும் தான் குடிப்பானா? இவனைச் சுத்தி இருக்கற கூட்டத்தைப் பார்த்தேல்ல? எல்லாம் இவனை வெச்சுப் பொழைக்கிற நாதாரிங்க தான். அத்தனைக்கும் இவன்தான் செலவு பண்ணுறான்.''

''அப்படிப் பணத்தை வாரி இறைச்சு சிநேகம் பிடிக்கணும்னு என்னதான் அவசியமோ'' கேட்டவனைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான் மற்றவன்.

''டேய், அவனைச்சுத்தி இருக்கிற மத்தவங்க பார்க்கிற பார்வையில தெரியுற பொறாமையைப் பார்த்தில்ல? இவனைப் போல பணக்காரப் வீட்டுப் பசங்களுக்கு இதெல்லாம் பெருமைதானடா. இதுக்கு மேல இந்தக் குட்டிகளால கிடைக்கிற ஷோக்கு வேற. அது பத்தாதா இவன் இந்த ஆட்டம் போடுறதுக்கு. சரி மேனேஜர் நம்மளையே மொறைச்சுப் பார்க்கிறார் பாரு. நீ போய்

அந்தப் பக்கம் இருக்கற டேபிளைக் கவனி'' இருவரும் வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

தன்னைச் சற்றி நடக்கும் எதையும் கண்டு கொள்ளாதுபோல உற்சாகமாய் ஆடிக்கொண்டு இருந்த கோகுல் அருகில் அவனை உரசிக் கொண்டு ஆடிக் கொண்டிருந்த மாலினியை இடை தொட்டு அணைத்து தன்னிடம் இழுத்துக் கொண்டான்.

''என்ன மாலு... இன்னிக்கு ரொம்பப் பியூட்டியா இருக்கியே?'' தன் கழுத்து வளைவில் முகம் புதைத்து கிறங்கிய குரலில் கூறிய கோகுலைக் கட்டிக் கொண் டாள் மாலினி.

''தேங்க்யூ டியர். இந்த அழகு, அலங்காரம் எல்லாமே உனக்காகத்தான்.''

''ம்ஹூம்? சரி... அப்ப இன்னிக்கு உன்னோட புரோக்கிராம் என்ன?''

''உனக்கு என்ன தோணுதோ அதுதான் எப்பவும் என்னோட புரோக்கிராமுன்னு தெரியாதா கோகுல். டெல்மீ வாட் எவர் யூ வாண்ட். நான் இங்க வரும்போதே நைட் லேட்டாத்தான் வருவேன்னு சொல்லிட்டு வந்துட்டேன் ஸோ... நோ புராப்ளம்.''

''உனக்கென்னப்பா ப்ரீயா விடுற மம்மி டாடி கெடச்சிருக்காங்க. யூ வார் ஸோ லக்கி. நான் நைட் பன்னிரெண்டு மணிக்குள்ள வீட்டுக்குப் போகாட்டினா டாடி கத்தி ஊரைக் கூட்டிடுவார்.''

''ஈஸிட்!! டு பேட்...''



''யா... டா. அதனால நாம ஒரு பதினோரு மணி வரைக்கும் ஸ்பெண்ட் பண்ணிட்டுக் கிளம்பிரலாம். ஓகே?'' மாலினியின் இடையணைத்து கூட்டத்தை விலக்கிக் கொண்டு வெளியேறிய கோகுல் ஹோட்டல் அறையை நோக்கி நடந்தான். உடன் சென்ற மாலினி அடுத்த ஒரு வாரம் செலவிற்குத் திண்டாட தேவை யில்லையென்ற சந்தோஷத்தில் கோகுலை நன்றாக ஒட்டிக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

மாலினி மிகவும் வசதியற்ற பெற்றோருக்கு நான் காவதாகப் பிறந்த சீமந்த புத்திரி. சிறிய வயதில் இருந்தே வறுமையை மட்டுமே உணர்ந்து வளர்ந்தவள் அவள். எனவே இயற்கையாகவே பணத்தையும், புகழையும், செல்வாக்கினையும் எதையும் கொடுதது அடைந்துவிடும் வெறி அவள் மனத்திலும், எண்ணங் களிலும் ஒன்றிவிடும் ஒன்றாக அமைந்து விட்டது. அவளுடைய சிநேகிதியின் நண்பனாக அறிமுகம் ஆன முதல் நொடியிலேயே கோகுலின் பால் ஈர்க்கப்பட்டு விட்டாள் மாலினி. அவனுடைய பணத்தையும், செல் வாக்கையும் கண்ட அவள் தன் அழகினை ஆயுதமாகப் பயன்படுத்தி விரைவிலேயே கோகுலைத் தன் வசப்படுத்திக் கொண்டாள். எத்தனை பேர் கோகுலைச் சுற்றி வந்தாலும் தான்தான் அவனது உண்மையான சிநேகிதி என்று கோகுலிடம் காட்டிக் கொண்டு ஓரளவு அதில் வெற்றியும் பெற்றிருந்தாள் அவள். ஓரளவிற்கு அழகானவள் என்றாலும் அந்த அழகினைத் தன் அலங்காரத்தால் கூடுதலாகத் தெரியச் செய்யும் மாயத்தைக் கற்று வைத்திருந்த மாலினி அதற்கான செலவையும் கோகுலிடமே கறந்துகொண்டு விடுவாள்.

அவள் மூலம் கிடைக்கும் சந்தோஷத்தின் நிறைவில் கோகுலும் அந்தச் செலவுகளையெல்லாம் விரும்பி ஏற்றுக் கொள்வான். மாலினியைப் பொறுத்த மட்டில் கோகுல் ஒரு பொன்முட்டை இடும் வாத்து. அவனை விட பணக்கார இளைஞன் கிடைத்தால் கோகுலை உதறிவிடத் தயாராக இருந்த மாலினிக்கு அப்படி யொருவன் கிடைக்காததால் கோகுலை எப்படியாவது மயக்கித் தன் கைப்பிடியில் வைத்திருக்கும் கட்டாயத்தில் இருந்தாள் அவள். எனவே மாலினி கோகுலின் அனைத்துத் தேவைகளையும் அவன் கேட்காமலே நிறைவேற்றி அவனை ஏறக்குறைய தன் கைப்பாவையாக மாற்ற முயற்சித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பெற்றோரும் மகள் மூலமாக வரும் வருமானத்தைக் கண்டு வாயை மூடிக்கொண்டு அவளது எண்ணங்களுக்கு ஏற்றபடி ஆடிக்கொண்டிருந் தனர்.

மாலினியின் மேல் கிறக்கத்துடன் பரவிப் படர்ந்த கோகுல், தேவை தீர்ந்த மயக்கத்தில் விலகிப் படுத்தான்.

''யூவார் ஸோ நைஸ் மாலினி. ஐ லைக் யூ வெரி மச்'' தாபத்துடன் கூறிய கோகுலைப் புரண்டு படுத்து கட்டிக் கொண்டாள் மாலினி.

''அதான் நான் நைஸ்னு தெரியுதில்ல? நீ இன்னிக்கு இங்கயே ஸ்டே பண்ணிடேன்'' கொஞ்சலாக கூறிய மாலினியின் மொழிகளால் கிளர்ந்தான் கோகுல்.

''எனக்கும் ஆசைதான்யா. ஆனால் எங்க டாட் பெரிய பிரச்சினையைப் பண்ணிடுவாரே. அப்புறம் நான் இப்படி ஃப்ரீயா இருக்கறது கட் ஆகிடும்.''



''நோ நோ. டாடியை அப்படியெல்லாம் பகைச்சுக்கக் கூடாது கோகுல். அவரை ரொம்ப கூலாக டீல் பண்ணப் பழகிக்க. ஓகே?'' கேட்டே மாலினி கோகுலை வேகமாக தன்னிடம் இருந்து விடுவித்தாள்.

''கூல் பேபி. அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. ஆனால் நீ ஏன் இப்படி ஓவர் ரியாக்ட் பண்ற? எங்க டாடியை எப்பிடி டீல் பண்ணனும் என்று எனக்குத் தெரியும். ஸோ, மைண்ட் யுவர் பிஸினஸ்'' அழுத்த மாகக் கூறிய கோகுல் அறையை விட்டு வெளியேறி னான்.

## 5



சென்னையின் மிகப்பெரிய செல்வந்தர்கள் வசிக்கும் அந்த ஏரியாவே அமைதியாகக் காட்சியளித்தது. பங்களாக்களில் இருந்த அனைவரும் உறங்கிக்கொண்டு இருக்க அவர்களது பாதுகாவலுக்காக நிறுத்தி வைக்கப் பட்டு இருந்த வாட்ச்மேன்கள் அனைவரும் கண்ணை அழுத்தும் உறக்கத்தை விரட்டியபடி காவல்காத்து நின்றுகொண்டு இருந்தார்கள். தன்னுடைய காரை 'நாதன் நிவாஸ்' என்ற பித்தளை பெயர்பலகை பதித்திருந்த கம்பீரமான மாளிகைக்குள் சத்தமில்லாமல் செலுத்தி மெதுவாக நிறுத்தினான் கோகுல். கார் கதவைத் திறந்து அவன் இறங்குவதற்குள் ஓடிவந்த

டிரைவர் மாணிக்கம் தன் கையை நீட்டிக் கார்ச் சாவியை பணிவுடன் வாங்கிக் கொண்டான். மாணிக்கம் ரெங்கநாதனின் நம்பிக்கை மற்றும் நாணயமான கார் டிரைவர். தன்னுடைய இளம் வயதில் இருந்தே அவருடனே மாணிக்கத்தை வேலைக்கு வைத்துக் கொண்ட ரெங்கநாதன் அவனைத் தன் வலதுகரமாகப் பாவித்து சகல உரிமைகளையும் அவனுக்கு அளித் திருந்தார்.

''என்னங்கய்யா இது? தினமும் இப்படி லேட்டா வந்தீங்கன்னா நல்லாவா இருக்கு?'' கேட்ட மாணிக் கத்தை தன் வாயில் விரல் வைத்து எச்சரித்தான் கோகுல்.

''உஸ்ஸ்... அங்க்கிள். நீங்களே அப்பாவை எழுப்பி விட்டுருவீங்க போல இருக்கே? காரை செட்டில் கொண்டு போய் நிறுத்திவிட்டு அமைதியா ரெஸ்ட் எடுங்க'' அமர்த்தலாகக் கூறிவிட்டு பங்களாவிற்குள் நுழைந்த கோகுலைக் கவலையுடன் பார்த்தான் மாணிக்கம்.

'இந்தப்புள்ள மேல முதலாளி உயிரையே வெச்சு இருக்காரு. இது என்னடான்னா இப்படிப் பொறுப் பில்லாம ஊரைச் சுத்திக்கிட்டு இருக்கு. பாவம் நம்ம முதலாளி' மனதுக்குள் கூறிக்கொண்ட மாணிக்கம் காரை சத்தமின்றிக் கிளப்பி செட்டில் வைத்துப் பூட்டி னான்.

பங்களாவிற்குள் நுழைந்த கோகுல் மெதுவாக நடந்து தன்னுடைய அறைக்குள் நுழைந்து கதவைப்



பூட்டிவிட்டுக் குளியலறைக்குள் நுழைந்தான். உடை மாற்றி படுக்கையில் சரிந்தவனது உள்ளம் மாலினி தந்த அருகாமையை நினைத்து மயக்கத்தில் ஆழ்ந்தது.

'ஹவ் நைஸ் ஷி இஸ்! நான் எதிர்பார்க்காத சந்தோஷத்தை எல்லாம் அள்ளித் தர்றாளே. பேசாம அவளை நம்மாடவே செட்டில் பண்ணிக்கிட்டா இப்படி தனியா இருக்க வேண்டாமில்ல' தன்னைப் போல் எத்தனையே இளைஞர்களுக்கு அள்ளிக் கொடுத்த வளை எண்ணி கிறங்கியபடியே உறக்கத்தில் ஆழ்ந்தான் கோகுல்.

''குட்மார்னிங் டாட். ஸேம் டு யூ மாம். இன்னிக்கு என்ன பிரேக்பாஸ்ட்?'' செல்லமாகக் கூறிக்கொண்டே எதிரில் அமர்ந்த கோகுலை அமைதியாக ஏறிட்டார் ரெங்கநாதன். என்றும் போலத் தன் மகனை ஆணழக னாகப் பார்த்தவுடன் அவரது மனம் பெருமையுடன் நிறைவுற்றது. ஆனால் அவனது குணத்த எண்ணிய அவரது உள்ளமோ கவலையில் ஆழ்ந்தது.

''என்ன டாட், அப்படிப் பார்க்கறீங்க?'' எதையும் உண் ணாமல் தன்னையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த ரெங்கநாதனை பார்த்து சங்கடத்துடன் நெளிந்தான் கோகுல்.

''என்னங்க இது? பிளேட்டில் சாப்பாட்டை வெச்சுக் கிட்டு சாப்பிடாம அப்படி என்ன சிந்தனை?'' மனைவி லட்சுமியின் குரலுக்குக் கட்டுப்பட்டவராக சாப்பிட ஆரம்பித்தார் ரெங்கநாதன். கணவனின் மன வேதனை களை நன்கு அறிந்திருந்த லட்சுமி வேறு எதையும்

பேசாமல் இருவருக்கும் மௌனமாகப் பரிமாற ஆரம்பித்தாள்.

“கோகுல், நான் உன்னிடம் கொஞ்சம் பேசணுமே...” கூறிய தந்தையை நிமிர்ந்து பார்த்தான் கோகுல்.

“என்ன டாட் இது? என்கிட்டப் பேசுறதுக்குப் போய் பர்மிஷன் கேட்கறீங்களே.”

“இது பர்மிஷன் இல்லப்பா. இன்பர்மேஷன். நீ என் பேச்சைக் கொஞ்சம் காது குடுத்துக் கேட்க உன்னைத் தயார் பண்ற இன்பர்மேஷன்” தந்தையின் குரலில் தெரிந்த குற்றச்சாட்டு கோகுலைத் தலை குனிய வைத்தது.

“டாட், நான் என்னிக்கும் உங்க பேச்சை காது கொடுத்துக் கேட்க ரெடிதான் டாட்.”

“ஆனா அதன்படி நடக்கிறதுதானே உனக்கு கஷ்டமாயிருக்கு” குத்தலாக ஒலித்தது ரெங்கநாதனின் குரல்.

“என்னால ஒபே பண்ண முடிஞ்சதை நான் செய்யத் தயங்கியது இல்லை டாட். ஆனா...”

“நான்தான் உனக்குத் தகுந்தாற்போல பேசலயா கோகுல்?”

“அப்படியில்லப்பா. எனக்கு உங்க மேல ரொம்ப மரியாதை இருக்குப்பா. அதை எப்படி எக்ஸ்போஸ் பண்ணனும்னுதான் எனக்குத் தெரியல.”

கூறிய மகனை வாஞ்சையுடன் பார்த்தார் ரெங்கநாதன்.



“எனக்கு உன்கிட்ட இருந்து மரியாதை மட்டும் தேவையில்லை கோகுல் பாசமும், உண்மையும் தான் இப்ப உன்கிட்ட நான் மிகவும் எதிர்பார்த்து ஏங்குறது.”

“உங்க மேலயும், மம்மி மேலயும் பாசம் வைக்காமல் நான் வேற யார் மேல பாசம் வைக்கப் போகிறேன் டாட். வீணா ஒர்ரி பண்ணிக்காதீங்க.”

“ஆனா உன்னோட இப்போதைய பாசம் எல்லாம் வேற தேவையில்லாத மேட்டர் மேல அதிகமா இருக்கேப்பா?”

“ஓ... நோ... டாட். நீங்க எப்படிப் பேச்சை ஆரம்பித்தாலும் எண்டிங் பாயிண்ட் இப்படித்தான் இருக்கு. ப்ளீஸ்... டாட். என்னோட சுதந்திரத்தில் தலையிடாதீங்க. நீங்க பேச வந்தது இதைத்தானா?” அலுப்புடன் கேட்ட மகனைச் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு கூர்ந்து பார்த்தார் ரெங்கநாதன்.

“இல்லப்பா. நான் பேச வந்தது இதுபத்தி இல்லை. இன்பாக்ட்... எனக்கு நான் இப்பப் பேசியதைப்பற்றி கவலையில்லை.”

“அப்போ இனிமேல் பேசுவதைப் பற்றித்தான் கவலையா டாட்? எனிதிங் சீரியஸ்?”

“அது சீரியஸா இல்லையா என்பது இனிமேல் நீ நடந்துகொள்ளப் போவதில் இருக்கிறது கோகுல். எனிவே... அஸ் எ ஃபாதரா உனக்கு ஒரு நல்ல வழியைக் காட்ட வேண்டியது என்னோட டியூட்டி.”

“ஸ்யூர் டாட். நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன். இப்பச் சொல்லுங்க” தந்தை அப்படி என்ன

பேசப்போகிறார் என்ற வியப்புடன் அவரைப் பார்த்தான் கோகுல்.

# 6



மகனிடம் என்ன பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதை மனதிற்குள் உருப்போடுபவரைப் போல சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தார் ரெங்கநாதன். அவரது அமைதியில் குறுக்கிடாமல் தந்தையின் முகம் பார்த்துப் பொறுமையாகக் காத்திருந்த கோகுலைப் பார்த்த லட்சுமியின் கண்கள் கலங்கியது. மிகவும் நல்ல குணங்களைக் கொண்ட தங்கள் மகன் எந்தப் புள்ளியில் தடுமாறித் திசைமாறினான் என்பதைச் சிந்தனை செய்த தாயின் உள்ளம் வேதனையுற்றது. ஒருவேளை அவனை ஹாஸ்டல், படிப்பு, வெளிநாடு என்று அனுப்பாமல் தன்னுடைய கைப்பிடிக்குள், கண்காணிப்பிற்குள் வைத்திருந்து இருந்தால் தன் மகனின் வாழ்வு சீரழிந்து இருக்காதோ என்று அவளது தாய்மை தவித்தது.

''கோகுல்...'' ஆழ்ந்து ஒலித்தது ரெங்கநாதனின் குரல்.

''சொல்லுங்க டாட்.''

''உன் பெயரில் மூணாறில் ஒரு எஸ்டேட் வாங்கலாம்னு இருக்கேன்பா.''



''நமக்கு இருக்கற சொத்து போதாதா டாட்? இப்ப எஸ்டேட் எல்லாம் எதற்கு? ஒருவேளை ஹாலிடே டிரிப் போல போய் வருவதற்கு என்றால் ஊட்டியிலோ கொடைக்கானலிலோ வாங்கலாமே?'' குழப்பத்துடன் கேட்டான் கோகுல்.

''ஊட்டியிலும், கொடைக்கானலிலும் என்னோட பிரண்ட் கணபதி இல்லையேப்பா. அவன் மூணாறில் தானே இருக்கான். அவனோட எஸ்டேட்டுக்குப் பக்கத்து எஸ்டேட்டைத்தான் நாம வாங்கப் போகிறோம்.''

''அப்படி அவர் பக்கத்தில் இருக்கும் அந்த எஸ்டேட்டைத்தான் வாங்கணும் என்று அவசியம் இல்லையே டாட்?''

''உனக்கு அவசியம் இல்லைப்பா. ஆனால் எங்களுக்கு ரொம்ப அவசியம்ப்பா'' கூறிய ரெங்கநாதனின் வார்த்தைக்கு மென்மையாகப் புன்னகைத்தாள் லட்சுமி.

''என்னமோப்பா. இன்னிக்கு நீங்களும் மம்மியும் பேசுறதும், செய்யுறதும் எனக்கு ரொம்ப குழப்பமா இருக்கு.''

''இதிலே கன்ப்யூஸ் ஆகுறதுக்கு ஒண்ணும் இல்லைப்பா. நீ அங்க போனா உனக்கே எல்லாம் புரியும்.''

''சரிப்பா. நான் போய் அந்த எஸ்டேட்டைப் பார்த்துட்டு உங்களுக்கு போன் பண்றேன். ஓகேவா அப்படி இல்லைன்னா திரும்பி வந்த பின்னால் நாம டிஸ்கஸ் பண்ணிட்டு ஒரு முடிவுக்கு வரலாம்.''

"இல்லையில்லை கோகுல். அந்த எஸ்டேட்டை வாங்குறது உறுதிதான். அதனால நீ நம்ம கணபதி வீட்டில் ரெண்டு நாள் தங்கி, எஸ்டேட்டை நல்லாச் சுத்திப்பாரு. அப்புறம் டாக்குமெண்ட்ஸ் எல்லாம் கரெக்டா இருக்கான்னு சரிபார்த்து, பத்திரம் பதிய எல்லா ஏற்பாடும் பண்ணி வை. நான் டூ டேஸ்ல வந்து உங்களோட ஜாயின் பண்ணிக்கறேன். அமொவுண்ட் செட்டில்மெண்ட் எல்லாம் நான் அங்க வந்த பிறகு பார்த்துக்கலாம்."

நான் அங்க தங்கித்தான் டாக்குமெண்ட்ஸ் எல்லாம் சரி பார்க்கணுமா. ஏன் டாட்? ஜெராக்ஸ் காப்பியை வாங்கி வந்தால் இங்க வந்து பார்த்துக்கலாம். அப்புறம் பத்திரப் பதிவை எல்லாம் உங்க பிரண்ட் பார்த்து ஏற்பாடு பண்ணிட்டு போன் பண்ணினா ஒரு நாள் நாம ரெண்டு பேரும் போய் செட்டில் பண்ணிட்டு அப்படியே பதிஞ் சுட்டும் வந்திரலாமே?"

"அதுக்கில்லை கோகுல். டூ டேஸ்ல எல்லாம் முடிஞ் சுரும். அதுக்குள்ள எத்தனை தடவை நீ சென்னைக்கும் மூணாறுக்கும் டிரிப் அடிப்ப? அதோட நீ போகிறப்ப உங்க அம்மாவும் உன் கூடவே அங்க வர்றேன்னு சொல்றா. அதனால நீ ரிலாக்ஸ்டா எல்லா வேலையையும் அங்க இருந்து முடிச்சு வை. நான் வந்தவுடன் எல்லோரும் ஒன்னா ரிடர்ன் வந்திரலாம்."

"ஹில் ஸ்டேஷன்ல அதுவும் ஒரு சின்ன எஸ்டேட்ல என்னை ரெண்டு நாள் அரெஸ்ட் பண்ணி வைக்கறீங்களே டாட்? எனக்கு ரொம்பப் போரிங்கா இருக்கு. இமேஜின் பண்ணிப் பார்க்கவே முடியல. நான் வேணும்னா ஒரு வேலை பண்ணட்டா. நான் போகும் போது என் பிரண்ட் ரெண்டுபேரைக் கூட்டிக் கொண்டு போகிறேனே..."



"நோ. நோ கோகுல். அப்படியெதுவும் பண்ணி விடாதே" வேகமாகத் தன்னை இடைமறித்த தந்தையை கேள்வியாகப் பார்த்தான் கோகுல்.

"வொய் டாட்? உங்க பிரண்டிற்கு டிஸ்டர்ப் பண்ணாம நாங்க ஏதாவது ஹோட்டல்ல தங்கிக் கொள்கிறோம். எனக்கும் போர் அடிக்காது."

"முட்டாள்தனமாப் பேசாதே கோகுல்" கோபத்தில் வெடித்தார் ரெங்கநாதன்.

"டாட்...!?"

"ஆமாம், உன்னோட டாட்தான். அதனாலதான் உன்னோட அத்தனை முட்டாள்தனங்களையும் இதுவரை பொறுத்துக் கொண்டேன். ஆனால் இனிமேலும் நான் பொறுமையா இருந்தால் அது எனக்கு நானே செய்யும் துரோகம்டா. நான் சொல்வதை தயவுசெய்து மறுக்காமல் கேளு. உன்னை உன்னோட டாட் கெஞ்சிக் கேட்டுக்கறேன்..." தன் முன் கைகூப்பிய தந்தையின் கையை வேகமாகத் தடுத்தான் கோகுல்.

"என்ன டாட் இது? ஏன் இப்படியெல்லாம் நடந்துக்கறீங்க? எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு."

"எனக்கும் தாண்டா கஷ்டமா இருக்கு. நீ நடந்து கொள்வது, செய்வது, பார்ப்பது, பழகுவது என்று எதை நினைத்தாலும் கஷ்டமா இருக்குடா. நான் என்ன செய்ய கோகுல், நீயே சொல்லு. உன்னை நான் இதுவரை உன்னோட போக்குல விட்டதுதான் நான் செய்த மிகப்பெரிய தவறுன்னு நினைக்கிறேன். ஆனா இன்யும் உன்னை அப்படியே விட என்னால் முடியாது."

"ஸோ...?" அழுத்தமாகக் கேட்ட கோகுலை கெஞ்சலாகப் பார்த்தார் ரெங்கநாதன்.

''டேய் கோகுல். மறுபடியும் கெஞ்சிக் கேட்டுக் கிறேன். இந்த ஒருமுறை நான் சொல்கிறபடி நடந்துக்க. அதுக்கு அப்புறம் உன்னோட தலையெழுத்து என்னவோ அப்படியே ஆகட்டும். ஆனால் ஒருமுறை முயற்சி பண்ணி என்னோட சொல்படி நடந்துதான் பாரேன். உன்னைப் பெற்றவன் உனக்குக் கெடுதலா பண்ணிடுவேன். யோசித்துப் பார் கோகுல். ப்ளீஸ்.''

கெஞ்சுதலாகக் கூறிய தந்தையைப் பார்த்த கோகுலின் மனம் வேதனையுற்றது. இதுவரை அவர் எதற்காகவும் கோகுலை வற்புறுத்தியது இல்லை. அவன் என்றாவது ஒருநாள் தானாகத் திருந்தி வருவான் என்ற நம்பிக்கையுடன் இருந்த ரெங்கநாதனுக்கு இன்று தன் மகனின் வாழ்வு மலராமலே கருகிவிடுமோ என்ற பயம் தோன்றியது. அவர் எப்பாடு பட்டாவது கோகுலின் உள்ளத்தை மாற்றிவிட வேண்டும் என்று உறுதி கொண்டவராக அவனுடன் போராடினார்.

# 7

ரெங்கநாதனை இவ்வளவு உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பார்த்திராத கோகுல் வாயடைத்துப் போய் அமர்ந்திருந்தான்.

''என்னப்பா? நான் சொல்றது காதுல விழுகுதா. இல்லையா?''



''கேட்குது டாட். இப்ப எதுக்காக இவ்வளவு எமோஷன் ஆகுறீங்க?'' புரியாமல் கேட்டான் கோகுல்.

''எமோஷன் ஆக வேண்டியதற்கு ஆகித்தானே ஆகணும். அதை விடு. நீ கணபதி வீட்டில் தங்க சம்மதம்தானே?'' சந்தேகமாகக் கேட்ட தந்தையைப் பார்த்த கோகுலுக்கு சிரிப்பு வந்தது.

''என்ன டாட் இது? உங்க பிரண்ட் வீடு என்ன அவ்வளவு மோசமாகவா இருக்கும்? இப்படிக் கண்டிஷன் போட்டுத் தங்க வைக்க டிரை பண்றீங்க?''

''நான் இன்னும் கண்டிஷன் போடவே ஆரம்பிக்கலை கோகுல். ஜஸ்ட் உன்னோட சம்மதத்தைக் கேட்டேன்.''

''ஓகே டாட். ஐ அக்ரி...''

''அப்போ அங்க தங்கியிருக்கிற நாட்கள்ள நீ டிரிங்க் பண்ணக்கூடாது.''

''வாட்...? திஸ் இஸ் ரிடிகுலஸ் டாட். என்னால முடியாது. ஹில் ஸ்டேஷன்ல குடிக்கக் கூடாதுன்னா...'' அலறிய கோகுலை நிதானமாக இடைமறித்தார் தந்தை.

''இது என்னோட ஆர்டர் கோகுல். அங்க இருக்கற வரைக்கும் நீ குடிக்கக் கூடாது.''

''டாட் இது ரொம்ப ஓவர் டாட்.''

''ஓவரா இருந்தாலும் கவலையில்லை. அப்புறம் அங்க இருக்கறவங்ககிட்ட மரியாதையா நடக்கணும்.''

''என்ன டாட் இது? நான் என்ன காட்டுமிராண்டியா? எப்பவாவது நான் யார்கிட்டயாவது மரியாதைக் குறைச்சலா நடந்து நீங்க பார்த்திருக்கீங்களா?'' கேட்ட

மகனின் குரலில் இருந்த உண்மை ரெங்கநாதனைச் சுட்டது. உண்மைதான். கோகுல் குணத்தில் சற்று முரண் இருந்தாலும் யாரிடமும் அவன் மரியாதைக் குறைவாக நடக்கமாட்டான். அத்துடன் தன்னை விரும்பி வலிய வரும் பெண்களுடன் தான் நெருக்கமாக இருப் பானேயொழிய பொதுவாகப் பெண்களிடமும் அநாகரீக மாக நடந்து கொள்ள விரும்பமாட்டான். தன் நண்பர்களையும் அவ்வாறு நடக்க அனுமதிக்க மாட்டான்.

"அந்த விசயத்துல உன்னால எனக்குப் பெருமைதான் கோகுல். இருந்தாலும் சொல்லி வைக்கிறேன்."

"ஓகே டாட். மேலே சொல்லுங்க. ஆனாலும் உங்க பிரண்ட் வீட்டில் ரெண்டு நாள் தாங்குறதுக்கு இத்தனை கண்டிசன் ரொம்ப அதிகம் டாட்" சிணுங்கலாகக் கூறிய மகனின் தோள் தட்டிச் சிரித்தாள் லெட்சுமி.

"அங்க இருக்கறவங்க அப்படிப்பட்டவங்கடா."

"அவங்க எப்படிப் பட்டவங்களா இருந்தாலும் சரி டாட். உங்களோட இவ்வளவு அன்ட ப பெற்ற அவங்க ஸோ லக்கி டாட்."

"இல்லப்பா. அவங்க நம்ம சொந்தமா வந்து கிடைக்கறதுக்கு நாம தான் அதிர்ஷ்டம் பண்ணியிருக் கணும்."

"அவங்க என்ன அவ்வளவு பெரியவங்களா டாட்? நீங்க யாரையும் இவ்வளவு புகழ்ந்து நான் பார்த்ததில் லையே!"



"பெரியவங்கன்னு நீ எதை நினைச்சுக் கேட்கறேன்னு தெரியலை கோகுல். ஆனா எதை நினைச்சு கேட்டிருந் தாலும் அவங்க எல்லா வகையிலும் ரொம்பப் பெரிய வங்கதான்ப்பா. சின்ன வயசிலேயே தாயை இழந்துட்ட எனக்கு கணபதியின் அம்மா மனோன்மணி இன் னொரு தாய்போலத்தான் கோகுல்" தந்தையின் குரலில் தெரிந்த பாசத்தை உணர்ந்துகொண்ட கோகுல் புன் னகைத்தான்.

"அப்புறம் இன்னொரு முக்கியமான விசயம் கோகுல். கணபதியோட பொண்ணு மலர்கிட்டே நீ கொஞ்சம் டிஸ்டன்ஸ் விட்டுப் பழகணும். புரியுதா?"

"ஏன் டாட்? அந்தப்பொண்ணு சரியில்லையா? ஐ மீன் குணம் சரியில்லையான்னு கேட்டேன்."

கோகுலின் வார்த்தைகளைக் கேட்ட ரெங்கநாதனும், லட்சுமியும் ஒரு கணம் திகைத்து பின் வாய்விட்டு சிரித்தார்கள். அவர்களது சிரிப்பிற்கு காரணம் புரியாமல் திகைத்தான் கோகுல்.

"மலர்... ஹா... ஹா... மலரோட குணம் சரியில் லையா? ஹா... ஹா..."

"டாட், நான் ரொம்பக் குழம்பிப் போயிருக்கேன். ப்ளீஸ், மேட்டருக்கு வாங்க. காலங்கார்த்தால டிபன் சாப்பிட வந்தவனை உட்கார வெச்சு லெக்சர் அடிச் சுக்கிட்டு இருக்கீங்க. பத்தாக்குறைக்கு அதைச் செய் யாதே, இதைச் செய்யாதேன்னு கண்டிசன் வேற போட்டுக்கிட்டு இருக்கீங்க. ஒண்ணு கேட்டா இப்படி இன்சல்ட் பண்றமாதிரி சிரிச்சா என்ன அர்த்தம்? இப்ப

நான் மூணாறு போகறதுக்கே யோசனையா இருக்கு. இத்தனை கண்டிசனோட அங்க போய்ச் சொத்து வாங்கணும்னு ஒண்ணும் அவசியம் இல்லை. அப்படித் தேவைன்னா நீங்களும் மம்மியும் போய் வாங்கிக்கிட்டு வாங்க. ஐ டோண்ட் கேர்'' கோபமாக கூறிவிட்டு எழுந்த கோகுலின் தோள் பற்றி அமரவைத்தாள் லட்சுமி. அவளது கண்கள் ரெங்கநாதனை மகன் அறியாமல் எச்சரித்தன.

# 8



''கூல்டவுன் பேபி... கூல்டவுன்'' வேகமாக எழுந்து மகனின் தோள்களைத் தட்டி சமாதானம் செய்த ரெங்கநாதனின் புன்சிரிப்பு மட்டும் மாறாமல் உதட்டிலேயே நிலைத்திருந்தது.

''ஓகே டாட். உங்க அட்வைஸ் எல்லாம் முடிஞ்சிருச்சா இல்லை இன்னும் பாக்கி இருக்கா?'' கோபம் குறையாமல் கேட்டான் கோகுல்.

''அவ்வளவுதான்ப்பா. இதுக்கு மேல நீ தாங்க மாட்டேன்னு எனக்குத் தெரியும். இவ்வளவு நேரம் என் பேச்சைக் காதுகொடுத்து கேட்டதே பெரிய விசயம். இதுக்கு மேல உன் பொறுமையைச் சோதிக்க எனக்கு விருப்பமில்லை.

''அப்பாடி! அப்ப நான் போகலாமா?''



''எங்கடா போகப் போகிற? இப்பத்தான சொன்னேன். நீ மூணாறு போகணும்னு. அதுக்குள்ள மறந்துட்டியா?''

''என்ன டாடி சொல்றீங்க? மூணாறு போகணும்னு தான் சொன்னீங்க. இன்னிக்கே போகணும் என்று சொல்லவில்லையே! அப்படி உடனே போகவேண்டிய தேவையில்லையேப்பா.''

''தேவையும் தேவையில்லாததும் நம்மளோட சூழ்நிலையைப் பொறுத்தது கோகுல். நீ இன்னிக்கே உங்க அம்மாவைக் கூட்டிக்கொண்டு மூணாறு கிளம்பறே. அதுவும் இன்னும் ஒன் அவர்ல கிளம்பணும்'' இறுதியாகக் கூறிவிட்டு ரெங்கநாதன் வேகமாகச் சென்றுவிட, யோசனையில் புருவங்கள் முடிச்சிட அங்கேயே அமர்ந்துவிட்டான் கோகுல்.

ஏனோ கோகுலுக்கு அந்த ஊருக்குப் போவதற்கே பிடிக்காமல் தோன்றியது. தன்னுடைய பெற்றோர் இருவரும் ஒன்று சேர்ந்து தன்னிடம் எதையோ மறைப்பதைப் போல உணர்ந்தான் கோகுல். அது என்னவாக இருக்கும் என்ற சிந்தனையில் அவனுக்குத் தலை வலியே வந்துவிட்டது. அத்துடன் அங்கே சென்று அங்கிருக்கும் மனிதர்களின் மனம் கோணாமல் வேறு நடந்துகொள்ள வேண்டுமே என்று அவனது மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

அடுத்தவரைக் கவர்ந்து அவர்களின் அன்பைப் பெறுவதில் கோகுலுக்கு என்றுமே விருப்பம் இருந்ததில்லை. அவனது செல்வாக்கினைப் பார்த்து மயங்கி தானாகவே வலிய வந்து அவனுடன் உறவை ஏற்படுத்திக்

கொள்ளும் கூட்டத்தின் நடுவே இருந்து பழகியவன் அவன். தன் தந்தையின் நண்பரான கணபதியை அவன் நன்கு அறிவான். கோடீஸ்வரரான அவர் மதிப்பிற்கு உரியவர்தான் என்றாலும், தான் எதற்காக அவர்முன் போலியாக நடிக்க வேண்டும் என்று சினத்துடன் எண்ணிக் கொண்டான் கோகுல்.

''என்ன கோகுல்... இங்கயே உட்கார்ந்துட்ட? போய் ரெடியாகுப்பா. இப்பவே லேட் ஆகிவிட்டதுப்பா'' மகனைத் தேடி வந்த லட்சுமி அவனைக் கிளப்புவதில் குறியாக இருந்தாள்.

''அம்மா, எனக்கென்னவோ இந்த டிரிப்பே பிடிக் கலைம்மா. எதுக்காக நீங்களும் டாடியும் என்னைக் கம்ப்பெல் பண்றீங்க?'' நேரடியாகக் கேட்ட மகனுக்குப் புன்னகையைப் பதிலாகத் தந்தாள் அன்னை.

''எழுந்திரு கோகுல். இப்பக் கிளம்பினாத்தான் இருட்டுவதற்குள் நாம் அங்கே போகமுடியும்ப்பா'' - கூறிய அன்னையை முறைத்துவிட்டு வேகமாகத் தன் அறையை நோக்கி நடந்தான் கோகுல்.

'எல்லாம் உன் நல்லதிற்காகத்தான் கோகுல்' மனதிற்குள் கூறிக்கொண்ட லட்சுமி, தான் இல்லாத இரண்டு நாட்களிலும் வீட்டை பராமரிப்பது பற்றி வேலையாட்களிடம் உத்தரவிடத் தொடங்கினாள்.

''கிளம்பலாமா அம்மா?'' பணிவுடன் தன் முன் வந்து நின்ற டிரைவர் மாணிக்கத்தைப் பார்த்து திரும்பிய லட்சுமி தன்னுடைய பெட்டியை அவனிடம் கொடுத்து விட்டு மகனது அறைக்குள் நுழைந்தாள்.



கட்டிலில் சாய்ந்து அமர்ந்து மேலே தொங்கிய பேனை ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்த மகனைப் பார்த்தவளுக்கு சிரிப்பும் கோபமும் ஒன்றாக வந்தது.

''என்ன கோகுல் இது, சின்ன புள்ளையாட்டம் இப்படி அழிச்சாட்டியம் பண்ணிக்கிட்டு இருக்க? இப்ப நீ கிளம்பப் போகிறாயா இல்லையா?'' அதட்டிய அன்னையின் குரலுக்கு முணுமுணுத்தபடிக் கீழ்ப்படிந்தான் கோகுல். அவனுக்கு வேண்டிய துணிகளையும், பொருட் களையும் சூட்கேஸ்களில் அடைத்து மாணிக்கத்திடம் ஒப்படைத்துவிட்டுக் கணவரைத் தேடி அவரது அறைக்குள் நுழைந்தாள் லட்சுமி. அவள் வரவை எதிர்பார்த்து அமர்ந்திருந்த ரெங்கநாதன் மிக சோர்வுடன் காணப்பட்டார்.

''என்னங்க இது? இப்ப எதுக்கு இப்படிச் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கீங்க?'' கணவரின் அருகில் அமர்ந்து அவரது மடியில் கைவைத்து ஆறுதலாகக் கூறினாள் லட்சுமி.

''ஒண்ணுமில்லை லட்சுமி. நம்ம புள்ளை மட்டும் ஒழுக்கமா இருந்திருந்தான்னா நாம தலை நிமிர்ந்து போய்ப் பொண்ணு கேட்கலாம். இப்ப...'' வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்திய கணவரைப் பார்த்து புன்னகைத் தாள் அவள்.

''இப்ப மட்டும் என்னங்க ஆகிடுச்சு? நாம தலை நிமிர்ந்து உரிமையோடதான பொண்ணு கேட்கப் போகிறோம்?''

''அப்படியில்லைம்மா. நம்ம ஆயிரம் சமாதானம் சொல்லிக்கிட்டாலும் நம்ம பிள்ளைகிட்ட குறை இருப்பது உண்மைதானே...''

''குறை என்னங்க குறை? நம்ம பிள்ளை என்ன கூனா, குருடா? சின்ன வயசில கொஞ்சம் அப்படி இப்படி இருப்பது சகஜம்தானே. அவனுக்கு ஒரு கால் கட்டுப் போட்டாத் தானா திருந்திட்டுப் போறான். இதப்போய் பெரிசாப் பேசுறீங்களே?''

''என்ன லட்சுமி இப்படிப் பேசற? நமக்கு ஒரு பொண்ணு இருந்நா உன் மகனைப் போல இருக்கற ஒருத்தனுக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுக்க உனக்கு மனசு வருமா?'' கணவரின் கேள்வியில் திகைத்தாள் லட்சுமி.

''அது... அது வந்து... அப்படியில்லைங்க...'' தடுமாறிய மனைவியை ஆறுதலாக அணைத்துக் கொண்டார் ரெங்கநாதன்.

கணவரின் மார்பில் புதைந்து மௌனமாகக் கண்ணீர் விட்டாள் லட்சுமி. அவளது முதுகை மெதுவாக தட்டிக் கொடுத்துக் கொண்டு சிறிது நேரம் அமைதியாக இருந்தார் ரெங்கநாதன். மெதுவாக சமாதானம் கொண்ட லட்சுமி நிமிர்ந்து அமர்ந்து கணவரைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

''இப்ப என்னங்க நடந்துருச்சு? யார் கிட்டப் போய் நாம தலைகுனிஞ்சு பொண்ணு கேட்கப்போறோம். நம்ம கணபதி அண்ணன்கிட்டத்தான? நான் கேட்டு அண்ணன் மறுத்துப் பேசமாட்டார்ங்கிற நம்பிக்கை



எனக்கு இருக்குங்க. அதோட நம்ம மலரும் ஒண்ணும் எதிலும் குறைந்த பொண்ணில்லையே. அவளுக்காக நான் தலைகுனிஞ்சு பொண்ணு கேட்கவும் தயாராய் இருக்கேன்.''

''நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் எதுவும் சொல்லவில்லையே லட்சுமி? நம்ம மகன் குணம் தெரிஞ்சும் ஒரு பொண்ணோட வாழ்க்கையைப் பணய மாய் வெக்கிறோமோன்னு என் நெஞ்சு பதறுதுடி.''

''எதுக்குங்க பதறணும். நீங்க கவலைப்படற மாதிரி எதுவும் நடக்காதுங்க. நீங்க வேணும்னாப் பாருங்களேன். நம்ம கோகுல் மலரைப் பார்த்தால் மனசு மாறித் திருந்திருவான் பாருங்க. என் மனசு என்னமோ அப்படித் தான் சொல்லுது. அதுக்கும் மேல அவ நம்ம கோகுலைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இங்க வந்தான்னா நான் அவளைத் தரையில கூட நடக்கவிடாம என் உள்ளங் கையில் வெச்சு தாங்குவேன். ஒருவேளை என் மக னோட அன்பு அந்தப் பொண்ணுக்கு முழுமையா கிடைக்கலேன்னா, அதுபோல கோடி மடங்கு அன்பினால் அவளை நான் குளிப்பாட்டுவேன்ங்க. தாய்க்குத் தாயா இருந்து அவளை இந்த மாளிகைக்கு மகாராணியா வாழவைப்பேனே தவிர, துன்பப்பட்டு நிக்க விடமாட்டேன்'' உறுதியாக கூறிய மனைவியைப் பெருமையுடன் பார்த்தார் அவர். அவருக்குத் தெரியும். லட்சுமி ஒரு முடிவெடுத்துவிட்டாள் என்றால் அந்தக் காரியத்தை எப்பாடு பட்டாலும் நடத்தியே தீருவாள். ஆனால் அவளது செயல்பாட்டில் ஒருவித நியாயமும் கலந்தே இருக்கும். கணவனது அன்பு கிடைத்தும்,

கணவன் வீட்டில் இருக்கும் மற்றவர்களின் அன்பு கிடைக்காமல் எத்தனையோ பெண்களின் வாழ்வு சீரழிந்து இருக்கிறது. ஆனால் தன் மகன், மருமகளிடம் அன்பு காட்டாவிட்டாலும், நான் அவளைத் தாங்குவேன் என்று கூறும் மாமியார்கள் கோடியில் ஒருவர்தான் இருப்பார்கள். அப்படிப் பார்த்தால் லட்சுமியும் கோடியில் ஒரு குணவதியாக ரெங்கநாதனுக்குத் தெரிந்தாள்.

# 9



ரெங்கநாதன் அதற்கு மேல் தயங்கி அமரவில்லை. மலரின் வாழ்வை மலர வைக்கும் பொறுப்பை மனைவி என்று ஏற்றுக் கொண்டாளோ அந்த நொடியே அவரது கவலை எல்லாம் பறந்துவிட்டது. லட்சுமி என்றுமே சொன்ன சொல் மாறமாட்டாள் என்பது ரெங்கநாதனுக்கு நன்றாகத் தெரியும். அவர் அதற்கு மேல் தாமதிக்காமல் மகனையும், மனைவியையும் மூணாறுக்கு அனுப்பி வைத்தார்.

போகும் வழியில் அருகில் அமர்ந்திருந்த அன்னையைத் திரும்பிப் பார்த்த கோகுல் ''எற்காகம்மா அந்தப் பொண்ணுகிட்டே என்னை டிஸ்டன்ஸ் மெயின்டெய்ன் பண்ணச் சொன்னார் டாடி?'' என்று கேட்டான்.

''எந்தப் பொண்ணுகிட்ட?'' தெரியாதது போல் கேட்ட அன்னையை முறைத்தான் கோகுல்.



''அதான் மம்மி. மலர்னு யாரைப் பற்றியோ சொன்னீங்களே?'' கூறிய கோகுலை காரை ஓட்டிக் கொண்டு இருந்த மாணிக்கம் நமுட்டுச் சிரிப்புடன் திரும்பிப் பார்த்தான்.

''என்ன அங்க்கிள்?'' புரியாமல் கேட்ட கோகுலை பார்த்துவிட்டு பார்வையால் மாணிக்கத்தை அடக்கினாள் லட்சுமி.

''அந்தப் பொண்ணு பேரு மோகனமலர்'' தாயின் குரலில் கவரப்பட்டான் கோகுல்.

''மோகனமலர்... ரொம்ப அழகான பெயர் மம்மி.''

''பெயர் மட்டும் இல்லை கோகுல். அந்தப் பொண்ணும் ரொம்ப அழகா இருப்பா. தேவதையாட்டம்'' அன்னையின் குரலில் கரைந்தோடிய மென்மையைப் பார்த்த கோகுல் வியந்து போனான்.

''நீங்க யாரையுமே புகழ மாட்டீங்களேம்மா. அந்தப் பொண்ணு என்ன அவ்வளவு ஸ்பெஷலா'' ஏனோ கோகுலின் மனம் முழுவதும் 'மோகனமலர்' என்ற பெயர் நிறைந்தது. அவன் தனக்குள் பலமுறை அந்தப் பெயரை உச்சரித்துப் பார்த்தான்.

''ஆமாம் கோகுல். அந்தப் பொண்ணு ரொம்ப ஸ்பெசல்தான். அவளோட அறிவு, அடக்கம், மென்மை, பழகும் விதம்னு எல்லாமே ஸ்பெசல்தான்ப்பா.''

கோகுலுக்கு அவளை உடனே பார்க்கவேண்டும் போல் மனம் துடித்தது.

''அதற்கும் நான் இடைவெளி விட்டுப் பழகுறதுக்கும் என்னம்மா சம்பந்தம்?''

''ஏன்னா... அவளோட மென்மையான குணத்துக்கு உன்னோட முரட்டுத்தனத்தால ஏதாவது பிரச்சினை வந்துருமோன்னு உங்கப்பா பயப்படுகிறார்'' வேண்டும் என்றே மகனை உருவேற்றினாள் அன்னை.

'அந்தப் பெண் அவ்வளவு மென்மையானவளா' என்று வியந்தது கோகுலின் மனம்.

''என்னம்மா இது? நான் என்ன அவ்வளவு டீசன்ஸி இல்லாதவனா? என்னோட கேர்ள் பிரண்ட்ஸ் யாருமே என்னை இப்படிச் சொன்னதில்லை. நீங்க...''

''கோகுல்... ஸ்டாப் இட்'' பேசிக்கொண்டு இருந்த மகனைப் பார்த்து சீறினாள் லட்சுமி.

''என்னம்மா... நான் எதுவும் தப்பா...'' அன்னையின் கோபத்தைக் கண்ட கோகுல் பதறிவிட்டான்.

''தப்பாகவா... நீ இப்பப் பேசின எல்லாமே தவறுதான் கோகுல். உன்னோட பழகற மத்த பொண்ணுங்களோட மலரைக் கம்ப்பேர் பண்ணிப் பேசாதே. அவளோட கால் தூசுக்குக் கூட அந்தப் பொண்ணுங்க எல்லாம் தகுதி யானவங்க கிடையாது.''

'அப்படியென்ன அவள் உயர்வு' என்று மனம் கொதித்தாலும் அதை வெளியில் கூறி அன்னையின் கோபத்தை அதிகரிக்க விரும்பாமல் அமைதியானான் அவன்.

''கணபதி நிவாஸ்'' என்ற பித்தளைப் பெயர்ப் பலகை தாங்கிய கம்பீரமான மாளிகைக்குள் நுழைந்த கார் வழுக்கிக்கொண்டு போய் போர்டிகோவில் நின்றது.



காரை விட்டு இறங்கி கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தவாறு சுற்றிப் பார்வையை சுழற்றியவன் மனம் ஆனந்த அதிர்ச்சியில் உறைந்தது.

இயற்கையின் அழகோடு, கணபதி செயற்கையாக உருவாக்கிய அழகோடும், மின் விளக்குகளின் ஒளியில் தேவலோகம் போலக் காட்சியளித்த தோட்டத்தைப் பார்த்த கோகுல் சன்னமாக விசிலடித்தான்.

''ஸ்ஸ்... கோகுல். இதற்காகத்தான் அப்பா அவ்வளவு அட்வைஸ் பண்ணினார்'' சன்னமான குரலில் எச்சரித் தாள் லட்சுமி.

''ஸாரிம்மா. இந்தப் பங்களாவும், தோட்டமும் ரொம்ப அழகா இருக்கும்மா. ரொம்பவும் ரசனையோட உரு வாக்கியிருக்காங்க'' அன்னையைப் போலவே மெல்லிய குரலில் கூறினான் கோகுல்.

கார் சத்தத்தைக் கேட்ட கணபதி வேகமாக வாசலுக்கு வந்து லட்சுமியையும், கோகுலையும் வரவேற்றார்.

''அம்மா, அகல்யா... லட்சுமி வந்திருக்கு பாருங்க. வா லட்சுமி. உன்னைத்தான் இவ்வளவு நேரம் எதிர்பார்த் துக்கிட்டு இருந்தோம். வாங்க தம்பி'' தன் கைப் பற்றி அழைத்த கணபதியைப் பார்த்து மரியாதை யுடன் புன்னகைத்தபடி மாளிகைக்குள் நுழைந்தான் கோகுல்.

''லட்சுமி! வாடி என் ராசாத்தி. உன்னப் பார்த்து எவ்வளவு நாளாச்சு. நல்லா இருக்கியா? வா தாயி... வந்து உட்காரு. பிரயாணமெல்லாம் சவுகர்யமாக

இருந்ததா?'' வாஞ்சையுடன் கேட்ட மனோன்மணியை அணைத்துக் கொண்டாள் லட்சுமி.

''உங்க புண்ணியத்துல ஒரு குறையும் இல்லம்மா. நீங்க எப்படி இருக்கீங்க?''

''எனக்கென்னம்மா குறை? நீ முதல்ல உட்காரு. அகல்யா வந்தவங்களுக்குத் தண்ணி...'' பேசியபடி திரும்பிய மனோன்மணி பேச்சை நிறுத்திக் கொண்டார். மாமியார் சொல்லுவதற்கு முன், கையில் தண்ணீர் டம்ளர்களை ஏந்தி வந்த அகல்யா கோகுலையும் லட்சுமியையும் பார்த்து புன்னகையுடன் வரவேற்று, டம்ளர்களை அவர்கள் முன் நீட்டினாள்.

அந்த வீட்டு மனிதர்களின் கலப்படம் இல்லாத அன்பையும், உபசரிப்பையும் பார்த்த கோகுல் தந்தையின் வார்த்தைகளில் அடங்கியிருந்த உண்மையை உணர்ந்து கொண்டான்.

அமைதியாக அமர்ந்திருந்த கோகுலைப் பேசிக் கொண்டே பார்வையால் அளவெடுத்துக் கொண்டு இருந்தார் மனோன்மணி.

'ஆள் பார்க்க ராஜாவாட்டம் நல்லாத்தான் இருக்கான். ஆனா குணம்தான் சரியில்லைன்னு கணபதி சொல்றான். பார்ப்போம். சின்ன வயசில ஒரு சிலர் வாழ்க்கையைக் கொண்டாட்டமா நினைக்கிறது இயற்கைதான். ஆனா அந்தக் கொண்டாட்டம் இவன் ரத்தத்துல ஊறிப் போய் இருந்தாத்தான் சிக்கல். அத முதல்ல நல்லாத் தெளிவாகத் தெரிஞ்சுக்கணும்' மனதிற்குள் முடிவெடுத்த மனோன்மணி நிமிர்ந்து மருமகளைப் பார்த்தார்.



அகல்யாவின் பார்வையும் அதே நேரம் கோகுலை ஆராய்ந்து கொண்டுதான் இருந்தது. இருவரின் பார்வைகளையும் பார்த்தும் பாராதது போல கணபதியிடம் பேசிக்கொண்டு இருந்தாள் லட்சுமி.

''பேசிக்கிட்டே இருந்தால் எப்படி லட்சுமி? போய் கை கால் கழுவிக்கிட்டு வா. சாப்பாடு ஆறிப் போகுமில்ல. இந்தக் குளிருக்கு சூடா சாப்பிட்டா தான் நல்லா இருக்கும்'' கூறிய மனோன்மணி வேலைக்காரனைப் பார்த்து விரட்டினார்.

''என்னாடா சின்னய்யா? உனக்கு வெத்தலை பாக்கு வெச்சு விளக்கணுமா? அம்மாவோட பெட்டியை கொண்டு போய் மாடியில என்னோட ரூமில வைச்சுட்டு வா. அப்புறம் தம்பியோட பெட்டிய கீழேயே நம்ம விருந்தாளிக ரூமில வெய்ப்பா'' மாடியில் பேத்தியின் அறையிருப்பதால், கீழேயே கோகுலுக்கு ரூமை ஒதுக்கிவிடச் செய்திருந்தார் மனோன்மணி. கோகுலின் அறையை அடுத்திருந்த அறையிலேயே கணபதியைத் தங்கச்சொல்லி உத்தரவிட்டிருந்தார் அவர். இரண்டு நாட்கள் மனைவியை பிரிந்து படுக்க வேண்டிய கட்டாயத்தில் மனம் சிணுங்கினாலும், மகளுக்காக அதை ஒத்துக்கொண்டார் கணபதி.

## 10



குளிருக்கு இதமாக கம்பளிக்குள் அடங்கி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் கோகுல். அவனுடைய கனவில்

வந்திருந்த மாலினியோடு கட்டிலில் சரிந்து அவளை ஆராயத் தொடங்கியபோது மெல்லிய கொலுசின் ஓசை கேட்டது. மாலினி எப்பொழுதும் கால்களில் கொலுசு அணிய மாட்டாளே என்கிற சந்தேகத்துடன் அவளது கால்களைப் பார்க்க எண்ணிய அவனது தூக்கம் கலைந்துவிட்டது. மாலினியின் எண்ணத்தில் கிளர்ந்து பொங்கிய ஆண்மையை அடக்க இயலாமல் தவித்த கோகுலின் செவிகளில் கொலுசின் ஒலி இப்பொழுது நன்றாகத் துல்லியமாகக் கேட்டது. வேகமாக பயத்துடன் மணியைப் பார்த்தவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். அதிகாலை ஆறு மணியைக் கட்டிக்கொண்டு இருந்தது கடிகாரம். மறுபடியும் கொலுசின் ஒலியும், கூடவே மெல்லிய குரலையும் கேட்ட கோகுல் மெதுவாக ஜன்னல் அருகே சென்று திரைச்சீலையை விலக்கிப் பார்த்தவனின் இதழ்கள் தன்னையறியாமல் புன்னகையில் விரிந்தது.

கண்ணாடி ஜன்னலுக்கு மிகவும் அருகில் ஒரு சிறுவன் புல்வெளியில் கம்பளியைப் போர்த்தி அமர்ந்து புலம்பிக் கொண்டு இருந்தான். அவனுக்கு எதிரே பார்த்தவனின் விழிகள் வியப்பில் விரிந்தது.

அங்கே மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறத்தில் நைட்டியும் சிவப்பு நிற ஸ்வெட்டரும் போட்டுக்கொண்டு ஒரு பெண் கோகுலுக்கு முதுகு காட்டி நின்று கொண்டு இருந்தாள். கோகுல் வியந்தது அந்தப் பெண்ணின் கூந்தலைப் பார்த்துத்தான். மயில் தோகை போல விரிந்து படர்ந்து இருந்த அவளது கூந்தல் அடர்த்தியாக இடையைத் தாண்டி முழங்காலுக்குச் சற்று மேலே



ஒன்றுபோல வெட்டி விடப்பட்டு நீண்டிருந்தது. அந்தப் பெண்ணின் தலை அசைப்பிற்குத் தக்கபடி அவளது கூந்தலும் மென்மையாக அசைந்து கொண்டு இருந்தது. கையில் தடிமனான கயிற்றை வைத்துக் கொண்டு அவள் அந்தச் சிறுவனிடம் எதையோ கூறிக்கொண்டு இருப்பதை பார்த்த கோகுல் திரையை பாதியளவு இழுத்துவிட்டு ஜன்னல் கதவுகளில் ஒன்றை மெதுவாகத் திறந்து வைத்தான். இப்பொழுது அந்தப் பெண்ணின் குரல் கோகுலுக்குத் தெளிவாகக் கேட்டது.

''இப்ப என்னடா செய்யுறது?'' மென்மையான குரலில் கவலையுடன் வெளிவந்தது அவள் குரல்.

''விடுக்கா. இதெல்லாம் சப்ப மேட்டர். இதுக்குப் போய் கவலைப்படலாமா'' அவளுக்குத் தைரியம் சொல்லிக்கொண்டு இருந்தான் அவள் தம்பி.

'பாவம், அவளுக்கு என்ன பிரச்சினையோ தெரியலியே' தவித்தது கோகுலின் உள்ளம்.

''அதுக்கில்லடா. அவ அந்த நொள்ளைக்கண்ணு ரோகினி முன்னால அப்படிச் சொல்லிட்டாடா. எனக்கு எவ்வளவு அவமானமாப் போச்சு தெரியுமா' அழுகையில் சிணுங்கியது அவள் குரல்.

''என்கிட்டச் சொல்லிட்டேல்ல. அந்த நொள்ளக் கண்ணையும் நோண்டி எடுக்கல நான் உன் தம்பி இல்லக்கா. நீ கவலையை விடு'' பெரிய மனிதத் தோரணையுடன் கூறினான் சிறுவன்.

''என்னமோ போடா. ஆனாலும் என் மனசு ஆறவே மாட்டேங்குதுடா. என்னைப் பார்த்து அந்த கோமளா அப்படிச் சொல்லிட்டாளேடா.''

‘அந்தக் கோமளா அப்படி என்னதான் சொல்லி இருப்பா. இவ இவ்வளவு வருத்தப்படறாளே’ கவலையுடன் சிந்தித்தான் கோகுல்.

“விடுக்கா விடுக்கா. அரசியல்ல இதெல்லாம் சாதாரணம்க்கா. ஆனா அவ ஒட்டடைக்குச்சி உடம்பை நான் எங்க பசங்ககிட்டச் சொல்லி உடைக்கச் சொல்றேனா இல்லையான்னு பாரு.”

“அதெல்லாம் சரிடா. ஆனா அந்தக் கோமளா சொன்னது போல நான் கொஞ்சம் குண்டாத்தானடா இருக்கேன். நீயே பார்த்துச்சொல்லு. நான் குண்டா இல்லையா?” அவளது வார்த்தைகளைக் கேட்ட கோகுல் சத்தமில்லாமல் வாய்விட்டுச் சிரித்தான். அவனது வாழ்நாளில் அவன் இவ்வளவு மகிழ்ச்சியோடு சிரித்ததே கிடையாது என்று வியப்புடன் எண்ணிக்கொண்ட அவன் ஆவலாகத் திரும்பி நின்ற அவளைப் பார்வையிட்டாள்.

பார்வையிட்ட கோகுலின் மனம் தன்னை அறியாமல் அவளது பாதங்களில் தஞ்சம் அடைந்தது. மாநிறத்துடன், பெரிய கண்களும், குண்டுக் கன்னங்களும், மெல்லிய சிவந்த இதழ்களும், அதனுள் முல்லைப் பூவின் அரும்பினைப் போன்ற பற்களும் கொண்ட அவள் குழந்தைத் தனத்துடன் பேரழகியாகத் திகழ்ந்தாள். ஒல்லியாக இராமல் சிறிது பூசினாற் போல இருந்த தன் உடலை அவள் தம்பியிடம் திரும்பிக் காட்டியபோது கோகுலின் உயிரும் சேர்ந்து அசைந்தது. அவன் அசைவில்லாமல் அவளைப் பார்த்துக் கொண்டே சிலையாக நின்று விட்டான். அவள் அசையும் போதெல்லாம்



அவளது கன்னங்களை உரசிச்செல்லும் ஜிமிக்கியாகத்தான் பிறந்திருக்கக் கூடாதா என்று அவன் மனம் ஏங்கியது. அவள் நடக்கும்போது கேட்ட மெல்லிய கொலுசின் ஒலி தேவகானமாக அவனது காதில் ஒலித்தது.

“கொஞ்சம்... கொஞ்சம்தான்க்கா. நல்லாக் கேட்டுக்க. கொஞ்சம் குண்டா இருக்கற மாதிரித்தான் தெரியுது...” இழுத்துக் கூறிய சிறுவனின் குரலில் தன்னுணர்வு பெற்றான் கோகுல்.

“இப்ப என்னடா செய்வது?” கவலையுடன் கூறிய அவளது குரலுக்கு புன்னகைத்தான் கோகுல்.

‘இதுதாண்டி உனக்கு அழகா இருக்கு’ மனதிற்குள் கூறிக்கொண்டான் கோகுல்.

“நீ கவலையை விடுக்கா. நான் இருக்கேன்ல, உன்னை டயட்ல இருக்க வைச்சு, ஸ்கிப்பிங் பண்ண வச்சுன்னு எதையாவது செஞ்சு உன்னை ஒல்லியா இன்னும் ஒரு மாசத்துல ஆக்கல என்பேர் அகிலேஷ் இல்லக்கா.”

“உன்ன நம்பித்தாண்டா இருக்கேன். ஆனா இந்த ஸ்கிப்பிங்கை நாளைக்குத் தாண்டவா?” கேட்ட அக்காவை கோபத்துடன் முறைத்தான் சிறுவன்.

## 11

“ஏன்? இன்னிக்கு என்ன?” மெதுவாகக் கம்பளியை ஒதுக்கிவிட்டு கைகளை மார்புக்குக் குறுக்காக கட்டிக் கொண்டு அதட்டினான் சிறுவன்.

''இல்லடா அகில். எனக்குக் கொஞ்சம் மூச்சு வாங்குற மாதிரி இருக்குடா. அதான் ஏன்னா எனக்குத் தான் சளி பிடிச்சு இருக்குல்ல. அதனாலதான்.''

ரூமிற்குள் இருந்த கோகுலின் உடல் சிரிப்பில் குலுங்கியது.

''அக்கா. இதெல்லாம் மனப்பிராந்திக்கா. உன்னால முடியும். நான் சொல்றேனில்ல. உன்னால முடியும். நீ ஆரம்பி...'' கட்டளையிட்ட தம்பியின் குரலுக்காக அரைமனதாக கயிறை வீசித் தாண்ட ஆரம்பித்தாள் அவள்.

''வேணாம்டி. ப்ளீஸ். தாண்டாதே. என்னாலே தாங்க முடியலடி' மனதிற்குள் காதலுடன் கூறிக் கொண்டான் கோகுல்.

''டேய் அகில். போதும்டா. என்னால முடியலடா'' மூச்சு வாங்கியபடி புல்வெளியில் சரிந்தாள் அவள். அவளை முறைத்தபடி பல்லைக் கடித்தான் சிறுவன்.

'யார் இவள்? எங்கிருந்து வந்தாள்? என் உயிர் என்னைக் கேட்காமல் இவள் பாதத்தில் பணிகின்றதே! எத்தனையோ ஜென்மங்களாய் தொடரும் சொந்தத்தைப் போல இவளைப் பார்த்தவுடன் அலைபாயும் என் மனம் அமைதியாகின்றதே!' பல்வேறு சிந்தனைகளுடன் அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் கோகுல்.

''மோகனா. அம்மாடி... எங்க தாயி இருக்கற? அம்மா மோகனமலரு'' ஒலித்த மனோன்மணியின் குரலுக்குத் திரும்பிய அவளைப் பார்த்து திகைத்தான் கோகுல்.



'இவள்தான் மோகனமலரா? என் தந்தையும் தாயும் அவ்வளவு பெருமையாகக் கூறிய பெண் இவள்தானா? ஆனால் அவர்களின் அத்தனை பெருமைக்கும் தகுதி யான பெண்தான் இவள்' மனதிற்குள் கூறிக்கொண்டே கோகுல் மறுபடியும் ஆவலாக அவளைப் பார்த்தான்...

''அம்மாடி... மோகனா! இங்கயா தாயி இருக்க? உன்னை எங்கெல்லாம் தேடுறது?''- கூறிக்கொண்டே அருகில் வந்த மனோன்மணியை முறைத்தான் அகில்.

''இந்த அந்நிய சக்தியை முதலில் உன்கிட்ட நெருங்கவிடாமல் துரத்துக்கா. நீ பாதி இளைச்சுரலாம்'' பாட்டியைப் பார்த்துக்கொண்டே மலரிடம் கூறினான் அவன்.

''என்னடா முறைக்கிற? காலங்கார்த்தால கொட்டுற பனியில பிள்ளையைக் கூட்டிக்கிட்டு வந்து நிக்க வெச்சிருக்கிற? படவா ராஸ்கல். உனக்கெல்லாம் அறிவே இல்லையா?'' பேரனைத் திட்டியபடியே தன் பேத்தியை ஒரு கையால் அணைத்துக் கொண்டார் பாட்டி.

ஒன்றுமே அறியாதவள் போல பாட்டியின் அணைப் பில் அடங்கிய அக்காவை முறைத்தான் தம்பி.

''யாரு? நான்? உன் பேத்தியை? கொட்டுற பனியில? போ அப்பத்தா அந்தப்பக்கம். அதுதான் காலங்காத்தால என்னைத் தூங்க விடாம இம்சை பண்ணி என்னைக் கொண்டு வந்து பனியில் நிக்க வெச்சிருக்கு'' கையை நீட்டிக் குற்றம் சாட்டிய தம்பியை பார்வையில் கெஞ்சி னாள் மோகனமலர். அவளுடைய பார்வையில் மேற் கொண்டு எதுவும் பேசாமல் தலைகுனிந்து கீழ்ப்பார்வை யால் மனோன்மணியைப் பார்த்தான் அகில்.

"போடா பொய்க்கோழி! என் பேத்தியாவது இப்படிக் கூறுகெட்ட வேலையைச் செய்யறதாவது. இது எல்லாம் உன் வேலையாய்த் தான் இருக்கும்" அப்பாவியாக முகம் வைத்திருந்த மலரின் கன்னம் தொட்டு முத்தமிட்டார் மனோன்மணி.

"சரி. ஓகே. இன்னிக்குப் பொழுது என் அக்கா புண்ணியத்துல சூப்பரா விடிஞ்சிருச்சு. நீ ஸ்டாட் பண்ணு அப்பத்தா. நான் ரெடி" போருக்குத் தயாராகும் வீரனைப் போல தன் முன் நின்ற பேரனை முறைத்தார் மனோன்மணி.

"என்னத்தடா ஸ்டார் பண்ணச் சொல்ற?"

"ஐயோ அப்பத்தா. அது ஸ்டார் இல்ல. ஸ்டாட். அப்படின்னா தொடங்கு, ஆரம்பிக்கலாம் அப்படின்னு அர்த்தம்."

"போடா பொடிப்பயலே. எனக்கே கிளாஸ் எடுக்கறியா? நான் அந்தக் காலத்துலயே எட்டாவது படிச்சவ."

"ஆமா. பெரிய ஐ.ஏ.எஸ் படிச்ச மாதிரி பீத்திக்குது பார் கிழவி" முணுமுணுத்த அகிலேஷின் குரல் ஜன்னல் வழியாக கோகுலுக்கு நன்றாகக் கேட்டது. அவன் சிரித்து சிரித்து வலித்த வயிற்றை கைகளால் அழுத்திக் கொண்டான்.

"என்னடா முணுமுணுங்கிற?" அதட்டினார் மனோன்மணி.

"ஒன்னுமில்ல தாயே. நீ கண்ட்டினியூ பண்ணு. என்னால நிக்க முடியல. நான் கொஞ்சம் இப்படி உட்கார்ந்துக்கறேன்" சோர்வுடன் அமர்ந்த அகிலேசைப் பார்த்த கோகுல் சிரிப்பை அடக்க முடியாமல் வாய் விட்டுச் சிரித்தான். இத்தனை கலாட்டாவிற்கும் கலங்காமல் பாட்டியின் அணைப்பில் அப்பாவிபோல நின்று கொண்டு இருந்த மோகனாவின் குண்டுக்கன்னத்தில் முத்தமிட வேண்டும் போல துடித்தது கோகுலின் நெஞ்சம்.



'பாவி. இத்தனை நடந்தும் சிரிப்பை முகத்துல காட்டாம எவ்வளவு நல்லபுள்ளையா நிக்கறா பார். ஐ லவ் யூடி' மனதிற்குள் அவளை முத்தமிட்டான் கோகுல்.

"இப்ப நீ என்னதாண்டா சொல்ற?" இடுப்பில கை வைத்து முறைத்த பாட்டியை அமைதியாகப் பார்த்தான் அகிலேஸ்.

"நான் அப்ப இருந்தே ஒண்ணும் சொல்லலை அப்பத்தா. நீ உன் செல்லப் பேத்தியை தேடி வந்தியே அது எதுக்காக?" பேரனின் கேள்வியால் தன்னுணர்வு வந்தவரைப் போலத் தலையில் அடித்துக் கொண்டார் மனோன்மணி.

"ஐயோ ஐயோ! உன்னோட போராடுனதுல நான் வந்த வேலையை மறந்துட்டேன் பாரு. இந்தா கண்ணு. இதைச் சாப்பிடு" கையில் இருந்த கிண்ணத்தை மலரிடம் நீட்டினார் மனோன்மணி.

"அது என்னது? முதல்ல அதை என்கிட்டக் கொடு அப்பத்தா" கிண்ணத்தில் கை வைத்த பேரனின் கையை தட்டிவிட்டார் மனோன்மணி.

"ஹை. அப்பத்தா! தேனில் போட்ட பேரீச்சம்பழம் அப்புறம் நேந்திரம் பழமா!" ஆவலாகக் கேட்டபடி

ஸ்பூனினால் அள்ளி வாயில் வைக்கப்போன மலரை கரம் பற்றித் தடுத்தான் அகிலேஷ்.

"அக்கா. இதெல்லாம் சாப்பிட்டா உடம்பு இளைக் காதுக்கா. பூசணிக்காய் போலக் குண்டாக ஆகிவிடும். ப்ளீஸ்க்கா சாப்பிடாதே" கெஞ்சினான் அவன்.

"என்னை என்னடா பண்ணச் சொல்ற? சாப்பிடாட்டி அப்பத்தா மனசு சங்கடப்படாதா?" கிண்ணத்தில் இருந்ததை ஏக்கத்துடன் ஆசையாகப் பார்த்த மலரைப் பார்த்து பல்லைக் கடித்தான் அகில்.

"சங்கடப்படுறது அப்பத்தா மனசா இல்லை உன் னோட மனசா? நீ ஏன்க்கா இப்படி இருக்க? அப்புறம் நாளை காலைல தூங்கவிடாமத் தோட்டத்துக்கு இழுத்துட்டு வந்து அவ அதச் சொன்னா, இவ இதைச் சொன்னான்னு புலம்பின... மகளே... அக்கான்னுகூட பார்க்க மாட்டேன். கொன்னுருவேன் பார்த்துக்க" விரல் காட்டி எச்சரித்த தம்பியை அசட்டையாகப் பார்த்தாள் மோகனமலர்.

"டேய்... அவளுக எல்லாம் பொறாமையில பேசுறாங்கடா. அதையெல்லாம் நினைச்சு ஃபீல் பண்ண கூடாதுடா" தன்னை சமாதானப்படுத்திக் கொண்டே கிண்ணத்தைக் காலி பண்ணிக்கொண்டு இருக்கும் அக்காவைப் பார்த்து நெஞ்சைப் பிடித்துக் கொண்டான் அவள் தம்பி.

"டேய்... என்னடா ஆச்சு?" காலிக் கிண்ணத்தை மனோன்மணியிடம் கொடுத்துக் கொண்டே கேட்ட அக்காவைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டான் அகிலேஷ்.



"வேண்டாம்க்கா. இதுக்கு மேல ஒரு வார்த்தை கூடப் பேசாதே. அதைத் தாங்குற சக்தி என் இதயத்துக்கு இல்ல. ஒரு மணி நேரத்துல என்னை ஹார்ட் பேஷண் டாவே மாத்திட்டே. நீயெல்லாம் நல்லா வருவக்கா" கை உயர்த்தி வாழ்த்திய அகிலேஷின் பின்னந்தலையில் ஓங்கித் தட்டினாள் மனோன்மணி. அதைப்பார்த்து வாய் பொத்தி சிரித்துக் கொண்டே பாட்டியின் பின்னால் மறைந்து கொண்டாள் மலர்.

# 12



காலை எழுந்தவுடன் வேகமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அவசரமாக மகனைக் காண விரைந் தாள் லட்சுமி. ஏற்கனவே மூணாறுக்கு வரமாட்டேன் என்று பிடிவாதம் செய்தவன், இரவில் தூங்கினானோ இல்லை தூங்காமல் விழித்ததினால் டென்ஷனாக இருக்கிறானோ என்று பயந்துகொண்டே அறைக் கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் நுழைந்தவள் கோகுல் வயிற்றைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் சுருண்டிருப்பதைப் பார்த்து பதறி கதவைப் பூட்டிவிட்டு வேகமாக அவனிடம் ஓடினாள்.

"ஐயையோ... கோகுல்... என்னாச்சுப்பா வயிறு வலிக்குதாப்பா? ஏதாவது ஹாஸ்பிடல் வேணும்னா போகலாமா?" பதறியபடி அவனை நெருங்கிப் பார்த்தவள் அவன் வயிற்றைப் பிடித்தபடி சிரித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்து வியந்து நின்றாள்.

"ஹா... ஹா... ஹா... அம்மா... உட்காருங்க. ஹா ஹா... என்னால சிரிப்பை அடக்கவே முடியலம்மா. ஹா... ஹா..." வயிற்றைப் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் வழியச் சிரித்தான் கோகுல்.

"என்ன கோகுல்? நீ இப்படிச் சிரிச்சு நான் பார்த்ததே இல்லையேப்பா! என்னப்பா ஆச்சு..."

"... ஹா..."

"டேய்! என்னன்னு சொல்லிட்டுச் சிரிடா. தெரிஞ்சா நானும் சிரிப்பேன்ல. கோகுல்... டேய் கண்ட்ரோல் யுவர் செல்ப். வயிற்று வலி வந்துரும் கோகுல். டேய்... இப்ப சிரிப்பை நிறுத்தப் போறயா இல்லையா?"

அன்னையின் குரலில் இருந்த கோபத்தில் சிறிதளவு சிரிப்பைக் குறைத்துக் கொண்ட கோகுல் கட்டிலில் எழுந்து அமர்ந்து தலைகாணியை மடியில் வைத்து கையூன்றிக் கொண்டாள்.

"இப்பச் சொல்லு. என்ன ஆச்சு? ஏன் இப்படிச் சிரிக்கிற?"

"அதுவா மம்மி... கொஞ்ச நேரத்துக்கு முன்னால இந்த ஜன்னலின் அந்தப்பக்கம் ஒரு டிராமா நடந்தது மம்மி. சூப்பர் காமெடி மம்மி. நீங்க கொஞ்சம் முன்னால வந்திருந்தா பார்த்திருக்கலாம். நீங்க மிஸ் பண்ணிட்டிங்க" கூறிய கோகுலைப் பார்த்து புருவங்கள் சுளித்தாள் லட்சுமி.

"டிராமாவா... என்னடா சொல்ற? கனவு எதுவும் கண்டியா?"

"கனவா? போங்க மம்மி. இங்க வாங்க. நான் சொல்றேன்..." கூறிக்கொண்டே அன்னையை அருகில்



இழுத்து ஜன்னலின் வெளியே காட்டிய கோகுல் நடந்ததை விவரிக்க ஆரம்பித்தான். அதை கேட்டவுடன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிப்பது லட்சுமியின் முறையானது.

சிரிக்கும் அன்னையை பார்த்த கோகுலின் மனம் மிருதுவானது. அவன் மென்மையான புன்னகையுடன் தாயைப் பார்த்தான்.

"நீங்களும் இப்படிச் சிரிச்சதே இல்லையேம்மா? இப்படி மனம் விட்டுச் சிரித்து எத்தனை வருடங்கள் ஆகியிருக்கும்?" கேட்ட மகனை நிமிர்ந்த பார்த்தாள் லட்சுமி.

"இப்பத் தெரியுதா கோகுல்? உங்க அப்பாவும் நானும் சொன்னது இதை மனதில் வைத்துத்தான். இப்படிப்பட்ட மனிதர்களின் மத்தியில் வாழ்ந்தால் தான் வாழ்க்கை நிறைவுபெறும் கோகுல். இந்த வாழ்க்கைதான் அழகானது.":

"உண்மைதான் மம்மி. உங்களுடைய வார்த்தைகளை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கறேன். இந்த வாழ்க்கைதான் மனதுக்கு நிறைவைத் தருகிறது."

"நிலவின் ஒளியில் வரும் குளிர்ச்சிதான் மனதிற்கு இதமாக இருக்கும் கோகுல். மின்மினிப் பூச்சிகளின் ஒளியில் இந்தக் குளுமையும் மன நிறைவும் கிடைக்காது."

"யெஸ் மம்மி. நீங்க சொல்வது மிகவும் உண்மையான வார்த்தை. நானும் அதை உணர்கிறேன்" தனது வார்த்தைகளை மறுத்துப் பேசாத மகனின் மன மாறுதல்

வியப்பையும் ஏற்படுத்த லட்சுமிக்கு எந்தவிதமான வில்லை.

"உணர்ந்தால் மட்டும் போதாது கோகுல். அந்த விட்டில் பூச்சிகளை எரித்து விடும் சூரியனாக நீ வாழும்போது தான் இப்படிப்பட்ட வாழ்க்கை உனக்கு நிரந்தரமாக நிலைக்கும். நான் சொல்வது புரிகிறதா?" மென்மையாகக் கேட்டாள் லட்சுமி. அன்னையின் வார்த்தைகளின் உண்மைப்பொருள் உணர்ந்து தலை குனிந்தான் கோகுல்.

"நான் உன் அம்மாடா. என் முன்னால் நீ தலைகுனிய வேண்டிய அவசியம் இல்லைப்பா. என் பிள்ளையின் தலை யார் முன்னாடியும் குனியக்கூடாது என்பதுதான் என் வாழ்நாளின் லட்சியமே. ஆனால் உன்னோட இன்றைய நிலைக்கு நானும் ஒரு காரணமோ என்று என் மனச்சாட்சி என்னைக் கொல்லுது கோகுல்" அன்னை யின் துன்பத்தைப் பார்த்து பதறினான் கோகுல்.

"என்னம்மா இப்படிப் பேசறீங்க? உங்களைப் போன்ற பெற்றவர்களைப் பெற்றதற்கு நான் புண்ணியம் பண்ணி இருக்கணும்மா."

"இல்லை கோகுல். நாங்க எங்களோட பணம் அந்தஸ்துக்கு தக்கபடி உன்னை ஆளாக்குற ஆசையில பெரிய ஸ்கூல், ஹாஸ்டல், வெளிநாட்டுப் படிப்புன்னு எங்க கைக்குள்ள வச்சு உன்னை வளர்க்காம விட்டது தப்பு கோகுல். எங்களோட பாதுகாப்புல, அரவணைப்புல உன்னை வச்சு வளர்த்திருந்தால் நீ இப்படித் தடம் மாறி வளர்ந்திருக்க மாட்டேயில்ல" அன்னையின் அருகில்



அமர்ந்து தன்னுடன் தோள்பற்றி அணைத்துக் கொண் டான் கோகுல்.

"அப்படியெல்லாம் இல்லம்மா. நான் இப்ப சுதந் திரமான முழுமையான மனிதனா வளர்ந்திருக்கேன்னா அதற்கு உங்களோட வளர்ப்புதான் காரணம் மம்மி. இப்ப நான் வாழற வாழ்க்கை நான் வேணும்னு இழுத்துக் கிட்டது. இதை எப்படி கட் பண்ணனும் என்பதும் எனக்கு நல்லாத் தெரியும் மம்மி."

"அப்போ இனிமேல் கெட்ட பழக்க வழக்கத்தை விட்டுவிடுவியா கோகுல்?" ஏக்கத்துடன் கேட்ட தாயின் தலைமேல் கைவைத்து சத்தியம் செய்தான் அவன்.

"பிராமிஸ்மா. உங்க மனசில இவ்வளவு வேதனை இருக்குன்னு எனக்கு இதுவரை தெரியாது. நீங்களும் எனக்கு உணர்த்தலை. ஆனால் இனிமேல் நான் என்னை மாற்றிக்கொள்ள முழு மனத்துடன் முயற்சி பண் றேன்மா."

"நீ உன்னை மாற்றிக்கொள்ள முயற்சித்தால் போதும் கோகுல். முழுமையா இந்த வாழ்வில் இருந்து விடு பட்டுவிடுவ. ஏன்னா நீ கெட்டவன் இல்லை கோகுல். பழக்கதோஷத்தால கெட்டுப் போனவன். எனக்கு உன்மேல நம்பிக்கை இருக்கு."

"உங்க நம்பிக்கை பொய்யாகாது மம்மி."

"அது பொய்யாகாமல் இருந்தால் உன்னோட வாழ்க்கை பொய்யாகாமல் நான் காப்பாற்றிவிடுவேன் கோகுல்" அன்னையின் வார்த்தைகளின் பொருள்

உணர்ந்த கோகுல் அமைதியாக அன்னையின் முகம் பார்த்தான். ஆர்ப்பரிக்கும் கடலைப் போல அலை பாய்ந்து கொண்டு இருக்கும் கோகுலின் உள்ளம் அமைதியான ஓடையைப் போல சீரானது. அதை மேலும் சீராக்கும் முயற்சியில் முழுமையாகப் போராட வேண்டிய தருணம் வந்துவிட்டதை உணர்ந்த லட்சுமி போராடத் தயாரானாள்.

# 13

காலைக் காபியுடன் லட்சுமியைத் தேடிய மனோன்மணியின் கண்கள் அவள் மாடிப் பால்கனியில் தூரத்து மலை முகடுகளை வெறித்தபடி நின்றிருப்பதைப் பார்த்து யோசனையால் சுருங்கியது. அவர் லட்சுமியை நெருங்கி தோளைத் தொட்டு அழைத்து காபிக் கோப்பையை அவள் கையில் வைத்துவிட்டு அங்கு இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார். அதைப் பார்த்த லட்சுமி, மனோன்மணியின் அருகில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு அவருக்கு எதிராக அமர்ந்து கொண்டாள்.

''அம்மா, நான் உங்ககிட்டக் கொஞ்சம் தனியாப் பேசணும்னுதான் இங்க வந்து நின்னுக்கிட்டு இருந்தேன்.''

''அது தெரிஞ்சு தான் நான் இங்கயே உட்கார்ந்துட்டேன் லட்சுமி.. என்கிட்ட என்ன பேசணுமோ



தாராளமாப் பேசு. உனக்கு அதுக்கான முழு உரிமையும் இருக்கு.''

''எனக்கும் அது தெரியும்மா. அந்த உரிமையில தான் நான் இங்க வந்திருக்கேன். என்னையும் உங்க வயித்துல பொறந்த மகளா நினைச்சு நான் கேட்குறத கொடுப்பீங்களாம்மா?''

''நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நீயும் என் மகதான்மா. ஆனா உனக்கு வேண்டியதை கொடுக்கற சக்தியை அந்த ஆண்டவன்தான் எனக்குக் கொடுக்கணும்.''

''உங்களால முடிஞ்சதைத்தான் கேட்பேம்மா. அதுவும் இந்த விசயத்தை வீட்டுப் பெரியவங்களா உங்களோட விருப்பத்தைக் கேட்டுவிட்டுத் தான் ஆரம்பிக்கணும்.''

''சொல்ல வர்றதை நேரடியாவே சொல்லு லட்சுமி. நாம என்ன அன்னியமா அசலா?'' கேட்ட மனோன்மணியின் உள்ளம் அவள் கேட்கப் போவதை உணர்ந்தே இருந்தது.

முதல் நாள் இரவு கோகுலநாதனைப் பார்த்த கணம முதல் அவரது உள்ளம் ஊசலாடத் துவங்கியது உண்மைதான். ஏனெனில் கோகுல் ஆறடி உயரத்தில், கோதுமை நிறமும், திடகாத்திரமான உடலழகும், கண்ணைக் கவரும் முக அழகும் கொண்ட ஆணழகனாகத் திகழ்ந்ததைக் கண்ட மனோன்மணியின் உள்ளம் தன் பேத்தியையும் கோகுலையும் இணைத்து வைத்துப் பார்த்தது. பார்ப்பவரின் கண்கள் பட்டுவிடும் பொருத்தத்துடன் இருந்த ஜோடிப் பொருத்தம் மனோன்மணியின் உள்ளத்தை அசைத்தது. மேலும் லட்சுமி,

ரெங்கநாதன் தம்பதியினரின் குணத்தைப் பற்றியும் மனோன்மணி நன்றாக அறிவார். அவர்கள் வீட்டிற்கு மருமகளாகப் போகும் பெண்ணை தங்களது சொந்த மகளாக எண்ணித் தாங்கும் குணம் கொண்டவர்கள் அவர்கள் என்பதை உணர்ந்திருந்த மனோன்மணி தன் பேத்தியின் மென்மையான குணத்திற்கு, அவளைத் தாங்கும் மாமியார் மாமனாராக இவர்கள் இருவரும் இருப்பார்கள் என்ற எண்ணத்தில் உவகை கொண்டார்.

ஒருவரைப் பார்த்த கணத்தில் எடைபோட்டு விடும் சாதுர்யம் கொண்ட மனோன்மணியின் கண்களுக்குக் கோகுல் தீயவனாகத் தெரியவில்லை. பழக்க தோஷத் தால் கெட்டுப் போயிருப்பானோ என்ற எண்ணத்துடன் அவனை அளவெடுத்துக் கொண்டு இருந்த மனோன் மணியின் உள்ளம் அவன் நல்லவன் என்று கூறியது. ஆனால் கணபதிக்கு விருப்பமில்லாத ஒன்றில் தானாக இறங்க விருப்பமின்றி மௌனம் காத்தார் அவர்.

''அம்மா, நான் என்னத்தைச் சொல்வது? தலை நிமிர்ந்து பெண் கேட்கும் தைரியம் இல்லாத கோழை யாக என் சூழ்நிலை என்னை நிக்க வச்சு இருக்கே?''

''ஏனம்மா அப்படிச் சொல்கிற? உன்னோட அந்தஸ் துக்கும் குணத்துக்கும் நீ என்னிக்குமே தலை நிமிர்ந்து நிற்கலாம்மா.''

''அதெல்லாம் இல்லைம்மா. நீங்க சும்மா ஒப்புக்குச் சொன்னாலும் உண்மைன்னு ஒண்ணு இருக்கில்ல. என் மகன் பண்ணி வச்சிருக்கிற கூத்துக்கு நான் எந்த முகத்தை வச்சுக்கிட்டு நம்ம மோகனாவைக் கேட்பேன்? ஆனா ஒண்ணும்மா... என் மகன் பழக்க வழக்கம்தான்



அவனைக் கெட்டவனா காட்டுதேயொழிய அவன் குணத்தால கெட்டவன் இல்லம்மா. இதை நான் எந்த கோயில்ல நின்னும் சத்தியம் கூடப் பண்ணுவேன்'' கூறிய லட்சுமியின் வாயில் கைவைத்துப் பொத்தினார் பெரியவள்.

''என்ன லட்சுமி இது? இப்படியொரு வார்த்தையைச் சொல்லிட்டே? நீ சத்தியம் செய்தால் தான் உண்மை ஆகுமா? லட்சுமி வாயில் இருந்து பொய்யான வார்த்தை வராது என்பது எனக்குத் தெரியும்மா. கோகுலை நான் கண்காணிச்சுக்கிட்டு தான் இருக்கேன்... என் மனசுக்கும் அவன் நல்லவனாத்தான் இருக்கான்... ஆனா.''

''ஆனா என்னம்மா? என் மனசுல பாலை வார்க்குற மாதிரி பேசிட்டு இப்ப இழுக்கறீங்களே அம்மா. நான் உங்களைத்தான் மலைபோல நம்பி சென்னையில் இருந்து கிளம்பி வந்திருக்கேன். எனக்கு ஒரு நல்ல பதிலைச் சொல்லி என் பெத்த வயிறைக் குளிர வைங் கம்மா'' மனோன்மணியின் கைபற்றி கண்கலங்கினாள் லட்சுமி.

''லட்சுமி. கண்கலங்காத தாயி. ஒரு செல்வச் சீமானைக் கைப்பிடிச்சு ராணியாட்டம் வாழற நீயி இந்தக் கிழவிகிட்டே கை ஏந்தாறாப்புல பேசி கண்கலங்கலாமா? உனக்கும், உன் மகனுக்கும் ஒரு குறையும் வராது. உன்னை நான் ஒப்புக்கு என் மகள் என்று சொல்லலை. மனப்பூர்வமா உன் அம்மா ஸ்தானத்துல இருந்துதான் சொன்னேன். உன் மனசு கோணாம இந்த நல்ல காரியத்தை நல்ல முறையில் நடத்தணும்னுதான் நான் ஆசைப்படுறேன். ஆனா உன் அண்ணன் கணபதிதான்

கொஞ்சம் சஞ்சலப்படுறான். அதுவும் அவன் மகள் மேல வெச்சிருக்கிற பாசத்தினால் தானேயொழிய உன் மேல எந்தவிதமான கோபத்திலேயும் இல்லை. அவளோட மனசு மாற நாம கொஞ்சம் கால அவகாசம் கொடுக்கத்தான் வேண்டும் மகளே. பதறாத காரியம் என்னிக்கும் சிந்தாம சிதறாம நல்லபடியாத்தான் முடியும்னு உனக்குத் தெரியாதா?''

''எனக்கு நீங்க சொல்றது எல்லாம் புரியுதும்மா. ஆனா மோகனமலர் என்னிக்குப் பிறந்தாளோ, அன்னிக்கு முடிவான கல்யாணம் இதுன்னு உங்களுக்கே நல்லாத் தெரியும். நாங்க மோகனாவை அன்றிலிருந்து இன்னி வரைக்கும் எங்க மருமகளாத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கோம். அண்ணன் வேணுமின்னா அதையெல்லாம் மறந்திருக்கலாம். ஆனா இது என் மகனோட வாழ்க்கை பிரச்சினை. அதனால நான் என் முடிவில் இருந்து மாறமாட்டேன்மா'' தீர்மானமாகக் கூறிய லட்சுமியை தீர்க்கமாகப் பார்த்தார் மனோன்மணி.

''நான் சொல்றேன்னு சங்கடப்பட வேண்டாம் லட்சுமி. கணபதி தயங்குறதிலயும் ஒரு நியாயம் இருக்குல்ல?''

''என்னம்மா நியாயம் இருக்கு? என் மகன் எந்த விதத்தில் குறைச்சலாய் போயிட்டான்? அவனோட பழக்கவழக்கம் எல்லாம் வயசுக் கோளாறால வந்ததும்மா. அதையும் உங்ககிட்ட மறைக்காம மனசு மறுகித்தான நான் பொண்ணு கேட்கறேன்? அப்படி இருக்கும் போது நீங்க அவனை குறைவாப் பேசலாமா? என் மகன் இன்னிக்கு காலையில் என் தலையில் அடிச்சு சத்தியம் செய்தான்மா. என்னால அதை நம்பக்கூட



முடியல. ஆனா அவன் சொன்ன வார்த்தைகள் மனப்பூர்வமானவைம்மா. அதனோட பலாபலன் என்னன்னு இனிவரும் நாட்கள்ல கண்டிப்ப நாம எல்லோரும் உணருவோம். ஆனா அப்படி உணரும்போது காரியம் கைமீறிப் போயிருந்து, மோகனா இன்னொரு வீட்டுக்குப் போயிட்டா நாங்க இவ்வளவு காலம் வாழ்ந்ததுக்கு அர்த்தமே இல்லாமல் போகாதா?'' மிகுந்த வருத்தத்துடன் பேசிய லட்சுமி மனோன்மணியின் மடிசாய்ந்து கண்ணீர் வடிக்க ஆரம்பித்தாள். அவளது கண்ணீரால் மனோன்மணியின் மடி மட்டும் அல்லாது மனமும் நனைய ஆரம்பித்தது.

# 14

ஐந்தறிவு படைத்த கோழி கூட தன் குஞ்சுகளை காப்பாற்றுவதற்காக, உயரப் படிக்கும் பருந்துடன் போராடி தயாராக இருக்கும் போது, ஆறறிவு படைத்த லட்சுமி தன் மகனது வாழ்வைக் காப்பாற்றுவதற்காக அனைவருடனும் போராட நினைப்பதில் தவறில்லை என்பதை உணர்ந்த மனோன்மணி எதுவும் பேசாமல் அமைதியாக லட்சுமியின் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டு இருந்தார். சிறிது நேரத்தில் ஆசுவாசம் அடைந்த லட்சுமி தலைநிமிர்ந்து ஒரு தீர்மானத்துடன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''சரிங்கம்மா. அண்ணன் மனசுல என் பிள்ளையைப் பற்றி சஞ்சலம் இருக்கும் போது நான் மட்டும் ஆசைப்

பட்டு எந்தப் பிரயோஜனமும் இல்லை. நாங்க இன்னிக்கு மதியமே எங்க ஊருக்குப் புறப்படுறோம். என்மகன் தலையில என்ன எழுதியிருக்கோ அதன்படி நடக்கட்டும்'' கூறிய லட்சுமியைக் கூர்மையாய்ப் பார்த்தார் மனோன்மணி.

''உன்னை நான் புத்திசாலின்னு நினைச்சேன் லட்சுமி. ஆனா நீ இப்படிக் கூமுட்டையா இருக்கியே?''

''என்னம்மா சொல்றீங்க? நான் எந்த வகையில் கூறில்லாமப் போயிட்டேன்?''

''அப்புறம் எந்த வகையில் நீ புத்திசாலின்னு நிரூபிச்சுட்ட? ஒரு புழு கூட தனக்கு ஒரு ஆபத்துன்னா தற்காப்புக்காகப் போராடுகிறது. ஆனா நீ உன் புள்ளையோட வாழ்க்கைக்காக எதுத்து நின்று போராடாம, அதுக்கான முயற்சிகூடப் பண்ணாம ஊருக்குக் கிளம்ப ரெடியாகிட்ட? இதுதான் உன் சாமர்த்தியத்தில் லட்சணமா?''

''என்னை என்னம்மா பண்ணச் சொல்றீங்க? அண்ணன்தான் என் புள்ளைய சந்தேகத்தோட பார்க்கிறாரே?''

''அவன் சந்தேகப்பட்டா? நீ அப்படியே விட்டு விடுவியா? அப்படியெல்லாம் இல்லன்னு நிரூபிச்சுக் காட்டு.''

''இதெல்லாம் உடனே நிரூபிக்கக் கூடிய காரியமா? அதுக்கான காலநேரம் வரவேண்டாமா? நட்டவுடனே நம்ம வீட்டுக் கொடி பூ பூக்கணும்னு எல்லோருக்கும் ஆசையாத்தான்மா இருக்கும். ஆனா அது நடைமுறைக்கு சாத்தியப்படுமா?''



''பேசுறது எல்லாம் வியாக்கியானமா நல்லாத்தான் இருக்கு லட்சுமி. ஆனா உன்னோட செயல்பாடுதான் ஒண்ணும் சரியில்லாம இருக்கு'' அனுபவசாலியான மனோன்மணி லட்சுமியிடம் நேரடியாக கூறிவிட்டார்.

''இப்ப நான் என்னதான் செய்யட்டும்? எனக்குன்னு எடுத்துச் சொல்ல பெத்தவங்க, பொறந்தவங்க யாருமில்லாத அநாதை சிறுக்கியா போயிட்டேன் நான். அதனால தான் நான் உடன்பிறப்பா நினைச்ச எங்க கணபதி அண்ணனே என்னை வேற்றுமையா நினைச்சுட்டாரு...?'' புலம்பிய லட்சுமியின் வார்த்தைகளை கோபமாய் இடைமறித்தார் மனோன்மணி.

''இங்க பாரு லட்சுமி. இன்னொரு தடவை இப்படி அநாதை கிநாதைன்னு புலம்பிகிட்டு இருந்தா ஓங்கி அறைஞ்சேபுடுவேன். இப்ப என்ன நடந்துருச்சுன்னு இவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் பேசற?'' மிக உரத்த குரலில் லட்சுமியை கண்டித்துக் கொண்டு இருந்த மாமியாரின் குரல் கேட்டுப் பதறி ஓடிவந்தாள் அகல்யா.

''என்னங்க அண்ணி? ஏன் கண் கலங்கி நிக்கறீங்க? என்னாச்சு அத்தை... அண்ணியை ஏன் திட்டிக்கிட்டு இருக்கீங்க?'' வேகமாக வந்து லட்சுமியின் கைப்பற்றி நின்ற அகல்யாவை முறைத்தாள் பெரியவள்.

''நீயென்ன அகல்யா... என்னத்த கன்னையா மாதிரி. என்னாச்சு என்னாச்சுன்னுட்டு இருக்க? உங்க அண்ணி எதை நெனைச்சு மறுகறான்னு நீயே கேளு'' மாமியாரின் வார்த்தைகளைக் கேட்ட அகல்யா கேள்வியால் லட்சுமியை நோக்கினாள்.

''நான் எதைப்பத்தி சொல்றது அகல்யா? சென்னை யிலே இருந்து கிளம்பறபோது உங்க அண்ணன் கிட்ட வீறாப்பா பேசிட்டு வந்துட்டேன். இங்க வந்து பார்த்தா நானே அந்நியப்பட்டுல்ல நிக்கறேன். இதுல நான் யாரைக் குறைசொல்லி என்ன பண்ண? எல்லாம் எங்க தலையெழுத்துன்னு நினைச்சு விலகி போறேன்னு சொன்னா அதுக்கும் அம்மா என்னைத் திட்டறாங்க.''

''நீங்க எதைப்பத்தி அண்ணி பேசறீங்க? எனக்குத் தலையும் புரியல, காலும் புரியல. பேசுறத கொஞ்சம் தெளிவாத்தான் பேசுங்களேன்'' புரியாமல இருவரையும் பார்த்த மனோன்மணி தாவாங்கட்டையில் கைவைத்து அதிர்ந்தார்.

''சரியான விடாக்கண்டியும், கொடாக்கண்டியும் மால்ல இருக்கீங்க? நீங்க பேசி, தெளிவாகி, புரிஞ்சு அதுப்படி நடக்கறதுக்குல்ல என் பேத்தி கிழவியால்ல ஆகிடுவா? அப்புறம் அவளுக்கு அறுபதாம் கல்யாணம் தான் நடத்தணும். நல்லாக் கதையைக் கெடுத்தீங்க ரெண்டுபேரும்'' மாமியாரின் பேச்சுக்கு வாய் திறக் காமல் சிரித்துக் கொண்டாள் அகல்யா. அவளுக்கும் கோகுலுக்கும் மோகனமலரைக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்கிற ஆசை உள்ளூர இருந்தது.

'சின்ன வயசுல அப்படி இப்படி இருந்தாலும், தன் பொண்டாட்டின்னு வந்திட்டா எல்லாம் சரியாப் போயிரும்' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டாலும் கணவரை எதிர்க்கும் தைரியம் இல்லாமல் வாளா யிருந்தாள் அவள். இப்பொழுது மனோன்மணியே அதைப்பற்றிப் பேச்சை ஆரம்பித்து விட்டதை அறிந்து



உள்ளூர மகிழ்ந்து போனாள் அகல்யா. அவள் ஆசை யுடன் லட்சுமியின் கரம் பற்றிக் கொண்டாள்.

''என் மகள் பொறந்த உடனே எங்க அண்ணன் ரெங்கநாதன் எனக்கு மருமகள் பொறந்திருக்காடா அப்படின்னு தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழட்டி அவ கழுத்தில போட்டாங்க. அது இன்னமும் என் கண்ணுக்குள்ளயே இருக்குண்ணி.''

''நீ அதை நினைவில் வச்சு என்ன செய்ய அகல்யா. ஒரு கை தட்டினா ஓசை வருமா? ரெண்டு கையும் சேர்ந்து தட்டினாத்தான ஓசை வரும். எங்க அண்ணன் விருப்பப்படாம நாமளா இந்தக் கல்யாணத்தப்பத்தி முடிவெடுக்க முடியுமா அகல்யா? அதச் சொன்னா அம்மா புரிஞ்சுக்காம என்னை திட்டறதிலேயே குறியா இருக்காங்க...'' குறைப்பட்டாள் லட்சுமி.

''சரி லட்சுமி. நான் தேவையில்லாம ஒண்ணத் திட்டுனதாவே வெச்சுக்க. அது ஒரு பக்கம் இருக்கட்டும். இப்ப உன் அண்ணன் தனக்கு விருப்பம் இல்லைன்னு உன்கிட்ட நேராச் சொன்னானா?''

இல்லை என்று தலையாட்டினாள் லட்சுமி.

''இல்லேல்ல? அப்புறம் எதுக்கு இந்தக் குதி குதிக்கிற? நான் ஒரு போக்கத்த சிறுக்கி. என் மனசுக்குத் தோணினதை சொன்னேன். யார் என்ன சொன்னாலும் நீ நம்பிடறதா? அது உண்மையான்னு விசாரிச்சுத் தெரிஞ்சுக்க மாட்டியா? அதுக்கான முயற்சிகூடப் பண்ணாம கிளம்பினா உன்னைத் திட்டாம இடுப்பில தூக்கி வெச்சுக் கொஞ்சுவாகளா?''

''சொல்றது நீங்கம்மா. உங்க வார்த்தை என்னைக்கு பொய்யா இருந்திருக்கு.''

''அப்படியே இருக்கட்டுமே. அதை அந்தக் காதுல வாங்கி இந்தக் காதுல விட்டுட்டு நீ உன் காரியத்தை கவனிப்பதில் இல்ல கண்ணாயிருக்கணும்?''

''மனசில்லாம இருக்கற அண்ணன் கிட்டே.... நான்... என்ன...'' தயங்கிய லட்சுமியை இழுத்து தன் எதிரில் அமரவைத்தார் மனோன்மணி.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால நீ ஒரு வார்த்தை சொன்னியே? கணபதிய உன் உடன்பிறப்பா நினைச்சேன்னு? அது பொய்யா?'' கோபமாகக் கேட்ட மனோன்மணியின் வார்த்தைகளில் தன் பேத்தியை வாழவைத்து விடும் வெறி இருந்தது. தன் பேத்தியின் தெய்வீக குணம் கோகுலை மாற்றிவிடும் என்ற நம்பிக்கை இருந்தது. அவரது எண்ணம் உண்மையாகும் என்று அருகிலிருந்த கோவிலின் மணி ஒலித்து உறுதியளித்தது.

## 15



போர்க்களத்தில் நின்றுகொண்டு அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசித்த கண்ணனாய் மனோன்மணி லட்சுமியின் கண்களுக்குத் தெரிந்தார். அவள் மிகக் கவனத்துடன் மனோன்மணியின் வார்த்தைகளை மனதில் வாங்கிக் கொண்டிருந்தாள்.



''கேட்டதுக்கு பதில் சொல்லு லட்சுமி? அது உண்மையா பொய்யா?''

''சத்தியமான உண்மைம்மா.''

''அப்ப அந்த உரிமையோட போய் கணபதிகிட்ட பொண்ணு கேளு. தயங்குறதுக்கு அவனுக்கு உரிமை இருக்குன்னா, கேட்குறதுக்கு உனக்கும் உரிமை இருக்கு. நீ உன் பிள்ளையோட நல்ல நடத்தையை நிரூபிக்க அவகாசம் வேணும்னு சொன்னேன்ல. அந்த அவகாசத்த அவன் வாயிலயே சொல்ல வைய்யி. அப்புறம் நீ பயப்படுற மாதிரி எதுவும் நடக்காதுல்ல'' மனோன்மணியின் அனுபவம் மிக்க வார்த்தைகளின் பலத்தால் தைரியம் பெற்றாள் லட்சுமி.

''சரிங்கம்மா... நீங்க சொல்கிறபடியே நான் நடக்கறேன்'' கூறிய லட்சுமியை இடைமறித்தார் மனோன்மணி.

''இங்கப் பாரு லட்சுமி, ஆயிரம்தான் நான் உன் மேலயும் ரெங்கநாதன் மேலயும் பாசம் வெச்சு இருந்தாலும், என் பேத்தியோட வாழ்க்கையைப் பணயம் வெக்கிற அளவுக்கு நான் யோக்கியம் இல்லை. இது என் பேத்தியின் வாழ்க்கைப் பிரச்சனை. நீ அவகாசம் கேட்கறதும், உங்க அண்ணன் அவகாசம் கொடுக்கறதும் உங்க பாடுபத்து. அதில் நான் தலையிடமாட்டேன். ஆனா அந்த அவகாசத்துக்குள்ள கோகுல் திருந்தி வரலேன்னா, கணபதியே ஒத்துக்கிட்டாலும் நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். பிடிக்காத புருஷனோட வாழற தண்டனையை என் பேத்தி, அந்தப் பச்ச மண்ணுக்குக் கொடுக்கறதவிட நான் செத்தே

போயிடுவேன்'' கண்கள் கலங்க கூறிய மனோன் மணியை லட்சுமியும், அகல்யாவும் இருபுறமும் அணைத்துக் கொண்டார்கள்.

''அம்மா, என் மகன் இனிமேல்தான் திருந்தணும் என்றில்லை. இப்பவே அவன் மாறித்தான் இருக்கான். அந்த நம்பிக்கையில் தான் நான் உங்க கிட்ட பேசவே ஆரம்பிச்சேன். என் பேச்சு உண்மைன்றதை எதிர்காலத் தில் நீங்க கண்கூடா பார்ப்பீங்க. இது சத்தியம்.''

''உன் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு லட்சுமி. ஆனா அதைவிட என் பேத்தி மேல என் உசுரே இருக்கு. அது வாழறத பார்க்கத் தான் நான் உயிரைக் கையில பிடிச்சுட்டு காத்து இருக்கேன். ரொம்பக் காலம் தாழ்த்தி என்னைத் தர்ம சங்கடப்படுத்தி விடாதே.''

''இல்லம்மா. இனிமே காலம் கடத்த மாட்டேன். உங்க மருமகன் நாளை மறுநாள் இங்க வந்துடுவார். அவர் வந்தவுடன் அவரையும் வெச்சுக்கிட்டு அண்ணன் கிட்டப் பேசிடுறேன்.''

''ஆமா. அதுதான் முறை. அப்படியே செய்யி'' என்று எழுந்து நடந்த மனோன்மணியைத் தொடர்ந்த லட்சுமிக்கும், அகல்யாவுக்கும் மனம் நிறைந்து இருந்தது.

''கோகுல்'' அறைக்கதவு மெதுவாகத் தட்டப்பட கதவைத் திறந்தான் கோகுல்.

''குட்மார்னிங்'' வெளியே நின்றிருந்த கணபதி சிநேகமாகப் புன்னகைத்தார். பதிலுக்குத் தானும் புன்னகைத்த கோகுல் அறையை விட்டு வெளியே வந்தான்.



''குட்மார்னிங் அங்கிள்.''

''நைட் நல்லாத் தூங்குனீங்களா இல்லையா தம்பி? புது இடம் அதனால சரியா தூங்கியிருக்க மாட்டீங்க.''

''என்னை இப்படியெல்லாம் மரியாதை கொடுத்து கூப்பிடவேண்டிய அவசியம் இல்லை அங்கிள். சும்மா நீ, வா, போன்னே கூப்பிடுங்க'' அடக்கத்துடன் கூறிய கோகுலை வியப்புடன் பார்த்தார் கணபதி. சென்னை யில் தான் பார்த்த அமரிக்கைக்கும் இவனது அடக்கத் திற்கும் சம்பந்தமே இல்லையே என்று மனதில் நினைத்த கணபதி அதனை வெளியில் காட்டிக் கொள் ளாமல் புன்னகைத்தார்.

''சரிப்பா கோகுல். இனிமே அப்படிக் கூப்புடல'' உடனடியாக ஒப்புக்கொண்டு அதனைச் செயலிலும் காட்டிய கணபதியை கோகுலுக்கு மிகவும் பிடித்துப் போனது.

''என்னங்கண்ணா... என்ன சொல்றான் உங்க மருமகன்?'' விளையாட்டாகக் கேட்டுக்கொண்டே சிரித்தபடி வந்து நின்ற லட்சுமியை நேரடியாகப் பார்க்க முடியாமல் அவள் கூறிய 'மருமகன்' என்ற வார்த்தை கணபதியைச் சங்கடப்படுத்தியது.

''ஒண்ணுமில்லை மம்மி. சும்மாத்தான் பேசிக்கிட்டு இருந்தோம்'' அன்னை கூறிய மருமகன் என்ற வார்த்தையால் ஏற்பட்ட சந்தோஷத்தில் வேகமாக பதில் கூறினான் கோகுல். அவனது மலர்ந்த முகமே அவனது எண்ணத்தை அன்னைக்கு எடுத்துக் கூற மகிழ்ந்தாள் லட்சுமி. அவள் கணபதியின் முக மாற்றத்தை கண்டு கொள்ளாதவள் போல அவர் முகத்தை ஏறிட்டாள்.

''என்னங்கண்ணா? எதுவும் பேசாம அப்படியே நின்னுட்டீங்க?''

''இல்லம்மா. நான் கோகுலை சாப்பிடக் கூட்டிப்போக வந்தேன். அதான் சும்மா பேசிக்கிட்டு இருந்தோம்'' வேகமாகச் சமாளித்தார் கணபதி.

''நானும் அதுக்குத்தான் அண்ணா இவனைத் தேடி வந்தேன். சாப்பாடை எல்லாம் டேபிளில் எடுத்து வெச் சாச்சு. ஆறிப்போகுறதுக்குள்ள நீங்களும் புள்ளைகளும் சாப்பிட்டு விடலாமே?''

''என்னம்மா இது? நான்தான் உங்களை உபசரிக் கணும். நீ என்னடான்னா...''

''நம்ம வீட்டுல நம்மளை யாருண்ணா உபசரிக் கணும். இது எங்க அண்ணன் வீடு. ஏன் எனக்குத் தாய்வீடுன்னு கூட சொல்லலாம்'' கூறிய லட்சுமியின் பாசமான வார்த்தைகள் கணபதியின் உள்ளத்தைத் தொட்டது.

''கண்டிப்பாம்மா'' வேகமாக ஆமோதித்த அவர் கோகுலைக் கூட்டிக்கொண்டு டைனிங் டேபிளுக்கு விரைந்தார்.

தன் முன் வைத்த உணவினை கடமைக்காக உள்ளே தள்ளிய கோகுலின் பார்வை ஹால் முழுவதுமாக சுற்றி யலைந்தது. காலையில எழுந்தவுடன் தன் கண்களை நிறைத்த மோகன உருவத்தை மறுபடியும் பார்ப்பதற்காக அவனது உள்ளம் அலை மோதியது. மகனின் பார்வை சொல்லிய செய்தியை அறிந்த லட்சுமியும் வேகமாக மோகனமலரைத் தேடினாள். ஆனால் அவர்கள்



இருவரும் எதிர்பார்த்த மோகனமலரின் உருவம் கண் ணில் தென்படவே இல்லை. ஏமாற்றத்தில் சுருங்கிய முகத்தை பிறர் அறியாவண்ணம் மறைத்துக் கொண்டு உண்டு முடித்து எழுந்தான் கோகுல்.

''மம்மி. வாஷ்பேசின் எங்க?'' மெல்லிய குரலில் கேட்ட மகனுக்கு அவனுடைய வலதுபுறம் இருந்த வாஷ்பேசினைச் சுட்டிக்காட்டினாள் லட்சுமி. வேகமாகச் சென்று கைகழுவித் திரும்பிய கோகுலின் மேல் புயல் போல வந்து விழுந்தான் அகிலேஷ்.

''டேய், நில்லுடா... டேய்'' சிணுங்கலான குரலில் அவனை அழைத்தவாறு அவன் பின்னால் ஓடிவந்த மோகனமலர் புதியவனைக் கண்டவுடன் கன்னங்கள் சிவக்க அப்படியே நின்றுவிட்டாள்.

தன் மேல் விழுந்த அகிலை கீழே விழுந்து விடாமல் நேராக பிடித்து நிறுத்திய கோகுலின் கண்கள் மோக னாவைக் கண்ட இன்ப அதிர்ச்சியில் அவள் முகத்தில் நிலைத்து நின்றது.

'என்ன மென்மையான அழகு! ஒரு பார்வையைக் கூடத் தாங்காமல் எப்படிக் கன்னம் சிவக்கிறாள் பார். இப்படி இருந்தால் அப்புறம் எப்படி இவள்...' மனதிற்குள் பித்துப் பிடித்தவன் போலப் புலம்பிக்கொண்டே அவளைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்த கோகுலைப் பார்க்க முடியாமல் நாணத்தில் சிவந்து நின்றிருந்தாள் மோகனமலர்.

''க்கும்...'' கணபதியின் தொண்டைக் கனைப்பு இருவரையும் தன் நிலைக்கு திரும்ப வைத்தது.

"என்னம்மா மோகனா... என்னை யார்னு தெரியுதா?" பாசமாகக் கேட்டபடி அருகில் வந்த லட்சுமியைப் பார்த்துப் புன்னகைத்தாள் மோகனா.

"தெரியும் ஆன்ட்டி."

"தெரியுமா? எங்கே நான் யார்னு சொல்லு?" வியப்புடன் கேட்டாள் லட்சுமி.

"ரெங்கநாதன் அங்கிளோட வொய்ப் லட்சுமி ஆன்ட்டி" சரியாகக் கூறிய அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்ட அன்னையைப் பார்த்துப் பொறாமைப்பட்டான் கோகுல்.

## 16

"அண்ணா! இது போதுண்ணா? எங்களையெல்லாம் நீங்க மறந்துட்டீங்களோன்னு உள்ளுக்குள்ள ஒரு சந்தேகம் இருந்துச்சு. என் மருமகள் சொன்னதைக் கேட்டவுடன் அந்தச் சந்தேகம் பறந்துபோயிருச்சு. இப்பத்தான் என் மனம் நிம்மதியாச்சு."

"என்னம்மா இது? உனக்கு எப்படி இப்படிப்பட்ட சந்தேகம் எல்லாம் வருது?"

"அப்புறம் வராம என்னண்ணா செய்யும். நீங்க எங்க வீட்டுப்பக்கம் வந்து எத்தனை வருசம் ஆச்சு? அப்பப்ப போன் பண்றதோட சரி."



"ஏம்மா, என்னமோ நீங்க எல்லோரும் இங்க வந்து வருசத்துல பாதி நாள் தங்குற மாதிரி சொல்ற. நீங்களும் அப்படித்தானே?"

"அது... அது உங்க பிரண்டு பண்ற வேலை. எப்பப் பார்த்தாலும் பிசினஸ் தான் அவருக்கு. இப்பக்கூட பாருங்க... நாங்க மட்டும் தான் வந்திருக்கோம். அவர் எப்ப வருவாரோ?"

"அவன் வர்றப்ப வரட்டும்மா. நீங்க நிம்மதியா ஒரு நாலஞ்சு நாள் இங்க தங்கிட்டுத்தான் போகணும். அப்புறம் கோகுல், நாம இப்பப் போய் அந்த எஸ்டேட்டை பார்த்துட்டு வருவோமா. அம்மா லட்சுமி, நீயும் சீக்கிரம் சாப்பிட்டுக் கிளம்பினா, நாம எல்லோரும் போய்ப் பார்த்துட்டு வந்துடலாம்" மோகனமலரைக் கண்களால் விழுங்கிக்கொண்டு இருந்த கோகுல், கணபதியின் குரலில் கவனம்மாறித் திரும்பினான்.

"இல்லை அங்கிள். நாம ரெண்டு பேரும் முதல்ல போய் பார்ப்போம். பிடிச்சு இருந்தா போன் பண்ணி அம்மாவை வரச்சொல்லிக்கலாம்."

"அதுவும் சரிதாண்ணா. சாயங்கால வேளைன்னா எல்லோரும் ப்ரீயா இருப்போம். அப்ப நாம எல்லோரும் சேர்ந்து போய்ப் பார்த்துக்கலாம்" மனதில் மோகனாவை எண்ணிக்கொண்டு கூறினாள் லட்சுமி.

"நம்ம பக்கத்து எஸ்டேட்தாம்மா லில்லி எஸ்டேட். நாங்க எல்லோருமே ஏற்கனவே பார்த்த எஸ்டேட்தாம்மா."

"இல்லங்கண்ணா. இதுவரைக்கு அடுத்தவங்க எஸ்டேட்டாதான பார்த்திருப்பீங்க. முதன் முறையா நம்ம

எஸ்டேட்டாப் பாருங்க. எனக்கு செண்டிமெண்ட்டா நாம எல்லோரும் சேர்ந்துபோய்ப் பார்க்கணும்னு தோணுது.''

''சரிம்மா... அப்புறம் உன் இஷ்டப்படி செய். நாங்க முதல்ல போய் பார்த்துட்டு, பேப்பர்ஸ் எல்லாம் சரியா இருக்கான்னு பார்த்துட்டு போன் பண்றோம் சரியா?''

தன்னைச் சுற்றி நடந்த அத்தனை சம்பாஷணை களுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாதவள் போல் தன் பெரிய அகன்ற விழிகளால் கோகுலைப் பார்த்தும் பாராதவள் போல மனதில் நிறைத்துக் கொண்டு இருந் தாள் மோகனா. சிறிய வயதில் தான் பார்த்த கோகுலா இவன் என்று அவளுக்கு வியப்பாக இருந்தது.

எத்தனையோ அழகான ஆண்களைக் கல்லூரியில் பார்த்துப் பழகியும் சலனப்படாத அவளது உள்ளம் கோகுலின் ஒரே பார்வையில் சலனப்பட்டது. அவனது உருவம், கண்கள், கன்னம், மூக்கு, இதழ்கள் விரியும் போது தெரியும் அழகான பல்வரிசை, முடியைக் கோதிக் கொள்ளும் வலிமையான கைகள் என்று அவனது ஒவ் வொரு அங்கத்தையும், அசைவையும் தனது உள்ளத்தில் சிற்பமாக செதுக்கிக் கொண்டிருந்தாள் மோகனா.

அவனுடைய உள்ளமும் தன் பால் கவரப்பட்டு விட்டதை, அடிக்கடி அவளைப் பார்க்கும் ஆசையான அவனது பார்வை மோகனமலருக்கு உணர்த்தியது. அது உணர்த்திய செய்தியால் தன்நிலை மறந்து இன்பக் கடலில் மிதந்தாள் மோகனா. கணபதியுடன் பேசிக் கொண்டே வெளியேறிய கோகுல், மோகனாவைப் பார்த்து யாரும் அறியாவண்ணம் தலையசைத்துவிட்டு வேகமாக வெளியேறினான். அவனது உரிமையான



தலையாட்டலில் மோகனாவின் உள்ளம் அவனிடம் தஞ்சம் கொண்டது.

சிறியவர்களின் இந்த நாடகத்தைக் கவனிக்காதவள் போல் வீட்டிற்குள் விரைந்தாள் லட்சுமி. அவளது உள்ளம் தன் கனவு நிறைவேறும் நாள் தொலைவில் இல்லை என்று அவளுக்கு எடுத்துரைத்தது. ஆனால் லட்சுமியின் மனம் கணபதியின் சம்மதத்தை எதிர்பார்த்து ஏங்கத் தொடங்கியது. அவள் ரெங்கநாதனுக்கு இங்கு நடப்பதைத் தெரியப்படுத்திவிடும் நோக்கத்தோடு செல்போனைக் கையில எடுத்துக்கொண்டு தனி மையைத் தேடி அகன்றாள்.

கோகுல் வெளியேறியவுடன் அந்த வீடே ஒளி யிழந்து காணப்படுவதைப் போல் தோன்றியது மோகனா வுக்கு. அவள் மனம் சோர்ந்து சோபாவில் சரிந்து அமர்ந்து விட்டாள். உள்ளமோ கோகுல் அவளைப் பார்த்தது, சிரித்தது, அவள்முன் நடந்தது கடைசியாகத் தலை யாட்டிச் சென்றது என்று ஒவ்வொரு கணத்தையும் எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தது. அவள் ஆனந்த மயக்கத்தில் ஆழ்ந்தபடி டிவியை வெறித்து பார்த்தபடி அமர்ந்திருந்தாள். நடக்கும் நாடகத்தை எல்லாம் தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த அகிலேசுக்கு எதுவோ புரிந்தும் புரியாதது போல் மிகக் குழப்பமாக இருந்தது. ஆனால் அவனுக்கு கோகுலைப் பார்த்த நொடியிலே மிகவும் பிடித்துப் போனது.

கோகுலின் நவநாகரீகத் தோற்றமும், அழகான சிரிப்பும், தன் அக்காவ அவன் பார்த்த பாசமான

பார்வையும், அதைப் பார்த்துக் கொண்டிருந்த அகிலைப் பார்த்துக் கள்ளத்தனமாகக் கண்ணடித்துச் சிரித்ததும் என கோகுலின் ஒவ்வொரு செயலும் அவனது ஆண்மையைப் பறைசாற்றுவது போல இருந்ததால் கோகுல் அகிலேசுக்கு ஒரு மானசீக கதாநாயகன் போலத் தென்பட்டான்.

''அக்கா அக்கா!'' தோளைத் தொட்டு உலுக்கிய தம்பியின் செயலால் கனவு கலைய எரிச்சலுடன் அவனைப் பார்த்தாள் மோகனா.

''ஸ்ஸ்... இப்ப எதுக்குடா என்னை இப்படிப் பிடிச்சு ஆட்டின... பார்... கையெல்லாம் வலிக்குது.''

''ம்ம்... கூப்பிடக் கூப்பிடக் காது கேட்காமல் பித்துப் பிடிச்சுப்போய் உட்கார்ந்திருந்தா வேற என்ன செய்வாங்களாம்?'' மிரட்டலாகக் கேட்டான் அகில்.

''நானா பித்துப் பிடிச்சுப் போய் உட்கார்ந்திருந்தேன்? உனக்கு என்ன திமிரா?''

''ஆமாம்மா. பாவமே நம்ம அக்கா இப்படி பேக்கு மாதிரி உட்கார்ந்திருக்கேன்னு பாவப்பட்டுக் கூப்பிட்டேன் பாரு... என்னைச் சொல்லணும்.''

''என்னடா ரொம்ப ஓவரா அலுத்துக்குற? உன்னை யாரு என்னைக் கூப்பிடச் சொன்னது?''

''நானா கூப்பிடலை தாயே. உன் அருமை அப்பத்தாதான் உன்னை கூப்பிட்டு ஏலம் விட்டுக்கிட்டு இருக்கு.''

''அப்பத்தாவா? எப்படா கூப்பிட்டுச்சு?'' கிசுகிசுப்பாக வினவிய அக்காவைப் பார்த்துச் சிரித்தான் அகில்.



''அது ஒரு பத்துத் தடவையாவது கூப்பிட்டு இருக்கும். இங்க மட்டும் வந்து நீ உட்கார்ந்திருந்த கோலத்தைப் பார்த்திருந்திச்சு இன்னிக்குக் கச்சேரி உனக்காகத்தான் இருந்திருக்கும். நான்தான் பாவம் பார்த்து உன்னைக் காப்பாற்றி விட்டேன்'' பெருமையாகக் கூறிக்கொண்டே இல்லாத சட்டைக் காலரை உயர்த்துவது போல நடித்த தம்பியின் கன்னத்தில் முத்தமிட்டாள் மோகனமலர்.

# 17



கோகுலை அழைத்துக்கொண்டு லில்லி எஸ்டேட்டை அடைந்த கணபதியின் மனம் ரெங்கநாதனை ஆயிரத்தி ஒன்றாவது முறையாக திட்டித் தீர்த்தது. கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்து வாங்கப்போகும் சொத்து சம்பந்தமாக சரிபார்க்கும் வேலையை ஒரு சிறுவனிடம் அதுவும் உல்லாசத்திற்குப் பெயர்போன கோகுலிடம் அவர் ஒப்படைத்து இருந்தது கணபதிக்குச் சுத்தமாகப் பிடிக்கவே இல்லை. கணபதி இருந்து பார்த்துக் கொண்டாலும் பொறுப்பானவராக ரெங்கநாதனும் வந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் கணபதிக்கு. நாளை எதிர்காலத்தில் ஏதாவது சிக்கல் வந்துவிட்டால் நண்பனுக்கு என்ன பதில் கூறுவது என்று கணபதி மிகவும் பயந்தார்.

எஸ்டேட் வாசலில் வந்தும் உள்ளே வராமல் திகைத்து நின்ற கணபதியை வியப்புடன் திரும்பிப் பார்த்தான் கோகுல்.

"என்ன அங்கிள்! அங்கேயே தயங்கி நின்னுட்டீங்க?"

"தயக்கமெல்லாம் இல்லப்பா. ஏதோவொரு யோசனையில் நின்று விட்டேன்" கூறிய கணபதியைக் கூர்மையாகப் பார்த்தான் கோகுல்.

"நாங்க இந்த எஸ்டேட்டை... ஸாரி ஸாரி... அங்கிள்... தப்பா நினைச்சுக்காதீங்க. நாம இந்த எஸ்டேட்டை வாங்குவதில் உங்களுக்கு விருப்பம்தானே அங்கிள்" கேட்ட கோகுலைப் பார்த்து வியப்பது இப்பொழுது கணபதியின் முறையாயிற்று.

"ஏன் அப்படிக் கேக்கிற?"

"இல்லை. நாம வீட்டிலிருந்து கிளம்பியதில் இருந்து நான் உங்களைக் கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன். உங்க முகமே சரியில்லை. எதையோ நினைச்சுக் குழம்பற மாதிரி இருந்துச்சு. அதான்..." கேட்ட கோகுலைப் பார்த்த கணபதியின் மனதில் முதல் முறையாக அவன்மேல் சிறிதளவு மரியாதை தோன்றியது.

'பயல் மனிதர்களை எடைப்போடக் கூடத் தெரிஞ்சு வைத்திருக்கானே. பரவாயில்லை' மனதிற்குள் கோகுலை பாராட்டிக்கொண்ட கணபதி அவனை அழைத்துக் கொண்டு எஸ்டேட்டிற்குள் நுழைந்தார்.

"ஹாய் பிரகாஷ். இவர்தான் கோகுல். நாதன் குரூப் ஆப் கம்பெனியின் ஓனரோட ஒரே பையன்" எதிர்பட்ட இளைஞனிடம் சிநேகத்துடன் கைகுலுக்கிய கணபதி அவனிடம் கோகுலை அறிமுகம் செய்து வைத்தார்.



"ஹாய் சார். நான் உங்க கம்பெனிகளைப் பற்றி நிறைய கேள்விப்பட்ட இருக்கேன்."

"தேங்க்யூ சார்" பணிவுடன் கூறினான் கோகுல்.

"இன்பாக்ட் எங்க எஸ்டேட்டை வாங்க நிறைய பேர் போட்டி போட்டாலும் நான் மிஸ்டர் ரெங்கநாதன் மேல வெச்சிருக்கிற மரியாதையாலதான் அவருக்கே இதை கொடுக்கணும்னு முடிவெடுத்தேன். நம்ம சொத்து ஒரு நல்லவர் கைக்கு போனால்தான கொடுக்கிற எங்களுக்கு மனம் நிம்மதியாகும்."

"தேங்க்யூ அகெய்ன் சார். உங்களை மாதிரி நல்லவங்க புகழ்ந்து பேசறதைக் கேட்டால் அப்பா மேல நான் வெச்சிருக்கிற மரியாதை இன்னும் அதிகம் ஆகுது" விநயமாகக் கூறிய கோகுலைப் பார்த்து கணபதிக்கு அவன் மேல் உள்ள மரியாதை மேலும் கொஞ்சம் கூடியது.

"சரி பிரகாஷ். இப்படி நின்னுக்கிட்டே இருந்தா எப்படி. முதல்ல கோகுலுக்கு நம்ம எஸ்டேட்டை சுத்திக் காமிங்க. மத்த பார்மாலிட்டியை எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்."

கணபதி கூறிய வார்த்தைகளை ஆமோதித்த பிரகாஷ் வேகமாகத் தன் ஜீப்பை எடுத்து அவர்களின் அருகில் நிறுத்தினான்.

"ஜீப்பெல்லாம் வேண்டாம் சார். நாம நடந்தே போகலாமே?" கேட்ட கோகுலைப் பார்தது சிரித்தான் பிரகாஷ்.

"மொத்தம் பத்து ஏக்கர் சார். நாம நடந்து பார்க்கணும்னா எத்தனை நாள் ஆகுறது?"

''பத்து ஏக்கர் தானே சார்? என்னமோ பத்துக் கிலோ மீட்டர் மாதிரி சொல்றீங்க. நாம பாஸ்ட்டா நடந்தோம்னா மதியத்துக்குள்ள பார்த்துடலாமே? அதோட நடந்து போனால்தானே நீங்க என்னவெல்லாம் இந்த இடத்தில் சாகுபடி பண்றீங்கன்னு துல்லியமாத் தெரியும். உங்களுக்கு டயர்டா இருந்தா நான் மட்டும் போய்ப் பார்த்துட்டு வந்துவிடவா?'' சிரிப்புடன் கேட்ட கோகுலைப் பார்த்த கணபதிக்கு வியப்பில் கண்கள் விரிந்தன. அவர் வெளிப்படையாகவே கோகுலின் தோள்களைத் தட்டிப் பாராட்டினார்.

''இதில் இப்படி ஒரு கோணம் இருக்குன்னு எனக்கே தெரியலை பார். நானே இதுவரை ஜீப்புல தான் சுத்திப் பார்த்திருக்கேன்.''

''அதனால என்ன அங்க்கிள். நாங்கள்ளாம் உங்க வயசுக்கு வருகிறபோது உங்களையும், டாடியையும் மாதிரி இவ்வளவு சுறுசுறுப்போட இருப்போமாங்கிறது சந்தேகம்தான். அந்த வகையில் நீங்க எங்களுக்கு ரோல் மாடல் அங்க்கிள்'' கோகுலின் வார்த்தைகள் கணபதியின் மனதிற்கு இதமாக இருந்தது.

''நீங்க வேணும்னா ரெஸ்ட் எடுங்க அங்க்கிள். நான் இவரோட போய் சுத்திப்பார்த்துட்டு வந்திடறேன்.''

''அதெல்லாம் வேணாம்ப்பா. ரெங்கநாதன் என்னை நம்பி உன்னை அனுப்பி வெச்சிருக்கான். நான் என்னோட கடமையை மீறக்கூடாதுல்ல'' கேலியாகப் பேசிக்கொண்டே இருவருடனும் இணைந்து தானும் அவர்களுக்கு இணையாக நடக்க ஆரம்பித்தார் கணபதி.



''உங்களை மாதிரி ட்ரூ பிரண்ட் கிடைக்க டாடி ரொம்பக் கொடுத்து வச்சிருக்காங்க அங்க்கிள்.''

''ரொம்ப ஐஸ் வெக்காத கோகுல். ஏற்கனவே மூணாறு குளிர் தாங்க முடியாம அவஸ்தைப்பட்டுக்கிட்டு இருக்கேன்.''

''உங்களைப் பார்த்தா அவஸ்தைப்படற மாதிரி தெரியலியே. என்ஜாய் பண்ற மாதிரியில்ல தெரியுது?''

இருவரும் வெகுநாள் பழகிய சிநேகிதர்களைப் போல அரட்டை அடித்துக்கொண்டே நடந்ததில் கணபதிக்கு களைப்பே தெரியவில்லை. இடையிடையே கோகுல் அந்த எஸ்டேட் விவரங்களை பிரகாஷிடம் கேட்டு அறிந்து கொள்வதையும், அவன் கூறுவதை நுட்பமாக கேட்டு மனதில் ஏற்றிக் கொள்வதையும் கவனித்த கணபதிக்கு கோகுலின் மேல் தனி மதிப்பே தோன்றி விட்டது.

எஸ்டேட் விவரங்களை மட்டும் அல்லாது அங்கு வேலை செய்யும் வேலையாட்களின் விவரங்களையும் அக்கறையுடன் விசாரித்து அறிந்து கொண்டான் கோகுல். வேலையாட்களின் பெயர் விவரம், மற்றும் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் விவரம், மற்றும் அவர்களின் நலனிற்காக, ஒரு முதலாளியாக பிரகாஷ் குடும்பத்தினர் செய்துள்ள ஏற்பாடுகள் என்று ஒவ்வொரு விசயத்தைப் பற்றியும் அக்குவேறு ஆணிவேறாக பிரகாஷிடம் கேட்டு அலசிவிட்டான் கோகுல். அவனுக்கு பதில் சொல்லியே அலுத்துவிட்ட பிரகாஷைப் பார்ப்பதற்கு கணபதிக்கு மிகவும் பாவமாகவும், சிரிப்பாகவும் இருந்தது. அவர் மனதிற்குள் கோகுலுக்கு ஒரு பெரிய 'சபாஷ்' போட்டார்.

# 18

மதிய உணவு இடைவெளிவரை வேலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்த கோகுல், மணியைப் பார்த்துவிட்டு விரைவாக மதிய உணவுக்காக கண பதியை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டான்.

''வேலை நேரத்தில் சாப்பாட்டை பற்றி நான் கவலைப்பட மாட்டேன் கோகுல்.''

''நீங்க கவலைப்படாவிட்டாலும் வீட்டில் ஆன்ட்டி கவலைப்படுவாங்க தானே அங்கிள். அவங்களோட உணர்வுகளுக்கும் நாம மரியாதை கொடுக்கணுமில்ல?''

''உனக்கு பசி வந்துருச்சுன்னு சொல்லு. என்னை சாக்கா வெச்சு உன் பசியை மறைக்கிறயா?'' கேலியாகக் கேட்டவரை புன்சிரிப்புடன் திரும்பிப் பார்த்தான் கோகுல்.

''பசி எனக்குப் புதியது இல்லை அங்கிள். அங்க மெட்ராஸில் நம்ம பேக்டரியில் மொத்தம் நாலு ஷிப்ட் காலை முதல் மதியம் வரை ஒண்ணு, அப்புறம் மதியம் முதல் நைட் வரை ஒண்ணு, அதுபோக நைட்டிலும் இதே டயத்தின்படி இரண்டு ஷிப்ட் இருக்கும். ஸோ நாம நம்ம வேலையை அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் நாள் முழுவதும் தொடர்ந்து பார்க்கலாம். சில நேரத்தில நைட் பன்னிரெண்டு மணிக்குக் கூட சாப்பிட்டிருக் கேன். ஆனால் வயதான உங்களை என்னுடைய



சொந்தத் தேவைக்காகப் பட்டினி போடுவதில் எனக்கு விருப்பம் இல்லை அங்கிள்.''

'இவனுக்குத்தான் எத்தனை முகங்கள்? ஆனால் இதில் எது இவனுடைய சொந்த முகம்? என்ற சிந்தனை யில் ஆழ்ந்துவிட்ட கணபதி அதற்கு மேல் கோகுலிடம் எதுவும் பேசாமல் தனக்குள் சிந்திக்க ஆரம்பித்தார். அவரது மௌனத்திற்கு மதிப்பளித்து இடையில் குறுக் கிடாமல் அமைதியாக வந்தான் கோகுல்.

''என்னங்கண்ணா? உங்க மருமகன் வேலையில கொஞ்சமாவது தேறியிருக்கானா? இல்லை இன்னும் விளையாட்டுப் புத்தியுடனே இருக்கிறானா'' வீட்டின் வரவேற்பு அறையில் அமர்ந்து அகல்யா, மனோன்மணி யுடன் பேசிக்கொண்டு இருந்த லட்சுமி கணபதியைக் கண்டவுடன் கவலையுடன் கேட்டாள். கோகுல் ஏதாவது விளையாட்டுத்தனமாக நடந்து கணபதியின் கோபத் திற்கு ஆளாகிவிடப் போகிறானோ என்ற கவலை அவளுக்கு.

''உன் மகன்... நம்ம கோகுல் தொழில் விசயத்துல ரொம்ப கெட்டிக்காரன்தான் லட்சுமி. நீ கோகுலைப் பத்தி கவலைப்படவேண்டிய தேவையே இல்லை'' கூறிக் கொண்டே கோகுலின் தோள்மேல் கைபோட்டு டைனிங் டேபிளுக்கு அழைத்துச் சென்ற கணபதியைப் பார்த்து உள்ளம் மகிழ நின்று விட்டாள் லட்சுமி.

உணவை முடித்துக் கொண்ட பின் உடனடியாகக் கிளம்பிய கணபதியைத் தடுத்துவிட்டான் கோகுல்.

''நாம ஈவ்னிங் போய் பார்த்துக்கலாம் அங்கிள். நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. எங்களோட சேர்ந்து வேகமா

நடந்ததுல நீங்க டயர்டா தெரியறீங்க'' என்ற கோகுலைத் தடுத்தார் கணபதி.

''எனக்கு ஒண்ணும் பிரச்சினையில்லை கோகுல். இப்படி அலையிறதெல்லாம் இங்க சகஜம் தான். நம்ம எஸ்டேட்டிலயும் இப்படித்தான வேலை பார்த்தாகணும்.''

''தப்பு அங்கிள். உங்க உடம்பை முதல்ல நீங்க கவனிச்சுக்கணும். நீங்க நல்லா இருந்தா எப்ப வேணும்னாலும் பணத்தை சம்பாதிக்கலாம். கோடி கோடியா இருந்தாலும் நீங்க எங்ககூட இருக்கறது போல வருமா?''

கோகுல் பேசப்பேச அவன் மேல் கணபதி கொண்டிருந்த கெட்ட அபிப்ராயங்கள் எல்லாம் உடைந்து தூள் தூளாகப் போய்விட்டடது. அவனது ஒவ்வொரு செயலும் பேச்சும் அவனை ஒவ்வொரு கோணத்திலும் நல்லவனாகக் காட்டியதேயொழிய, கெட்டவனா எண்ணக்கூட அவரால் முடியாமல் போனது. ஆனால் நெஞ்சின் அடி ஆழத்தில் நெருஞ்சி முள்ளாக குத்திய சென்னையில் அவனைக் கண்ட தோற்றம் மட்டும் அவர் மனதில் இருந்து மறையவே இல்லை.

எவ்வளவு எடுத்துக் கூறினாலும் ஏற்றுக் கொள்ளாத கோகுல் அவரை ஓய்வு எடுக்கச் செய்துவிட்டே மாலையில் அவரை அழைத்துக் கொண்டு கிளம்பினான். அவனது பாசத்தில் கணபதியின் அன்னையும், மனைவியும் கரைந்து போய் விட்டார்கள்.

மாலை கணபதியுடன் கிளம்பிய கோகுல் அன்னையையும், மற்றவர்களையும் தன்னுடன் சேர்த்தே அழைத்துக் கொண்டு போய்விட்டான். தங்களைப் போல் அல்லாமல் பெண்கள் அனைவரையும் ஜீப்பில் ஏற்றிவிட்டு



ஓட்டும் பொறுப்பை மாணிக்கத்திடம் ஒப்படைத்துவிட்டே வேலையைப் பார்க்க அமர்ந்தான் கோகுல். குடும்ப உறுப்பினர்களிடம் அவன் காட்டிய அக்கறை பிரகாசையே புருவம் உயர்த்த வைத்தது.

பிரகாசிடம் இருந்த பத்திரப் பேப்பர்களை வாங்கிக் கொண்ட கோகுல் அதை ஊன்றிக் கவனித்துப் படிப்பதை அருகில் அமர்ந்து கண்கொட்டாமல் பார்த்தவாறு அமைதியாக அவனைக் குறுக்கிடாமல் இருந்தார் கணபதி. இப்பொழுது கோகுலின் மேல் முழு நம்பிக்கையும் வந்துவிட்டது கணபதிக்கு. அவரது கணிப்பைப் பொய்யாக்காமல் அனைத்தையும் படித்து முடித்த கோகுல் நிமிர்ந்து பிரகாசைக் கேள்விக்குறியாகப் பார்த்தான்.

''இந்த டாக்குமெண்டஸ் எல்லாம் உங்க அம்மாவின் பேரில இருக்க கரண்ட் டாக்குமெண்ட்ஸ் மட்டும் தான் சார். எனக்கு இதோட மதர் டாக்குமெண்ட் வேண்டுமே.''

''அதெல்லாம் எங்க இருக்குன்னு அம்மாவுக்குத் தான் தெரியும். அவங்க இப்ப இங்க இல்ல. ஊருக்குப் போயிருக்காங்க. நான் வேணும்னா போன் பண்ணிக் கேட்டுட்டு காலையில எடுத்துத் தரட்டுமா?''

''நோ பிராப்ளம் சார். சும்மா வெரிபிகேஷனுக்காகத் தான் கேட்டேன். நான் அதைக் காலையிலயே வாங்கிக்கறேன்.''

''அப்ப மத்த விசயங்களைப் பத்தி...'' லேசாக இழுத்த பிரகாசைப் பார்த்துப் புன்னகைத்தான் கோகுல்.

''நான் பேப்பர் எல்லாம் கரெக்டா இருக்கான்னு செக் பண்ணத்தான் வந்திருக்கேன் சார். கேஷ் டீல் எல்லாம் டாடி வந்தபின் அவர்கிட்டத்தான் பேசணும்.''

''அதுக்கில்லை கோகுல். நான் அமெரிக்காவுல போய் செட்டிலாகப் போகிறதால தான் எஸ்டேட்டை விற்கவே முடிவெடுத்தேன். அதனால எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமா முடிச்சுட்டீங்கன்னா ரொம்ப நல்லது. ஏன்னா அதுக்கப்புறம் தான் நான் மத்த ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.''

''அதை எல்லாம் நீங்க டாடிகிட்ட முதல்லயே சொல்லியிருக்கணும் சார். சொல்லாம இருந்தது உங்க தப்பு. இப்பவும் ஒண்ணும் பிரச்சினை இல்லை. நான் உங்க சூழ்நிலையை டாடிகிட்ட எடுத்துச் சொல்றேன். அவர் என்ன முடிவு எடுக்கிறாரோ அதற்கு மேல் வேற எந்த கருத்துமே கிடையாது. ஏன்னா அவங்களோட வொர்க் அப்படிப்பட்டது. டாடியோட செட்யூலைப் பொறுத்துத்தான் நாங்க பைனல் பண்ண முடியும்.''

''நீங்க கொஞ்சம் சார்கிட்ட எடுத்துச் சொல்லி...'' பேசிய பிரகாசைக் கறாராக இடைமறித்தான் கோகுல்.

''சாரி சார். நான் எடுத்துச் சொல்லிக் கேட்கிற நிலை எங்க டாடிக்குக் கிடையாது. அவர் ஆர்டர் போடுவதைச் செய்துதான் எனக்குப் பழக்கம். ஸோ அவருக்காகக் காத்திருக்க முடிஞ்சா நாம மேற்கொண்டு பேசலாம். இல்லேன்னா நீங்க உங்க விருப்பப்படி செய்யலாம்'' தீர்மானமாகக் கூறிய கோகுல் பிரகாசிற்கு கைகொடுத்து விடைபெற்றுக் கிளம்பி விட்டான்.

''எஸ்டேட்டை சுத்திப் பார்க்கப் போனவங்க வந்திரட்டுமே'' என்று கேட்டார் கணபதி.

''அவங்களை அப்பவே வீட்டுக்கு அனுப்பி விட்டேனே'' பதிலளித்தவனை ஆச்சரியமாகப் பார்த்தார் கணபதி.



''எப்பப்பா? எப்படி?''

''அவங்க ஜீப்புலதான அங்கிள் போனாங்க. அரை மணி நேரத்திலேயே வந்திட்டாங்க. நான் நம் காரில் அவர்களை மாணிக்கம் அங்கிள் கிட்ட சொல்லி டிராப் பண்ணிட்டேன். அந்த எஸ்டேட்டை இன்னும் நாம வாங்கவேயில்லை அங்கிள். அங்க எதுக்காக மம்மியும் ஆன்ட்டியும் காத்துக்கிட்டு நிக்கணும். அதான் அனுப்பிட்டேன்'' கூறிய கோகுலைக் கட்டிக்கொள்ள வேண்டும் போல் வந்த ஆசையை அடக்கிக் கொண்டார் கணபதி.

## 19

இரவெல்லாம் கணபதி தூங்கவே இல்லை. கோகுலைப் பற்றிய பெருமைகளை மனைவியிடம் அலுக்காமல் கூறிக்கொண்டே இருந்தான். வருங்கால மருமகனின் பெருமைகள் என்ற மகிழ்வில் தூக்கம் மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள் அகல்யா.

''என்ன புள்ளை அவன்? இப்படி ஒரு பையன் கிடைக்க ரெங்கநாதன் புண்ணியம் செய்திருக்கணும். பெரியவங்க கிட்ட எவ்வளவு மரியாதையாப் பழகறான் தெரியுமா?''

''பிரகாஷ் ஜீப்புல போய் ஈஸியா சுத்திக் காட்டிட்டு வேலையை முடிச்சிரலாம்னு பார்த்தான். நான் கூட ஆரம்பத்தில் அவனைத் தப்பா நினைக்கல. ஆனா

கோகுல் அதை ஒத்துக்காம நடத்தியே கூட்டிட்டுப் போய் அவன்கிட்ட எவ்வளவு விஷயங்களைக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டான் தெரியுமா? எஸ்டேட் பிஸினஸ் ரெங்கநாதனுக்கு புதிது. ஆனால் கோகுல் ஒருத்தன் போதும். இந்த எஸ்டேட்டை தனியாகவே முன்னுக்குக் கொண்டு வந்திடுவான்.''

''பிரகாஷ், கோகுல் பேசினதப் பார்த்ததும் மிரண்டு போயிட்டான். எங்கப்பாவுக்காக வெயிட் பண்ண முடிஞ்சாப் பாருங்க. இல்லாட்டி விட்டுவிடுங்கன்னு சொன்னதைக் கேட்டதும் எனக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போச்சு. அப்பா மேல எவ்வளவு மரியாதை யும், அன்பும் இருந்தா கோகுல் அப்படிச் சொல்லி யிருப்பான்? ஒவ்வொரு வீட்டில பிள்ளைங்க பெத்த வங்க எப்போச் சாவாங்க, அவங்க இடத்துக்கு நாம வரலாம் என்று காத்துக் கிடக்குது. ஆனா எங்கப்பா தான் எனக்கு முக்கியம்னு சொல்ற பிள்ளையை பெத்ததுக்கு ரெங்கநாதன் பெருமைப்பட்டுக்கணும்.''

''எனக்கு உங்களை அவன் திரும்பவும் வீட்டுக்கு அனுப்பினதே தெரியாதுடி. நான் கூட உங்களைக் கவனிக்கல. கொஞ்ச நேரம் வெயிட் பண்ணினா சேர்ந்தே போயிரலாம்னு நினைச்சேன். ஆனா அவன் அது உங்களுக்கு மரியாதைக் குறைச்சல்னு நினைச்சுக் கிட்டு உடனே வீட்டுக்கு அனுப்பிட்டான்.''

கோகுலின் ஒவ்வொரு செயலும் இப்படி ஒரு மகன் நமக்கும் வேண்டும் என்று கணபதியை ஏக்கம் கொள்ள வைத்தது. கணவரின் ஏக்கத்தை உணர்ந்த அகல்யா, அதற்கான தீர்வு தெரிந்திருந்தும் அதை வெளிப்படை



யாகக் கூறும் தைரியம் இல்லாமல் அமைதியாக இருந்தாள்.

கணபதியின் அத்தனை பாராட்டுக்களுக்கும் சொந்த மானவன் தனது அறையில் படுக்கையை முள்ளாக எண்ணி உழன்று கொண்டு இருந்தான். மோகனமலர் காலையில் அவனைப் பார்த்த பார்வை முழுவதும் அவன் மேல அவள் காதல் கொண்டிருப்பதை அப்பட்டமாக கோகுலுக்கு உணர்த்தியது. அவளது உள்ளம் நன்றாக புரிந்துதான் கோகுல் அவளுக்குத் தலையாட்டினான். ஆனால் அந்தத் தலையாட்டலுக்கும் கூட வெக்கத் தினை முகம் சிவக்க அவளைப் பார்வையால் விழுங்கிய மலரின் உருவம் அவன் கண்ணுக்குள்ளேயே உறைந்து நின்று விட்டது. காலை முதல் இரவு வரை வேலையில் முழுக் கவனத்தையும் செலுத்தி வேலை பார்த்தாலும் அவன் உள்மனம் சதாசர்வ காலமும் மோகனமலரின் பெயர் தான் உருப்போட்டுக்கொண்டு இருந்தது.

கோகுலுக்கு இந்த அனுபவம் புதிது. இந்த ஏக்கம் புதிது. இந்தக் காதல் புதிது. இந்தப் பரிதவிப்பும் புதியது. தன்னைப் பார்த்து பெண்கள் மயங்கி மேலே வந்து விழுவதைப் பார்த்துப் பழக்கப்பட்ட அவனுக்கு, தன்னை ஒரு பெண் வெட்கத்துடன் பார்ப்பது மிகவும் புதியதாக இருந்தது. அந்த வெட்கத்துடன் கூடிய பார்வை கோகுலைப் பைத்தியம் பிடிக்க வைத்தது. மோகன மலரின் அருகாமையை அவளது ஆண்மை மிகவும் நேசிக்கத் தொடங்கியது. அந்த நேசமும் முழுமையான காதலால் மட்டுமே தோன்றியிருந்தது அவனுக்கே வியப்பாக இருந்தது. தன்னுடைய நிலைமை புரியாமல்

ரெங்கநாதன் மலரிடம் இடைவெளிவிட்டுப் பழகச் சொல்லியிருந்தது வேறு அவனது கையைக் கட்டிப் போட்டு இருப்பது போல குழப்பமாக இருந்தது. மூணா றுக்கு வந்து முழுதாக ஒருநாள் ஆகிவிட்ட நிலையிலும் அவனது எண்ணம் ஒருமுறை கூட குடிப்பதைப் பற்றியோ, ஷாலினியைப் பற்றியோ எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

கோகுலின் எண்ணம், சொல், செயல், சிந்தனை என்று அனைத்தையும் மோகனமலர் முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ள அவன் தவித்துப் போனான்.

''டாட், மோகனமலர் என்னுடையவள் என்று என் உள்ளம் முழுமனதாகக் கூறுகிறதே. இந்நிலையில் நான் அவளை விட்டு எப்படி விலகி நிற்பேன். நீங்க எதற்காக அப்படிக் கூறினீர்கள்?'' மெல்லிய குரலில் தனக்குத் தானே பேசிக்கொண்ட கோகுல் அதற்கு மேல் அறைக் குள் இருக்க முடியாமல் அறையை விட்டு வெளியே வந்து தோட்டத்திற்குள் நுழைந்தான்.

இதமான குளிர்காற்று உடலை மிருதுவாக வருடிச் செல்ல கோகுல் மனம் புழுக்கத்திற்கு இதமாக உணர்ந்தான். கைகளை மார்புக்குக் குறுக்காக குளிருக்கு இதமாக மடித்துக் கொண்டு மெதுவாகத் தோட்டத் திற்குள் நடக்க ஆரம்பித்தான் கோகுல். ரோஜா, மல் லிகை, முல்லை, சம்பங்கி என அழகுக்காக வளர்க்கப் பட்ட மலர்கள் வரிசையாக தொட்டியில் அழகாக ரசனையுடன் ஒன்றன் பின் ஒன்றாக நடைபாதையின் இருபுறங்களிலும் வைக்கப்பட்டு இருந்தன. அவை நடைபாதையில் நடக்கும் அனைவருக்கும் வஞ்சனை



இல்லாமல் வாசனையை அள்ளிக் கொடுத்தவாறு அமைதியாக அசைந்து கொண்டிருந்தது. கோகுலின் உள்ளம் தவிப்பதற்கு மோகனமலரின் மேல் அவன் கொண்டிருந்த காதல் மட்டும் அல்லாது மற்றுமொரு காரணமும் இருந்தது. அந்தத் தவிப்பும் கூட மோகனா வின் மேல் அவன் கொண்டிருந்த அளவற்ற காதலின் காரணமாகவே தோன்றியிருந்தது.

மோகனமலர் பெயருக்கு ஏற்றபடி அற்புதமான மலரினை ஒத்தவள் என்பது கோகுலுக்கு நன்றாகவே தெரிந்தது. அவள் கோகுலைக் கண்ட முதல் நொடியி லேயே காதல் கொண்டதை அறிந்த கோகுல் ஆனந்தப் பட்டுப் போனான். ஆனால் மோகனாவின் மனதைக் கவர்ந்த முதல் ஆண்மகன் தான் தான் என்று எள்ளளவும் சந்தேகம் கொள்ளாத கோகுலின் ஆண் உள்ளம் கர்வத்தில் பூரித்து நின்றாலும், தான் அதற்குத் தகுதி யானவன்தான் என்று அவனது உள்ளம் அதே சமயத்தில் அவனைக் கேள்வி கேட்பதையும் அவனால் தவிர்க்க முடியவில்லை.

கோகுல் தேன் தேடி மலர்களை தேடி அலையும் வண்டாக இல்லாவிட்டாலும், தன்னைத் தேடி வந்த மலர்களில் தேன் எடுத்துப் பழகியவன் தானே. யாருக்கும் கிடைக்காத அற்புதமான வரம் கிடைத்தும் அதை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள முடியாதவனின் மனநிலையில் இருந்து தவித்தான் கோகுல். மோகன மலர் ஒரு மாசுமருவற்ற மாணிக்கம். அதைக் கையால் தொடும் அருகதை தனக்கு உண்டா என்று அறியாமல் திகைத்து நின்றான் கோகுல். தான் செய்த தவறுகளை

உணர்ந்து அதைத் திருத்திக் கொள்ளும் உறுதியான மனநிலையில் அவன் இருந்தாலும், அவனது கடந்த காலத்தில் அவன் செய்த தவறுகள் இந்த ஜென்மம் முழுவதும் உண்மையாகத்தானே இருக்கும் என்று அவனது மனச்சாட்சி கேட்ட கேள்விக்கு கோகுலிடம் பதில் இல்லை. நினைவுகளின், கேள்விகளின் புயலில் சிக்கித் தவித்தபடி நடந்துகொண்டு இருந்தவனின் கால்கள் அசையாமல் அப்படியே நின்று விட்டது. அவன் இதயம் துடிப்பதை ஒருகணம் நிறுத்திவிட்டு பின் மிக வேகமாக துடிக்க ஆரம்பித்தது. கண்கள் வியப்பில் விரிந்து ஆனந்தத்துடன் அந்த நொடியைப் பொக்கிசமாக அவனது உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு இருந்தது.

## 20



இரவின் இதமான சூழ்நிலையை மேலும் ரம்மிய மாகக் காட்டும்படி கணபதி அமைந்திருந்த அழகான தூண்களில் இருந்த விளக்குகள் கண்ணுக்குக் குளிர்ச்சி யாக மிகவும் மெல்லிய ஒளியை தோட்டத்திற்குள் தவழ விட்டிருந்தது. தோட்டத்தின் ஒரு பகுதியில் செயற்கை குளம் அமைக்கப்பட்டு அதில் மலர்ந்திருந்த அல்லி மலர்கள் விரிந்தும், தாமரை மலர்கள் சுருங்கியும் இயற் கையின் திருவிளையாடலை உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டு இருந்தது. அதன் ஓரத்தில் உயர்ந்து



வளர்ந்திருந்த ரோஜாச் செடிகளின் அருகில் போடப் பட்டு இருந்த நீளமான அலங்கார மேஜையில் கால்களை மடித்து அமர்ந்து அல்லி மலர்களை வெறித்துக் கொண்டு மோகனமலர் தன்னுடைய உருவம் கோகு லுக்குள் உண்டாக்கிய மாற்றங்கள் எதையும் உணராமல் அவள் தனக்குள் மூழ்கியவாறு அமர்ந்து கொண்டிருந் தாள்.

தன்னருகே மெல்லிய காலடிச் சத்தம் கேட்ட மோகனா பயத்துடன் வேகமாக எழுந்து திரும்பியதில் கோகுலின் மீது மோதிக்கொண்டாள். மோதிய வேகத் தில் நிற்கமுடியாமல் தள்ளாடியவளை வலிமையான கரங்கள் இடையை வளைத்துக் கொண்டதை உணர்ந்து கோபமும் குழப்பமுமாக நிமிர்ந்தவளின் கண்கள் அங்கு கோகுல் நிற்பதைப் பார்த்து நிலைத்து நின்றுவிட்டது. இம்முறை சிலையாக நிற்பது மோகனமலரின் செயல் ஆனது.

தன்நிலை மறந்து தன் அணைப்பில் நின்று கொண்டு இருந்தவளை காதலுடன் பார்த்த கோகுலின் கரங்கள் அவனையறியாமல் மோகனாவை மேலும் தன்னுடன் நெருக்கமாக அணைத்துக் கொண்டது. அவனது அணைப்பில் மெய்மறந்த மோகனா கோகுலின் மார்பில் முகம் புதைத்து அவனுள் அடங்கி நின்றாள். அவளைத் தொட தனக்குத் தகுதி இருக்கிறதா என்று மறுகிக்கொண்டு இருந்த கோகுலுக்கு மோகனாவின் இந்தச் செயல் முழுத் தகுதியையும் வழங்கியது போல் இருந்தது கோகுலுக்கு. அதுவரை அவனிடம் முழுதாக நாலு வார்த்தைகள் கூடப் பேசாத மோகனா அவனது

அணைப்பில் விலகாமல் அடங்கி நின்றதே அவன் கோகுலின் மீது வைத்திருந்த அன்பினை அவனுக்கு உணர்த்த கோகுல் மோகனாவை விலக விடாமல் தன்னுடன் இறுக்கிக் கொண்டான். 'இனி கோகுல் மனதாலும், செயலாலும், உடலாலும், உள்ளத்தாலும் உன் ஒருத்திக்குத் தான் சொந்தம்' என்று மனதளவில் உறுதி கூறினான் கோகுல்.

தன்னிலை மறந்து கோகுலுடன் இணைந்து நின்றிருந்த மோகனா தன் தோளில் சூடான அவனது இதழ் ஸ்பரிசத்தால் உணர்வு மீண்டவளாய் வெட்கத்துடன் விலகி நின்றாள். ஆனாலும் முதன் முதலாக உணர்ந்த ஆணின் ஸ்பரிசத்தால் நிற்க முடியாமல் தள்ளாடிய அவளை மறுபடியும் இழுத்துத் தனக்குள் அடக்கிக் கொண்டான் கோகுல். அவளை அணைத்தபடியே அருகில் இருந்த புல்வெளியில அமர்ந்த கோகுல் தன் கால்களை நீட்டி மோகனாவை மடியில் சரித்துக் கொண்டான்.

''நிற்கக்கூடத் தெம்பில்லாதவன் இந்த நேரத்துக்கு தோட்டத்துக்கு எதுக்கு வரணும்?'' கிசுகிசுப்பாக செல்லமாக அவளைக் கடிந்து கொண்டான் கோகுல்.

''எனக்கே அதுதான் புரியல. இத்தனை நாளாக இல்லாம இன்னிக்கு என்னவோ என்னால என்னோட ரூமிலேயே இருக்க முடியலயே!'' அப்பாவியான அழகுடன் கூறிய அவளை ஆண்டுவிடும் ஆவல் தோன்றியது கோகுலுக்கு. மிகவும் முயற்சி செய்து தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தான் அவன்.



'ஏன்!?'' கிறக்கமாய்க் கேட்டவளைப் பார்த்து சிரிப்புடன் விலகி எழுந்து அமர்ந்தாள் மோகனா.

''அதுதான் தெரியலன்னு சொன்னேனே? ஆமா நீங்க வாக்கிங் வந்தீங்களா?'' தனது செயல்களை எண்ணி வெட்கத்துடன் கேட்டாள் மோகனா.

''நானும் உன்னைப் போலத்தான். ரூமுக்குள்ள இருக்க முடியாம தோட்டத்துக்கு வந்தேன்'' அவளையே பார்த்தபடி கூறினான் கோகுல்.

''ஏன்...''

''ஆனால் நான் காரணம் புரிந்துதான் ரூமுக்குள்ள இருக்க முடியாம வந்தேன். உன்னப் போல இல்லை.''

''காரணமா... அது என்ன காரணம்?'' புரியாமல் கேட்டவளின் கண்களை நெருங்கி அமர்ந்து நேராகப் பார்த்தான் கோகுல்.

''நான் உன்னை விரும்புகிறேன் மோகனா. நான் உன்னைக் காதலிக்கிறேன். என் உடல், மனம் என்று எல்லாவற்றையும் உன் காலடியில் வைத்து விட்டு உன் காதலை வேண்டித் தவித்துக் கொண்டு இருக்கிறேன். அதுதான் காரணம்.''

''.....''

''என்ன மோகனா? எதுவும் பேசாமல் அமைதியா இருக்க? கொஞ்ச நேரத்துக்கு முன்னால என்னோட நீ...'' மேலே பேசவிடாமல் தன் மென்மையான கரங்களால் வெட்கத்துடன் கோகுலின் வாயை மூடினாள் மோகனா.

''அதுதான் தெரியுதுல்ல? இந்த மோகனமலர் தன் மேல அந்நிய ஆண்களின் சுண்டுவிரல் கூடப் பட

விடமாட்டா. ஆனா இன்னிக்கு... உங்களோட அணைப்...''

மேலே பேச முடியாமல் தலைகுனிந்த மோகனாவை புயல் போல தனக்குள் அடக்கிக் கொண்டான் கோகுல். அவனது இதழ்கள் ஆவேசத்துடன் அவளது கன்னத்திலும், கழுத்திலும், உச்சியிலுமாக மாறி மாறி முத்த மழையை பொழிந்தது. கோகுலின் கரங்களோ அவளை யாரும் தன்னிடம் இருந்து பிரித்து விடுவார்களோ என்று அஞ்சுவதைப் போல அவளை இறுக்கமாக அணைத்துக் கொண்டிருந்தது.

''போதுங்க. இது என்ன முரட்டுத்தனம்?'' மூச்சுவிட முடியாமல் திணறிய மோகனா அவனது மார்பில் கைவைத்து தள்ள, உல்லாசமாகச் சிரித்தான் கோகுல்.

''இதெல்லாம் முரட்டுத்தனமா? இன்னும் என்னோட முரட்டுத்தனத்தை நான் காட்டவே ஆரம்பிக்கலையே?'' கேட்டவளை ஏறெடுத்தும் பார்க்காமல் தலை குனிந்தான் மோகனா.

''என்னடி அமைதியாகிட்ட?'' மென்மையாகக் கேட்ட கோகுலை கோபத்துடன் முறைத்தாள் மோகனா.

''என்னது... டியா. ஹலோ... என்ன மரியாதை குறையுது?''

''ஆமாண்டி. என் குண்டுப் பொண்டாட்டி, இனி நீ என்னைக்கும் எனக்கு டி-தான்.''

''என்னது... குண்டு பொண்டாட்டியா? விட்டா ரொம்ப ஓவராப் போறீங்களே? கொஞ்சம் அடக்கி வாசிங்க. அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது'' கூறியவனின் தோள்மீது கைப்போட்டு அருகில் இழுத்துக் கொண்டான் கோகுல்.



''என்ன செய்வ?'' அவளது காதோரமாய் கிறங்கிய குரலில் கரைந்து போனாள் மோகனா. அவனுக்குப் பதில் சொல்ல வாய் திறந்தவளை அகிலேசின் குரல் இடை மறித்தது.

''அக்கா... அக்கா... எங்கக்கா இருக்க? இந்த நேரத்தில இங்க என்ன பண்ற?'' அவன் குரல் கேட்ட கோகுல் இருட்டிற்குள் மறைந்து கொண்டே விசமமாக மோகனாவைப் பார்த்தான்.

''என்ன பண்ணிக்கிட்டு இருந்தன்னு அவன்கிட்ட சொல்லவா?'' கேட்டவளை நோக்கி ஒரு பூவை பிய்த்து எறிந்த மோகனா வேகமாக எழுந்து அகிலை நோக்கி ஓடினாள்.

''இங்க என்னக்கா பண்ற? உனக்குத்தான் இருட்டுன்னா பயமாச்சே?'' சந்தேகமாகக் கேட்ட அகிலின் கண்கள் தோட்டத்தைச் சுற்றி வந்தது.

'இருட்டுன்னா பயமா' மனதிற்குள் கேட்டுக் கொண்ட கோகுலுக்கு அவனையறியாமல் சிரிப்பு வந்தது.

# 21

அறைக்குள் நுழைந்து கதவடைத்த மோகனா தம்பியைக் கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள். கன்னத்தில் கை வைத்தபடி கட்டிலில் அமர்ந்திருந்த அகிலும் அப்போது அவளைத்தான் கோபமாகப் பார்த்துக்

கொண்டிருந்தான். தம்பியின் கோபத்தைப் பார்த்தவுடன் தன் கோபத்தைக் கைவிட்டுவிட்டு அவனை நோக்கிச் சமாதானச் சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு வேகமாக தன் கட்டிலில் சென்று படுத்துக் கொண்டாள் மோகனா. அவள் என்னதான் செய்தாலும் அவளை விடுவதாக இல்லை அகில்.

''என்னக்கா... தூங்கப் போறயா?''

''இல்லடா, பாட்டுப் பாடப் போறேன்?''

''ஹா... ஹா... உன் ஜோக்குக்கு சிரிச்சுட்டேன். போதுமா? முதல்ல எந்திரிச்சு உட்காரு.''

''போடா எனக்குத் தூக்கம் வருது'' போர்வையை தன்னோடு சேர்த்துப் போர்த்திக் கொண்டாள் மோகனா.

''நீ என்ன லட்சணத்தில் தூங்குவேன்னு எனக்குத் தெரியும். முதல்ல எந்திரின்னு சொன்னேன்'' அவளது எந்த முயற்சியும் கோகுலின் முன் எடுபடுவதாய் இல்லை.''

மோகனா மெதுவாக எழுந்து அமர்ந்து தம்பியைக் கூர்ந்து பார்த்தாள்.

''என்னடா? அதிகாரமெல்லாம் தூள் கிளம்புது. என்ன வேணும் உனக்கு?''

''உண்மை வேண்டும்'' பெரிய மனிதனாய் அவள் முன் நின்று கேள்வி கேட்ட தம்பியின் குண்டுக் கன்னத்தில் சிரித்துக் கொண்டே முத்தமிட்டாள் மோகனா.

''என்னடா... சினிமா டயலாக்கெல்லாம் பேசறே?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அப்பத்தா உன்ன தேடி வந்துச்சு. நான் தான் நீ பாத்ரூமில் இருக்கறதா



பொய் சொன்னேன். இல்லேன்னா நீ இன்னிக்குக் காலி.''

''ஐயய்யே. அப்பத்தா எதுக்குடா இங்க வந்துச்சு? இந்நேரம் அது தூங்கப் போயிருக்குமே.''

''என்னக் கேட்டா? நீதானே அதோட செல்லப் பேத்தி. நீதான் அதுகிட்டப் போய் கேட்டுக்கணும்.''

''சரிடா. நீ என்னைக் காட்டிக் கொடுக்காம இருந்ததுக்குத் தேங்க்ஸ்.''

''உன் தேங்க்ஸை நீயே வெச்சுக்க. இப்ப நீ எதுக்காக தோட்டத்துக்குப் போன? அந்தக் காரணத்தை முதலில் சொல்லு'' பிடிவாதமாக கேட்ட தம்பிக்கு என்ன பதில சொல்வது என்று திகைத்தாள் மோகனா. ஏனென்றால் இருட்டிய நேரத்தில் தோட்டத்திற்குள் காலெடுத்து வைக்க மாட்டாள் மோகனா.

''அது டா... வந்து... நான்... ஆங்... நீதானடா சொன்ன...?'' தம்பியிடம் கேள்வியைத் திருப்பினாள் அவள்.

''நானா? நான் என்ன சொன்னேன்?'' புரியாமல் கேட்டான் அகில்.

''ஆமாடா. நீ மறந்துட்டியா? நீ தான் சொன்ன?''

''அதுதான் என்னத்த சொன்னேன்னு கேட்டேன்?'' தூங்கற நேரத்தில் தூங்க விடாமல் அலைய விட்டதும் இல்லாமல், இந்த நேரத்தில் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வைத்த அக்காவைக் கொலைவெறியுடன் பார்த்து பல்லைக் கடித்தான் அகில்.

''அதாண்டா. உடம்பு குறையணும்னா வாக்கிங் போகணும்னு காலைல சொன்னேல்ல...?'' பதிலைக் கண்டுபிடித்த உற்சாகத்துடன் கூறினாள் மோகனா.

''நான்... வாக்கிங்... உன்ன.. அதனால நீ இந்த நடுராத்திரியில் தோட்டத்தில் வாக்கிங் போன... இத நான் நம்பணும்...?''

''என்னடா... சினிமா வில்லன் மாதிரி பல்லைக் கடிச்சுக்கிட்டு இத்தனை கேள்வி கேக்கற? நான் என்ன பொய்யா சொல்றேன்?'' தம்பியைப் போலவே இழுத்தாள் மோகனா.

''பொய்யா செ..ல்றேனா? நீ பொய்யைத்தானக்கா பேசிக்கிட்டு இருக்க. என் பேச்சைக் கேட்டுக்கிட்டு இருட்டில வாக்கிங் போற அக்காவா நீயி? சம்திங் ராங்'' மோவாயில் விரல் வைத்து யோசித்த அகிலேசை குழப்பத்துடன் பார்த்தாள் மோகனா. அவனை என்ன சொல்லி சமாளிப்பது என்று அவருக்குப் புரியவில்லை.

''இங்க பாரு அகில். நான் உன்னோட கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்லிட்டேன். இதுக்கு மேல நீ என்னை நம்பலைன்னா நான் போய் அப்பத்தா ரூமில் படுத்துக்குறேன். நீ அப்பத்தா கூட இங்க படு'' தன் கடைசி அஸ்திரத்தை தம்பியின் மேல் எய்துவிட்டு நம்பிக்கையுடன் பார்த்தாள் மோகனா.

அவளது வார்த்தைகளைக் கேட்ட அகிலேஷ் அலறி விட்டான்.

''அம்மா... தாயே... புண்ணியவதி. நீ அக்காவா இல்லை சொர்ணாக்காவா? என்னை இப்படிப் பழி



வாங்க திட்டம் போடுற? அந்தக் கிழவி விடுற குறட்டை சத்தம் ஒரு மாசத்துக்கு என் காதுக்குள்ள கேட்டுக்கிட்டே இருக்கும்க்கா. நான் உன்னை ஒரு கேள்வியும் கேட்க மாட்டேன். நீ மட்டும் இங்கயே படுத்துக்க'' வேகமாகத் தன் கட்டிலில் படுத்துக்கொண்டு காலோடு தலையாக போர்வையைப் போர்த்திக் கொண்டான் அகிலேஷ்.

அவனைப் பார்த்து வாய்பொத்தி சிரித்த மோகனா நிம்மதியாகத் தன் படுக்கையில் படுத்துக் கொண்டாள். படுக்கையில் சாய்ந்து கண்மூடிய மோகனாவின் உள்ளம் அன்று காலையில் இருந்து நடந்த நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக அலச ஆரம்பித்தது. கோகுலைப் பார்த்த நொடியே தன் உள்ளத்தை அவனுக்குப் பறிகொடுத்தது ஏன் என்பது எவ்வளவு சிந்தித்தும் மோகனாவிற்கும் புரியவில்லை. இதுவரை யாரிடமும் சலனப்படாத தன் உள்ளம் எத்தனையோ ஜென்மங்களாகத் தொடரும் உறவினைப் போல கோகுலைக் கண்டவுடன் அவனைத் தன்னுடையவனாக ஏற்றுக் கொண்டது எப்படி என்பதும் அவளுக்குப் புரியவில்லை.

ஆனால் அவளது மனம் தெளிவாக அவளுக்கு அறிவித்தது ஒன்றே ஒன்றைத்தான். இனி கோகுல் இல்லாமல் மோகனா இல்லை என்பது தான் அது. கோகுல் ஒருவனுக்கு மட்டுமே தன் உள்ளத்தில் இடம் உண்டு என்பது தான் அது. தன்னையும் அவனையும் எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது என்பது தான் அது. அப்படியே பிரித்தாலும் மோகனாவால் அதன்பின் உயிர் சுமந்து வாழ முடியாது என்பது தான் அது. அதுதான் அவள் கோகுலின் மேல் அளவில்லாத காதல் கொண்டு

விட்டாள் என்பது. பார்த்த முதல் பார்வையிலேயே காதல் வருமா என்று பலமுறை, பல சந்தர்ப்பங்களில் தன் தோழிகளை பார்த்துக் கேலியாக சிரித்தவள் தான் மோகனமலர். ஆனால் இன்று அவளே ஒருவனைப் பார்த்த முதல் நொடியே காதல் கொண்டுவிட்டாள். இயற்கையின் இந்த விளையாட்டை எண்ணிச் சிரிப்பதா அழுவதா என்று மோகனாவுக்குப் புரியவில்லை. ஆனால் தன் சிரிப்பு, அழுகை எல்லாமே கோகுலுடன் தான் என்று மனதிற்குள் உறுதியாகக் கூறிக் கொண்டாள் மோகனா.

# 22



அன்று காலைக் கண்விழித்ததில் இருந்தே கணபதிக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. அவர் யாருடனும் அதிகமாகப் பேசாமல் காலை உணவை முடித்துக் கொண்டு வேகமாக வெளியே கிளம்பி விட்டார். அவரது மனக்குழப்பத்திற்கு கோகுலும் ஒரு காரணம் என்றே கூறலாம். அதிகாலை எழுந்தவுடன் என்றும் உள்ள வழக்கமாக தன் ஜன்னல் திரைச்சீலை களை விலக்கித் தோட்டத்தைப் பார்வையிட்டவரின் கண்கள் அதிர்ச்சியில் உறைந்து விட்டது. தான் காணும் காட்சி கனவா இல்லை உண்மையா என்று கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடியும் தோட்டத்தைப் பார்த்தார் அவர். அங்கே அவர் கண்ட காட்சி உண்மைதான் என்று அவருக்கு உணர்த்தியது அவரது கண்கள்.



புலர்ந்தும் புலராத காலைப் பொழுதில் புதுமலராக அழகாக இருந் அவருடைய மகள் மோகனா யாரோ ஒரு ஆடவனுடன் பேசிக்கொண்டு இருந்தாள். அவளுக்கு முதுகு காட்டி நின்றிருந்த அந்த ஆடவன் ஏதோ கூற அவள் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவனின் முகத்திலும், கண்களிலும் நிறைந்து வழிந்த காதலைக் கண்ட கணபதியின் கண்கள் சுருங்கியது. மோகனா இதுவரை எந்த ஆண்மகனிடமும் சிரித்துப் பேசி அவர் பார்த்த தில்லை. அந்த வகையில் தன் மகள்மேல அவருக்கு ஒருவிதமான கர்வமே உண்டு. அதனாலேயே அவர் மோகனாவிற்கு சகல சுதந்திரங்களையும் கொடுத்திருந் தார். ஆனால் இன்று அப்படிப்பட்ட தன் மகள் யாரோ ஒருவனோடு சிரித்துப் பேசிக்கொண்டு இருந்தது அவரது உள்ளத்தை கோடாலியைக் கொண்டு யாரோ பிளப்பதைப் போல் உணர்ந்தார்.

தன் மகளுடன் பேசிக்கொண்டு இருந்த ஆடவன் யார் என்று தெரிந்து கொள்ள அவர் திரைக்குப் பின்னால் நின்று கொண்டு மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தார். தன் செயலை எண்ணி அவரது மனம் அவமானத்தால் துடித்தது. பெற்ற மகளை மறைந்திருந்து கண்காணிக்கும் இந்த நிலை யாருக்கும் வரக்கூடாது கடவுளே என்று அவர் தனக்குள் ஊமையாக அழுது கொண்டே பார்த்துக் கொண்டிருந்தார். மோகனமலர் கை நீட்டி எதையோ சொல்ல அவள் காட்டிய திசையில் திரும்பிய இளைஞனை நன்றாகப் பார்த்த கணபதி அதிர்ச்சியுடன் மார்பைப் பிடித்துக்கொண்டு அமர்ந்து விட்டார்.

அவர் தன் மகளுடன் பேசிக்கொண்டிருந்த இளைஞனாகப் பார்த்தது கோகுலைத்தான். எந்தக் கோகுலுக்கு தன் மகளைத் திருமணம் செய்துகொடுக்க கணபதி தயங்கினாரோ அந்தக் கோகுலின் மேல் அவரது மகள் காதல் கொண்டுவிட்டாள். பணம், காசு, அந்தஸ்து என்று எந்தக் காரணம் குறுக்கே நின்று தடுத்திருந்தாலும் கணபதி அதையெல்லாம் உடைத்து எறிந்துவிட்டுத் தன் ஒரே செல்வ மகளை அவள் விரும்பியவனுக்கே திருமணம் செய்து கொடுத்து மகிழ்ந்திருப்பார். ஏனெனில் கணபதி என்றுமே பணத்த விட குணத்திற்கு மதிப்பளித்து தான் பழக்கம். ஆனால் அவரது மகள் ஒரு குணம் கெட்டவன் மேல் காதல் கொண்டுவிட்டாள். கணபதி எது நடக்கக்கூடாது என்று பயந்தாரோ கடைசியில் அது நடந்தே விட்டது.

கணபதிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவரது கை, கால், மூளை என்று அனைத்தும் வேலை செய்யாதது போல எதுவுமே செய்ய முடியாமல் தொப்பென்று கட்டிலில் விழுந்தார் அவர். வெகுநேரம் நடந்ததை எண்ணிச் சிந்தித்துப் பார்த்த அவருக்கு அதற்கு மேல் வீட்டிலேயே இருக்க முடியவில்லை. வேகமாகக் கிளம்பி வேலை இருப்பது போல் வெளியே வந்து விட்டார். நேராகத் தன் எஸ்டேட் பேக்டரிக்கு வந்தவர் அவரது அலுவலக ரூமில் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டு அமைதியற்று அவரது இருக்கையில் சாய்ந்து அமர்ந்தார்.

மேற்கொண்டு அவர் நடந்துகொள்ள வேண்டிய முறைபற்றி அவரது மனம் சிந்திக்க ஆரம்பித்தது.



என்னதான் அவரது ஆசை மகள் கோகுலின் மேல் காதல் கொண்டாலும், அவளது செயலை கணபதியால் அங்கீகரிக்க முடியவில்லை. மோகனாவின் காதலை ஏற்றுக்கொள்வது, அவரே அவரது செல்வ மகளுக்கு சவக்குழி தோண்டுவதற்கு ஒப்பான செயல் என்று கணபதி எண்ணினார். ஆயினும் தான் கோகுல் தொழில் சம்பந்தமாகப் புத்திசாலியாக இருந்தாலும், தனது தந்தைக்கும், குடும்பத்திற்கும் மரியாதை அளிப்பவனாக இருந்தாலும், அவனைத் தன் மகளுக்குக் கணவனாக எண்ணிக்கூட பார்க்க முடியவில்லை கணபதியால்.

சென்னையில் அவன் இருந்த நிலையும், அவனை சுற்றியிருந்த பெண்களுடன் அவன் பழகிய விதமும் அவன் நடத்தை எப்படியிருக்கும் என்று கோகுலைப் பற்றி தெளிவாக அறிவிப்பது போல் இருந்தது கணபதிக்கு. எந்த சூழ்நிலையிலும் அவர் தன் மகளின் வாழ்க்கையைப் பலியாக்க விரும்பவில்லை. ஆனால் யாரையும் மனதால் கூட நினைத்துப் பார்க்காத தன் மகள் எப்படி இப்படிப்பட்ட அயோக்கியனைக் காதலித்தாள் என்பதுதான் எவ்வளவு சிந்தித்தும் கணபதியால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. தன் அறியாத மகளை கோகுல் தான் வளைத்து விட்டானோ என்ற சந்தேகமும் கணபதிக்கு கிடையாது. மோகனா யாருடைய வற்புறுத்தலுக்கும் அடிபணிய மாட்டாள். தன் மனம் என்ன சொல்கிறதோ அதைத்தான் செய்வாள் அவள். குணத்தில் அப்பாவியான குழந்தைபோல் இருந்தாலும், தன் மனம் ஒப்பாத காரியத்தை அவளை செய்ய வைக்க யாராலும் முடியாது என்பது அவளுடைய தந்தையான கணபதிக்கு நன்றாகத் தெரியும்.

அப்படி மனம் ஒப்பி ஒருவனை நினைத்த தன் பெண்ணின் மனதை மாற்றத் தன்னால் இயலுமா என்று திகைத்து நின்றார் கணபதி. ஆனால் தன் மகளின் எதிர்கால வாழ்க்கைக்கான உத்திரவாதம் இல்லாமல் அவளது வாழ்வை வீணாக்கவும் அவரால் முடியாது. தலையைப் பிடித்துக் கொண்டு குழப்பத்துடன் அமர்ந் திருந்தார் கணபதி.

# 23



அன்று முடிக்க வேண்டிய வேலைகளைப் பற்றிக் கலந்து ஆலோசிப்பதற்காக கணபதியைத் தேடிய கோகுலுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவர் அதிகாலையே அலுவலகம் சென்றுவிட்டதாக கேள்விப்பட்டவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எஸ்டேட்டை சும்மா சுற்றிப் பார்ப்பதற்கே தன்னைத் தனியாக அனுப்பாத கடமை தவறாதவர் கணபதி. அப்படிப்பட்ட அவர் இன்று அவனிடம் கூடச் சொல்லாமல் வெளியே சென்று விட்டது கோகுலுக்கு வியப்பை அளித்தது. அவன் தன் கைப்பேசியில் கணபதியின் எண்களை அழுத்தி அவரை அழைத்துப் பார்த்தான். எதிர்முனை சுவிட்ச் ஆப் என்றது கைப்பேசி. எதுவும் புரியாமல் செல்போனை வெறித்த படி நின்றிருந்தான் கோகுல்.

''என்ன பேராண்டி? வயசுப் புள்ள காலங்கார்த்தால செல்போனை வெறிச்சுப் பார்த்துக்கிட்டு நிக்குற?'' தன் பின்னால் கேட்ட மனோன்மணியின் குரலைக் கேட்டுத் திரும்பினான் கோகுல்.



''ஒண்ணுமில்லை பாட்டி. அங்க்கிளுக்குப் போன் பண்ணினேன். சுவிட்ச் ஆப்னு வருது. அதான் யோச னையா நின்னுட்டேன்.''

''யாருக்கு... கணபதிக்கா?'' புரியாமல் கேட்டார் மனோன்மணி.

''ஆமாம் பாட்டி. அங்கிளுக்குத்தான்.''

''அவன் என்னிக்குமே போனை ஆப் பண்ணவே மாட்டானே?'' சந்தேகமாகக் கேட்டார் அவர்.

''அங்கிள் செல்தான் சுவிட்ச் ஆப்னு வருது பாட்டி. நான் நம்பரை நல்லாச் செக் பண்ணித்தான் போட்டேன்.''

''என்னாச்சு அவனுக்கு? ஏம்மா அகல்யா? அகல்யா?'' சமையல் அறையில் இருந்த அகல்யா பதறி ஓடிவந்தாள்.

''என்னங்கத்தை? கூப்பிட்டீங்களா?'' கையில் கரண்டியுடன் வந்து நின்று மூச்சு வாங்கிய மருமகளை ஏற இறங்கப் பார்த்தார் மனோன்மணி.

''நான் பெரிய வள்ளுவரு. நீ வாசுகி. கூப்பிட்ட குரலுக்கு கையில கரண்டியோட அப்படியே ஓடி வந் திட்டே? ஏம்மா இப்படி இருக்க? ஏதாச்சும் வேலை இருந்தா இதோ வர்றேன்னு ஒரு குரல் கொடுத்தா நான் காத்திருப்பேன்ல. அத விட்டுட்டு மூச்சு வாங்க ஓடி வரணுமா.''

''இல்லங்கத்தை. நீங்க காரணம் இல்லாம என்னைக் கூப்பிட மாட்டீங்க. அதான்...'' கூறிய மருமகளைப் பார்த்த மனோன்மணிக்குப் பாசம் பெருகியது.

''கணபதி எங்கம்மா போயிருக்கான்?''

''தெரியலத்தை. அவர் காலைல சீக்கிரமாவே கிளம்பிட்டாரு இன்னிக்கு.''

''எங்க போறான்னு சொன்னானா?''

''நான் கேட்டேன் அத்தை. அவர் பதில் சொல்லாம கிளம்பிப் போயிட்டார்.''

''காலைச் சாப்பாடு...?'' கேள்வியாக நிறுத்திய மனோன்மணிக்கு அவசரமாக பதிலளித்தாள் அகல்யா.

''அவர் வேண்டாம்னுதான் சொன்னாரு. நான்தான் வெறும் வயித்தோட வெளிய போகக்கூடாதுன்னு சொல்லி பிடிவாதமா ரெண்டு இட்லியை சாப்பிட வெச்சு அனுப்பினேன்'' கூறிய மருமகளைப் பெருமையாகப் பார்த்தார் மனோன்மணி.

''ஏங்கத்தை? எதுக்காக இப்ப அவரைத் தேடுறீங்க?'' பணிவாகக் கேட்ட மருமகளிடம் அவர் கோகுலைக் கை காட்டினாள்.

''நம்ம கோகுல் தம்பி கணபதியைக் காணோமின்னு தேடிச்சு. அதான் உன்னைக் கேட்டேன்.''

''அப்படியா தம்பி! அவர் வேற எங்கயும் போயிருக்க மாட்டார் தம்பி. நம்ம எஸ்டேட் பேக்டரிக்குத்தான் போயிருப்பாரு.''

''அப்படியா ஆன்ட்டி. பேக்டரிக்கு எப்படிப் போகணும்'' கேட்ட கோகுலுக்கு வழி காட்டினாள் அகல்யா.

''சரிங்க ஆன்ட்டி. நான் அங்கேயே போய் அங்கிளைப் பார்த்துக்கறேன்'' கிளம்பிய கோகுலைத் தடுத்தது மனோன்மணியின் குரல்.



''வயசுப்புள்ள. காலைல சாப்பிடாமக் கிடந்தா உடம்பு என்ன ஆகும்? முதல்ல போய் சாப்பிட்டு விட்டு அப்புறமாய் உங்க அங்கிளைப் போய் பாரு'' அதட்டலாக கூறிய மனோன்மணியின் குரலுக்கு அடி பணிந்தான் கோகுல்.

காலை உணவை முடித்துக்கொண்டு பேக்டரிக்குள் நுழைந்த கோகுலுக்கு, அங்கிருந்த ஊழியர்கள் கணபதியின் அறையைக் காட்டினார்கள். அறைக்குள் நுழைந்த கோகுலுக்கு வியப்பும், குழப்பமும் ஒன்றாக தோன்றியது. கணபதி அமர்ந்திருந்த கோலத்தைப் பார்த்த அவன் பதறிப் போனான்.

''என்ன அங்கிள்? தலைவலிக்குதா? ஏன் இப்படி தனியா உட்கார்ந்து இருக்கீங்க?'' கேள்வி மேல் கேள்வியாகக் கேட்ட கோகுலுக்கு பதிலளிக்காமல் அமைதியாக அவனை நிமிர்ந்து பார்த்தார் கணபதி.

''என்னாச்சு அங்கிள்? ஏன் அப்படிப் பார்க்கிறீங்க?'' புரியாமல் கேட்டான் கோகுல்.

''ஒண்ணும் இல்லப்பா. சும்மாதான் பார்த்தேன்.''

''இல்ல அங்கிள். என்கிட்ட எதையோ நீங்க மறைக்காதீங்க.''

''அதெல்லாம் இல்லப்பா. உன்கிட்ட நான் மறைக்க என்ன இருக்கு?''

''அது உங்களுக்குத்தான் தெரியும் அங்கிள். என்கிட்ட சொல்லக்கூடியதா இருந்தா சொல்லுங்க. இல்லேன்னா நான் உங்களைக் கம்ப்பெல் பண்ணமாட்டேன்'' கூறிய கோகுலை கோபத்தை அடக்கிக் கொண்டு நிமிர்ந்து பார்த்தார் கணபதி.

'என் பிரச்சினையே நீதானடா' மனதிற்குள் வெடித்தார் கணபதி.

# 24

கணபதியை அழைத்துக் கொண்டு லில்லி எஸ்டேட்டுக்குள் நுழைந்த கோகுலின் உள்ளம் என்றும் இல்லாத குழப்பத்தில் இருந்தது. முதல் நாள் இரவு வரை நன்றாகப் பேசிக்கொண்டு இருந்த கணபதியின் மௌனத்திற்கான காரணம் புரியாமல் அவனால் முதல் நாளைப்போல வேலையில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியவில்லை. அவன் அடிக்கடி திரும்பித் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த கணபதி அவன்மேல் சிறிதளவு பரிதாபம் கூடக் காட்ட முடியாமல் அமைதியாகவே இருந்தார்.

"சார் நீங்க கேட்ட மதர் டாக்குமெண்ட்ஸ் இந்தாங்க". பிரகாஷ் நீட்டிய பத்திரத்தை வாங்கி கோகுலிடம் நீட்டினார் கணபதி.

"ஏன் அங்கிள்? நீங்களும் படிச்சுப் பார்க்கலாம் இல்ல?"

"இல்லப்பா. நீ முதலில் படிச்சுப்பாரு. உனக்கு ஓகேன்னா சரிதான்" ஒட்டாமல் பதில் சொன்னார் கணபதி.

பத்திரங்களை சரிபார்த்துவிட்டு பிரகாஷிடம் விடை பெற்ற இருவரும் நேராக வீட்டை அடைந்தனர். அதற்கு



மேல் கணபதியை தொந்தரவு செய்ய விரும்பாத கோகுல் அவரிடம் பத்திர அலுவலகத்தின் முகவரியை வாங்கிக் கொண்டு தனியாகப் போக முடிவெடுத்தான்.

"நீங்க அலைய வேண்டாம் கோகுல். நானே போய் பார்த்துவிட்டு வருகிறேன்" அவரது குரலின் பேதத்தை உணர்ந்த கோகுல் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

"உங்களுக்கு யார் மேல் வருத்தம், என்ன கோபம் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது அங்கிள். ஆனால் நான் வந்த முதல் நாளே உங்களிடம் என்னை 'நீங்க' என்று கூப்பிட வேண்டாம் என்று ரிக்வெஸ்ட் பண்ணிக் கேட்டுக்கிட்டேன். நீங்களும் இதுவரை அப்படித்தான் என்னை கூப்பிட்டீங்க. ஆனா இப்பப் புதுசா நீங்கன்னு கூப்பிடுறதைப் பார்த்தா உங்க கோபம் என் மேலதான்னு புரியுது. ஆம் ஐ ரைட் அங்கிள்?"

"உன் மேல எனக்கு எதற்காகக் கோபம் வரப்போகுது தம்பி. நான் வாய் தவறி அப்படிக் கூப்பிட்டு விட்டேன்" சமாளித்தார் கணபதி.

"ரைட் அங்கிள். உங்களுக்கு எது சரின்னு படுதோ அதுப்படி செய்ங்க. இப்ப அட்ரஸ் குடுத்தீங்கன்னா நான் போய் லீகலா என்ன பார்மாலிட்டீஸ் இருக்கோ அதையெல்லாம் பார்க்க ஏற்பாடுகளைப் பண்ணிருவேன்."

"அதுக்கில்லை தம்பி. உங்களுக்கு இந்த ஊர் புதிசு. யாரையும் தெரியாது. நான் போய் பார்த்தேன்னா சீக்கிரமா முடிக்கப் பார்ப்பேன்."

"இல்லை அங்கிள். எனக்கு உங்களை அலைய வைக்கிறதுல இஷ்டம் இல்லை. உங்களுக்கு ஆயிரம்

வேலை இருக்கும். எங்களால உங்க பிஸினெஸை நீங்க கவனிக்காம இருக்க முடியாது பாருங்க. அத்தோட இனிமேல் இந்த ஊர், இங்க இருக்கிறவங்கன்னு எல்லாத்தையும் நானும் பழகிக்கணும் இல்லையா'' அவன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியுடன் பார்த்தார் கணபதி.

''எதுக்காக தம்பி? அதுதான் நான் இருக்கேனே நான் பார்த்துக்க மாட்டேனோ?''

''நான் இன்னிக்கு நடப்பதைப் பற்றிப் பேசல அங்கிள். இந்த எஸ்டேட்டை வாங்கிட்டா, இந்த ஊரை பழகிக்கணும் இல்லையா. அப்பத்தானே தொழிலை நல்ல முறையில் நடத்த முடியும்'' கேட்ட கோகுலை சிந்தனையுடன் பார்த்தார் கணபதி. அவன் சொல்வதில் இருந்த உண்மை அவருக்குப் புரிந்தது ஒரு நொடி லில்ல. எஸ்டேட்டை ரெங்கநாதனை வாங்க விடாமல் செய்து தானே வாங்கிவிட்டால் என்ன என்று அவருக்கு தோன்றியது. ஆனால் அவ்வாறு செய்வது ரெங்கநாத னுக்கு தான் செய்யும் துரோகம் என்று எண்ணியவர் தன் மனதை மாற்றிக் கொண்டார். கோகுலிடம் விலாசத்தை கொடுத்துவிட்டு சோபாவில் சோர்வுடன் அமர்ந்தார் கணபதி. கணவரின் முகத்தைப் பார்த்த அகல்யாவை கவலை ஆட்கொண்டது. என்றும் இல்லாமல் அன்று அவர் நடந்துகொள்வது எல்லாமே அவளுக்கு மிகவும் வித்தியாசமாகத் தோன்றியது.

அகல்யா அருகில் இருந்த மாமியாரிடம் கணபதி அறியாமல் அவரைக் கண்களால் சுட்டிக் காட்டினாள். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சைகையால்



மருமகளுக்கு உணர்த்திய மனோன்மணி மகனின் அருகில் வந்து அமர்ந்தார்.

''என்னப்பா கணபதி? உடம்புக்கு எதுவும் முடிய லயா?''

''ஏம்மா அப்படிக் கேட்கறீங்க. நான் நல்லாத்தான் இருக்கேன்'' சோர்வுடன் கூறிய மகனைப் பரிவுடன் பார்த்தாள் மனோன்மணி.

''என் பிள்ளையப் பத்தி எனக்குத் தெரியாதா? முகமெல்லாம் வாடிப்போன பயிர் மாதிரி கொறாவிக் கெடக்கு. என்னய்யா விசயம்?''

''அதான் சொல்றேனேம்மா. எனக்கு ஒன்றும் இல்ல. நான் நல்லாத்தான் இருக்கேன். லேசா தலைவலி அவ்வளவுதான்.''

''அவ்வளவுதான்னா எனக்கும் சந்தோஷம்தான்யா. ஆனா வேற ஏதாச்சும் இருந்துச்சுன்னா சும்மா உன் மனசுக்குள்ளயே போட்டு மறுகாத. அம்மா நான் இன் னும் உசிரோடத்தான் இருக்கேன்''

''அம்மா...?''

''ஆமாம் சாமி. உனக்கு மனசு சங்கடப்படுறதைப் பார்த்துக்கிட்டு என்னால குத்துக்கல்லாட்டம் உட்கார முடியுமா. என்ன விசயம்னு சொன்னா ஏதோ இந்த கிழட்டுச்சிறுக்கி என் மூளைக்கு எட்டுன ஆலோசனைய சொல்வேன்.''

''என்னம்மா இது? இப்படிப் பேசினா நான் என்ன செய்வேன். நான் உங்ககிட்டச் சொல்லாம வேற

வேலை இருக்கும். எங்களால உங்க பிஸினெஸை நீங்க கவனிக்காம இருக்க முடியாது பாருங்க. அத்தோட இனிமேல் இந்த ஊர், இங்க இருக்கிறவங்கன்னு எல்லாத்தையும் நானும் பழகிக்கணும் இல்லையா'' அவன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியுடன் பார்த்தார் கணபதி.

''எதுக்காக தம்பி? அதுதான் நான் இருக்கேனே நான் பார்த்துக்க மாட்டேனோ?''

''நான் இன்னிக்கு நடப்பதைப் பற்றிப் பேசல அங்கிள். இந்த எஸ்டேட்டை வாங்கிட்டா, இந்த ஊரை பழகிக்கணும் இல்லையா. அப்பத்தானே தொழிலை நல்ல முறையில் நடத்த முடியும்'' கேட்ட கோகுலை சிந்தனையுடன் பார்த்தார் கணபதி. அவன் சொல்வதில் இருந்த உண்மை அவருக்குப் புரிந்தது ஒரு நொடி லில்ல. எஸ்டேட்டை ரெங்கநாதனை வாங்க விடாமல் செய்து தானே வாங்கிவிட்டால் என்ன என்று அவருக்கு தோன்றியது. ஆனால் அவ்வாறு செய்வது ரெங்கநாத னுக்கு தான் செய்யும் துரோகம் என்று எண்ணியவர் தன் மனதை மாற்றிக் கொண்டார். கோகுலிடம் விலாசத்தை கொடுத்துவிட்டு சோபாவில் சோர்வுடன் அமர்ந்தார் கணபதி. கணவரின் முகத்தைப் பார்த்த அகல்யாவை கவலை ஆட்கொண்டது. என்றும் இல்லாமல் அன்று அவர் நடந்துகொள்வது எல்லாமே அவளுக்கு மிகவும் வித்தியாசமாகத் தோன்றியது.

அகல்யா அருகில் இருந்த மாமியாரிடம் கணபதி அறியாமல் அவரைக் கண்களால் சுட்டிக் காட்டினாள். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சைகையால்



மருமகளுக்கு உணர்த்திய மனோன்மணி மகனின் அருகில் வந்து அமர்ந்தார்.

''என்னப்பா கணபதி? உடம்புக்கு எதுவும் முடிய லயா?''

''ஏம்மா அப்படிக் கேட்கறீங்க. நான் நல்லாத்தான் இருக்கேன்'' சோர்வுடன் கூறிய மகனைப் பரிவுடன் பார்த்தாள் மனோன்மணி.

''என் பிள்ளையப் பத்தி எனக்குத் தெரியாதா? முகமெல்லாம் வாடிப்போன பயிர் மாதிரி கொறாவிக் கெடக்கு. என்னய்யா விசயம்?''

''அதான் சொல்றேனேம்மா. எனக்கு ஒன்றும் இல்ல. நான் நல்லாத்தான் இருக்கேன். லேசா தலைவலி அவ்வளவுதான்.''

''அவ்வளவுதான்னா எனக்கும் சந்தோஷம்தான்யா. ஆனா வேற ஏதாச்சும் இருந்துச்சுன்னா சும்மா உன் மனசுக்குள்ளயே போட்டு மறுகாத. அம்மா நான் இன்னும் உசிரோடத்தான் இருக்கேன்''

''அம்மா...?''

''ஆமாம் சாமி. உனக்கு மனசு சங்கடப்படுறதைப் பார்த்துக்கிட்டு என்னால குத்துக்கல்லாட்டம் உட்கார முடியுமா. என்ன விசயம்னு சொன்னா ஏதோ இந்த கிழட்டுச்சிறுக்கி என் மூளைக்கு எட்டுன ஆலோசனைய சொல்வேன்.''

''என்னம்மா இது? இப்படிப் பேசினா நான் என்ன செய்வேன். நான் உங்ககிட்டச் சொல்லாம வேற

யார்கிட்ட சொல்வேன்'' கூறிய கணபதியின் கண்கள் சுற்றுமுற்றும் பார்த்தது.

''என்னய்யா? யாரைத் தேடுற?''

''லட்சுமி எங்கம்மா? வீட்டில் தான இருக்கு?''

''இன்ன வரைக்கும் இங்க எங்க கூடத்தான் உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்துச்சு. இப்பத்தான் செத்த படுக்கறேன்னு சொல்லிட்டு மாடிக்குப் போச்சு. ஏன்ப்பா? ஏதாச்சும் அதுகிட்ட முக்கியமா பேசணுமா? நான் வேணும்னா போய் கூட்டிட்டு வரட்டுமா?'' கேள்வி மேல் கேள்வியாக கேட்ட மனோன்மணியைப் பார்த்து மனதிற்குள் பல்லைக் கடித்தார் கணபதி.

'இதுதான் நீ ஆலோசனை கூறும் லட்சணமா? நான் அவளுக்குத் தெரியாம பேசணும்னு நினைக்கிறேன். நீ லட்சுமியைக் கூப்பிடவான்னு கேட்கறியே?' மனதிற்குள் தாயை திட்டிய கணபதி நேரடியாக தாயிடம் கூறப் பயந்து அவர் முகம் பார்த்தார்.

## 25



எதையோ சொல்ல முடியாமல் தவிக்கும் மகனின் முகம் பார்த்த மனோன்மணிக்கு மனதிற்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது. அவர் மகனை அழைத்துக் கொண்டு அகல்யாவுடன் அவர்களது அறைக்குள் நுழைந்து கதவை பூட்டினார். ஒன்றும் புரியாமல் தன்



கணவரையும், மாமியாரையும் பார்த்த அகல்யாவின் தோள்களைத் தொட்டு தன் அருகில் அமர்த்திக்கொண்ட மனோன்மணி மகனை நிமிர்ந்து தீர்க்கமாகப் பார்த்தார்.

''இப்ப சொல்லு கணபதி? என்ன விசயம்?'' ஆழ்ந்த குரலில் கேட்டார் மனோன்மணி.

''அத எப்படிம்மா என் வாயால சொல்லுவேன்? என் நெஞ்சே வெடிச்சிரும் போல இருக்கே...'' வாய் விட்டுக் கதறிய மகனை ஓடி வந்து அணைத்துக் கொண்டார் மனோன்மணி.

''ஐயா... ராசா... என் தர்மவானே. நீ எப்பவும் எதுக்கும் இப்படிக் கலங்கி நின்னு நான் பார்த்தது இல்லையே? என்னப்பா நடந்துச்சு? என் ராசா. நீ சொன்னாத்தான் எங்களுக்குத் தெரியும்? சொல்லுய்யா என் பெத்த வயிறு பதறுதே...'' மகனைத் தன் அருகில் அமர்த்தி அவர் முதுகை தடவிக் கொடுத்தார் மனோன்மணி. சிறிது ஆசுவாசம் அடைந்த கணபதி தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். கணவனின் நிலையைப் பார்த்த அகல்யா மௌனமாகக் கண்ணீர் விட்டாள்.

''அழுகாதே அகல்யா. ஆம்பளைப் புள்ளைக ரொம்ப சுலபத்துல உணர்ச்சி வசப்பட்டுருவாங்க. ஆனா நாம தான் தைரியமா இருந்து அவங்களுக்கு தெம்பைக் கொடுக்கணும். ஒண்ணுமே புரியாம நீ பாட்டுக்கு அழுதா அப்புறம் இவனை யாரு தேத்துறது?'' மனோன்மணியின் அதட்டலைக் கேட்ட அகல்யா மிக அவசரமாகத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''இங்க பாரு கணபதி. பொட்டச்சி மாதிரி உள்ளுக்குள்ளேயே வெச்சுக்கிட்டு புலம்பாம என்னன்னு

சொல்லு. அத விட்டுட்டு எங்க மனசையும் கலங்கடிக்காத'' எனக்கு எதையுமே வெளிப்படையா பேசினாத்தான். புடிக்கும் என்று உனக்கே நல்லாத் தெரியும்'' கணபதியைப் பார்த்து அதட்டினார் மனோன்மணி.

''வெளிப்படையாச் சொல்ல முடியாமத்தானம்மா நான் இப்படிப் புலம்பறேன்.''

''நல்லா வந்திரும் வாயில. நீ சொன்னாத்தானடா மடையா எங்களுக்குப் புரியும். சும்மா போட்டு உயிரை வாங்காம என்னன்னு வாயைத் தொறந்து சொல்லு.''

''அத எப்படிம்மா...'' பேசிய மகனை ஆவேசமாக இடைமறித்தார் மனோன்மணி.

''இந்தாப் பாரு கணபதி. என் பொறுமைக்கு எல்லை ரொம்பக் குறைச்சல்னு உனக்கே தெரியும். நான் இவ்வளவு பொறுமையா கேட்டுக்கிட்டு இருக்கேன்றதுக்காக என்னை ரொம்பச் சோதிச்சன்னா நல்லா இருக்காது பார்த்துக்க. நீ என்ன நினைக்கிறேன்னு உன் வாயை திறந்து சொல்லாம வழியில் போறவன் வாயைத் திறந்தா சொல்ல வைக்க முடியும். நல்லா வாயைத் தொறந்து சொல்லப்போறயா இல்லையா'' இடுப்பில கை ஊன்றி எழுந்து நின்று முறைத்த தாயைப் பயத்துடன் பார்த்தார் கணபதி.

''அம்மா. நான் எது நடக்கக்கூடாதுன்னு நினைச்சுப் பயந்தேனா அது நடந்துவிட்டது அம்மா.''

''எது நடக்கக் கூடாதுன்னு நினைச்ச?'' கோபம் குறையாமல் கேட்டார் மனோன்மணி.

''அதான்மா. அந்தப் பயல் கோகுலுக்கு நம்ம மோகனாவை தரக்கூடாதுன்னு நினைச்சோமில்ல...''



''நினைச்சோம் இல்ல. நினைச்சேன். சரி மேல சொல்லு'' தாயின் வார்த்தையைப் புரியாமல் தொடர்ந்தார் கணபதி.

''சரிம்மா நான் நினைச்சேன். ஆனா அது பொய்யாப் போயிடும் போல இருக்கேம்மா...''

''எத வச்சுச் சொல்ற...'' கண்கள் இடுங்கக் கேட்டார் தாய்.

''நான் என் கண்ணாறப் பார்த்தேம்மா. அந்தக் கண்றாவிக் காட்சிய என் கண்குளிர காலைல பார்த்தேன்.''

''என்ன காட்சிடா? நீ எதைப்பத்தித்தான் சொல்ற? கொஞ்சம் புரியறாப்புல தான் பேசித்தொலை.''

''அதான்மா. அந்த கோகுல் பயலும் நம்ம மோகனாவும் ஒண்ணா நம்ம வீட்டுத் தோட்டத்துல நின்னு சிரிச்சுப் பேசிக்கிட்டு இருந்ததப் பார்த்தேன்.''

''ப்பூ! இதுக்குத்தான் இவ்வளவு அலப்பறயா. நான் கூட என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன். டேய் ரெண்டு பேரு தோட்டத்துல நின்னு பேசிக்கிறது தப்பாடா? எந்தக் காலத்துல இருக்க நீ?''

''அம்மா. எனக்கும் நாலு நல்லது கெட்டது தெரியும். அதுவும் என் மக எடுத்து வைக்கிற காலடி ஓசையைக் கேட்டே அவ மனசுல இருக்கற ஆசை என்னன்னு சொல்றவன் நான். நான் எப்படிப் பொய் சொல்வேன்?''

''காமாலைக்காரனுக்கு பார்க்கிறது எல்லாமே மஞ்சளாத்தான் தெரியுமாம். அதுபோல நீ எல்லாரையும் சந்தேகமாவே பார்த்தா எல்லாம் தப்பாத்தான் தெரியும். நம்ம புள்ளய நாமளே தப்பா நினைக்கலாமா. நீ உன்

புத்தியக் கடன் குடுத்துட்டியா?'' மகனைக் கோபக் கண்களால் எரித்தார் தாய்.

''அம்மா ப்ளீஸ். நான் சொல்வதை தயவு செய்து நம்புங்க. நம்ம மோகனா அவன்கிட்ட தன் மனதைப் பறிகொடுத்து இருப்பது உண்மை. அதை நான் அவ கண்கள்ல தெரிஞ்ச காதலைப் பார்த்துத்தான் இவ்வளவு உறுதியா சொல்றேன்.''

மகனின் முகத்தை யோசனையுடன் பார்த்தபடி அமைதியாகச் சிறிதுநேரம் அமர்ந்து இருந்தார் மனோன் மணி. மோகனா விசயத்தில் உண்மை இல்லாமல் இவ்வளவு உறுதியாக கணபதி சொல்ல மாட்டான் என்று அவரது உள்ளத்திற்கு நன்றாகத் தெரிந்தது. ஆனால் மோகனமலர் எப்படி ஒரு நாளைக்குள் கோகுலின் மீது காதல் கொண்டிருக்க முடியும் என்று அவரது உள்ளம் அவரைக் கேள்வி கேட்டது.

''கணபதி நான் சொல்வதைக் கவனமாக் கேளு. நீ பார்த்தது உண்மைன்னா நாம கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டும். ஏன்னா நம்ம பொண்ணு கண்டதே காட்சி கொண்டதே கோலம்னு தறிகெட்டு அலையுற புள்ள கெடையாது. இந்த ஒருநாளுக்குள்ள அது மனசு அந்த கோகுல் கிட்ட போயிருக்குன்னா அதுக்கு அந்தப் புள்ள மேல சின்ன வயசுலயே அன்பு இருந்திருக்குன்னு தான் அர்த்தம்.?''

''என்னம்மா சொல்றீங்க? சின்ன வயசுலயா?''

''அட ஆமாய்யா. இந்த கொஞ்ச வருஷமாத்தான நாம ரெங்கநாதன் வீட்டுக்கு போகவர இருக்கறது இல்ல. அதுக்கு முன்னாடி நாம எல்லோரும் ஒண்ணுக் கொண்ணா பழகினோம். அப்பவே நம்ம மோகனாவுக்கு அது மனசுல அத அறியாமலேயே கோகுல் மேல ஒரு நாட்டம் இருந்திருக்கலாம். எது எப்படியோ இப்ப நம்ம புள்ள அவன்மேல ஆசைப்பட்டுருக்கு. இதுக்கு நாம என்ன செய்யப்போறோம்?''



''நாம ஒண்ணும் பண்ண முடியாதும்மா. எனக்கு இதுல உடன்பாடு இல்லை'' திடமான குரலில் கூறிய கணபதியை திகைப்புடன் பார்த்தார்கள் அவரது அன்னையும், மனைவியும்.

# 26

கணபதியின் எண்ணம் ஆரம்பத்திலேயே என்ன வென்று மனோன்மணிக்கும், அகல்யாவிற்கும் தெரியும். ஆனால் அப்பொழுது அவர்கள் கோகுலை வளர்ந்த முழுமையான ஆண்மகனாகப் பார்க்கவில்லை. பார்த்துப் பழகிய பிறகோ அவனே இந்த வீட்டிற்கு மருமகனாக வந்தால் நன்றாகத்தானே இருக்கும் என்று அவர்களால் ஆசை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. கோகுல் அவர்கள் அனைவரையும் ஒவ்வொரு வகையில் வசீகரித்து இருந்தான். எப்படியாவது தன் மகனுக்கு எடுத்துச் சொல்லி புரியவைத்துவிடும் தீர்மானத்துடன் கணபதியை நிமிர்ந்து பார்த்தார் அவரது அன்னை.

''இப்படி எடுத்தேன் கவுத்தேன்னு பேசினா எப்படி கணபதி. இதுல நம்ம பொண்ணோட வாழ்க்கை

அடங்கி இருக்குய்யா. ஒரு தடவைக்கு நூறு தடவையா நல்லா யோசனை பண்ணிப் பேசணும்.''

''என்னத்தம்மா யோசனை பண்ணுறது. அதான் என் கண்ணால அந்தப் பையன அன்னிக்கு சென்னையில பார்த்த கோலத்தைச் சொன்னேனே. அதுக்குள்ள அதை எல்லாத்தையும் மறந்துட்டீங்களா?''

''இந்த மனோன்மணி எதையுமே எப்பவுமே மறக்க மாட்டேன்னு உனக்கே நல்லாத் தெரியும் கணபதி. ஆனா நீதான் ஒரு விசயத்தை மறந்துட்ட, நம்ம மோகனா அந்தப் புள்ள கோகுலை விரும்புது.''

''அதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பெரிய ஆராய்ச்சி எல்லாம் பண்ணிச் சொன்னீங்களே? சின்ன வயசுலயே விரும்பியிருக்கலாம்னு... ஆனா நான் என் பொண்ணை அப்படியெல்லாம் வளர்க்கலை. இந்தப் பயதான் என்னமோ பண்ணி அது மனசைக் கலைச்சிருக் கான்'' கோபத்துடன் பல்லைக் கடித்தார் கணபதி.

''இதுக்குத்தான்யா நான் அதையெல்லாம் சொன் னேன். அந்தப் புள்ளைக மேல எந்தத் தப்பு இருக் காதுன்னு உனக்கு புரியவைக்கத்தான் நான் அம்புட்டு தூரம் எடுத்துச் சொன்னேன். அப்படியிருந்தும் நீ இப்படி வீம்பு பிடிச்சா எப்படிப்பா?''

''இது வீம்பு இல்லம்மா. முன் எச்சரிக்கை. என் மக ளோட வாழ்க்கையைக் காப்பாத்துறதுக்கு நான் எடுக்கிற முன் எச்சரிக்கை. நெருப்புன்னு நல்லாத் தெரிஞ் சிருந்தும் என் மகளை அதுல இறக்கிவிடற தவறைச்



செய்ய நான் தயாராக இல்லை'' கூறிய கணவனின் முகத்தை பயத்துடன் ஏறிட்டாள் அகல்யா.

''நான் சொல்றதைக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. அந்தப் புள்ளையோட கெட்டிக்காரத்தனத்தைப் பத்தி நீங்களே நேத்து ராத்திரி பூரா பேசிக்கிட்டு இருந்தீங்களே. அவ்வளவு புத்திசாலியான புள்ளை தன் தப்பைத் திருத்திக்காதா?'' மெல்லிய குரலில் கேட்டாள் அகல்யா.

''ஏண்டி நாம என்ன எல்லோரையும் திருத்தற மகாத் மாவா? அப்படி அவனைத் திருத்தி அதுக்குப் பிறகு நம்ம பொண்ணை அவனுக்குத் தரணும்னு என்னடி அவசியம்?''

''என்ன அவசியம்னு என் மருமகளை ஏண்டா குடையற? போய் உன் மகளைக் கேளு. அவ சம்மதிச்சா நீ வேற எந்த மகராசனுக்கு வேணும்னாலும் உன் பொண்ணக் குடு. எங்களுக்கு அதுல முழு சம்மதம்'' கூறிய அன்னையை தன் தலையை உயர்த்திப் பார்த்த கணபதியின் முகத்தில் தாங்க முடியாத வேதனையைக் கண்ட மனோன்மணியின் கண்கள் கலங்கி விட்டன.

''அந்தக் கொடுப்பினையைத் தான் எனக்கு என் மகள் தரலியேம்மா. நான் என்ன அவ்வளவு புண்ணியமா பண்ணியிருக்கேன்.''

''அப்பா... ராசா. நம்ம புள்ள மோகனா கள்ளம் கபடம் இல்லாத தேவதைப் பொண்ணுப்பா. அத என்னிக் குமே நீ தப்பா நினைக்காத. உனக்கு விருப்பம் இல்

லைன்னு சொன்னா மோகனா அந்தப் பையனை விட்டு விலகிரும்'' சொன்ன அன்னையின் முகத்தை ஆவலுடன் பார்த்தார் கணபதி.

''அப்படியாம்மா. நான் சொன்னா மோகனா கேட்டுக்குமா? அந்தப் பையனை மறந்துருமா?'' வேகமாக கேட்ட மகனை நிதானமாகப் பார்த்தார் மனோன்மணி.

''அந்தப் பையனை மறக்குமோ மறக்காதோ எனக்குத் தெரியாது. ஆனால் உன் வார்த்தையை மீறி மோகன மலர் என்னிக்குமே முடிவெடுக்காது. அதுமட்டும் எனக்கு நல்லாத் தெரியும்'' அழுத்தமாக சொன்ன அன்னையின் வார்த்தைகளால் கணபதியின் முகம் ஆனந்தத்தில் பூரித்தது.

பெற்று வளர்த்த தன் அருமை மகள் தன்னை மீறி தான் விரும்பாத ஒருவனைக் காதலித்து விட்டால் ஒவ்வொரு தந்தையின் இதயமும் வேதனையில் சுக்கல் சுக்கலாகிவிடும். அந்தப் பெண்ணையே வெறுத்து விடும் நிலைக்குக் கூட அவர்களது வேதனை அவர்களைத் தள்ளி விடும். அப்படியொரு சூழ்நிலை தன் பேத்திக்கு வந்து விடக்கூடாது என்பதைப் புரிந்து கொண்ட மனோன்மணி தன் மகனின் புண்பட்ட மனத்தினை குணமாக்கும் வார்த்தைகளை மயிலிறகால் வருடுவது போல் மிக மென்மையாக உரைத்தாள். அவளது எண்ணம் வீண் போகாமல் கணபதியின் முகம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவடைந்தது.

''நீங்க சொல்றது உண்மைதான்.மா. என் மோகனா என் வார்த்தையை மீறாது'' பெருமையுடன் உறுதியாகக் கூறினார் கணபதி.



சொல்ல முடியாத வேதனையுடன் மாமியாரின் முகத்தைக் கண்கலங்கப் பார்த்தாள் அகல்யா. அவளுக்கு தன் மகளின் குணம் நன்றாகத் தெரியும். அவள் எப்படிக் கணபதியின் வார்த்தைகளை மீறமாட்டாளோ, அப்படியே வேறு ஒருவனை தன் மனதாலும் இனி எண்ண மாட்டாள். எங்கே தன் மகளின் வாழ்க்கை மற்றொரு வகையில் வீணாகிவிடுமோ என்ற பரிதவிப்புடன் அவள் கண்கள் கண்ணீர் வடித்தன.

மருமகளின் எண்ணங்களை அவள் சொல்லாமலேயே புரிந்து கொண்ட மனோன்மணி அவளது கைகளை கணபதி அறியாமல் நம்பிக்கையுடன் தட்டிக் கொடுத்தார். கண்களே நான் இருக்கிறேன் என்று நம்பிக்கையுடன் அகல்யாவைப் பார்த்து அவளது தாய் மனத்திற்கு தைரியம் கொடுத்தது.

''அப்பச் சரிம்மா. நான் நம்ம மோகனாவ கூப்பிட்டு பேசிடறேன். அப்படியே வேற நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யறேன்'' உற்சாகத்துடன் பேசிய கணபதியை இடைமறித்தது மனோன்மணியின் குரல்.

''கொஞ்சம் பொறு கணபதி. நான் இன்னும் முழுசாப் பேசி முடிக்கலியே.''

கூறிய அன்னையை குழப்பமான மனதுடன் நிமிர்ந்து பார்த்தார் கணபதி. தன் மகளின் வாழ்வு சீராக வேண்டுமே என்ற பிரார்த்தனையுடன் மாமியாரின் முகத்தை கெஞ்சுதலாகப் பார்த்தாள் அகல்யா. இருவரின் பார்வையும் மனோன்மணியின் முகத்தில் நிலைத்தது.



# 27

அன்பு. அதுதான் ஒரு மனிதனின் வாழ்வில் எத்தகைய மாற்றங்களை உண்டாக்கி விடுகிறது. எத்தனையோ தொழில்களை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த கணபதி தன் மகள் மீது கொண்ட பாசத்தினால் ஒன்றும் அறியாத குழந்தையைப் போல செய்வது அறியாமல் திகைத்துப் போய் அமர்ந்திருப் பதைப் பார்த்த மனோன்மணியின் உள்ளம் அலை கடல்போல் கொந்தளித்தது.

ஒன்றும் புரியாமல் தன் முகத்தைக் குழந்தை போலப் பார்த்துக்கொண்டு இருந்த கணபதியைப் பார்த்து பெருமூச்சு விட்டாள்.

''என்னம்மா? நீங்க என்ன பேசணுமோ சீக்கிரமாப் பேசுங்க'' ஆவலுடன் கேட்டார் கணபதி.

''அது ஒண்ணும் இல்ல கணபதி. நான் சொல்ல வர்றதை நீ புரிஞ்சுக்குவியா இல்லை கோபப்படுவி யான்னு தான்...'' தயங்கினார் மனோன்மணி.

''என் கோபத்துக்கு நீங்க ரொம்ப பயந்தவங்களாம்மா? சொல்ல வந்ததை சீக்கிரமாய் சொல்லுங்க.''

''கணபதி...'' யோசனையான குரலில் மெதுவாக அழைத்தார் மனோன்மணி.



''என்னம்மா? சொல்லுங்க?''

''நம்ம பொண்ணு அனிச்ச மலர் மாதிரி. தொட்டால் கூட வாடிவிடும் தன்மையுள்ள பூ அது. தெரியும்ல? அதுபோல ஒரு சுடுசொல் தாங்காத தங்கம் அது. அதைத் தன்னோட கண்ணுக்குள்ள வெச்சுப் பாதுகாக்குற குடும்பத்தில் அதை கொண்டு போய் சேர்த்தாத்தான் நம்ம வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் கிடைக்கும்.''

''அதுக்காகத்தானம்மா நான் இவ்வளவு தூரம் போராடறேன்'' பேசிய கணபதியைக் கை உயர்த்தித் தடுத்தார் மனோன்மணி.

''நான் முழுசா பேசிடுறேன் கணபதி. அதுக்கு அப் புறமாய் நீ உன் மனசுக்கு என்ன தோணுதோ அதுப்படி செய்.''

''சரிங்கம்மா. சொல்லுங்க'' அமைதியானார் கணபதி.

''அந்த நல்ல குடும்பமா நம்ம ரெங்கநாதனும் லட்சுமியும் இருப்பாங்கன்னு எனக்குத் தோணுது கணபதி. இரு கணபதி. நான் பேசிக்கிறேன். ஏன் நான் அப்படிச் சொல்றேன்னா சின்னப்புள்ளையில் இருந்து நாம மோகனாவை எப்படிப் பொத்திப்பொத்தி வளர்த் தோம்னு லட்சுமிக்கும் அவ புருஷனுக்கும் நல்லா தெரியும். அப்படி இருக்கும் போது அவங்க நம்ம தங்கத்தைத் தரம் குறையாம பார்த்துக்குவாங்க.''

''அம்மா. நீங்க என் மேல கோபப்பட்டாலும் சரிம்மா. என் பேச்சையும் நீங்க கேளுங்க. ஒரு பொண்ணுக்கு குடும்பம் எவ்வளவு முக்கியமோ அதை விட புருச னோட அன்பும் முக்கியம் தானம்மா?''

''நான் இல்லைன்னு சொல்லல கணபதி. அந்தப் புள்ள கோகுலும் பார்க்கறதுக்கு நல்லபுள்ள மாதிரித்தான் தெரியுது. அப்படியே கொஞ்சம் அப்படி இப்படி இருந்துச்சுன்னாலும் கல்யாணத்துக்கு அப்புறம் தானே திருத்திக்கும் கணபதி.''

''சரிங்கம்மா. நீங்க சொல்கிறபடியே நான் வெச்சுக் கிட்டாலும், கல்யாணத்துக்கு அப்புறமாய் அவன் திருந்தலைன்னா நம்ம பொண்ணோட கதி என்ன?''

''நம்பிக்கைதான் வாழ்க்கைப்பா. நாம நல்லதே நினைப்போம். மீதியை மேல இருக்கற ஆண்டவன் பார்த்துக்குவான்.''

''அப்படியெல்லாம் என்னை ஏமாத்திக்க நான் தயாரா இல்லம்மா. உங்களோட நம்பிக்கைக்காக நான் மோக னாவைப் பணயம் வெக்க மாட்டேன்.''

''அட மடையா. நான் மோகனாவைப் பத்தி யோசிக் காமலா பேசறேன். என் பேத்தி தான் என்னோட உசிர்னு உனக்கும் தெரியாதா? நீ வேற ஒரு மாப்பிள்ளைப் பார்த்தால் அவன் மட்டும் நல்லவனான்னு எப்படி நம்புறது? ஒருவேளை கல்யாணத்துக்கு அப்புறம் அவன் கெட்டவனா மாறிட்டா நாம என்ன செய்வோம்?''

''அம்மா நீங்க கோகுலை மட்டுமே மனசில் வெச்சுக் கிட்டுப் பேசுற மாதிரி இருக்கு.''

''இல்லய்யா கணபதி. நான் நம்ம மோகனாவை மட்டும் தான் நெனைச்சிக்கிட்டுப் பேசறேன். ஏன்னா நம்ம மோகனாவைப் பற்றி நான் உன்னைவிட நல்லா புரிஞ்சு வச்சிருக்கேன்...''



''அம்மா...''

''ஆமாண்டா. உன் அம்மா சொல்வதைக் கேளு. நீ மோகனாகிட்டப் போய் கோகுலை கல்யாணம் பண் ணிக்க வேண்டாம்னு சொன்னா அவ நிச்சயம் அவனை திரும்பிக்கூட பார்க்க மாட்டா.''

''அப்புறம் என்னம்மா பிரச்சினை?''

''பிரச்சினையே அதுக்கு அப்புறம் தானப்ப. அவ கோகுலைத் திரும்பிப் பார்க்கவும் மாட்டா. அதேபோல வேற யாரையும் மனசால கூட நினைக்கவும் மாட்டே ளேப்பா.''

''அம்மா...'' அலறினார் கணபதி.

''நாம நம்ம பொண்ணை அப்படித்தான வளர்த் திருக்கோம் கணபதி. கண்டேத்தமா திரியிற கழுதை மாதிரியா வளர்த்திருக்கோம். அவளை பூஜையறையில இருக்கற நம்மளோட குலதெய்வமா இல்ல வளர்த்திருக் கோம். சாமி என்னிக்காவது குடுத்த வரத்தை திரும்ப வாங்கியிருக்கா?''

''இப்ப என்னை என்னதான்ம்மா செய்யச் சொல் றீங்க.''

''நீ எதுவும் செய்ய வேண்டாம். அமைதியா இரு. நாளைக்கோ மறுநாளோ ரெங்கநாதன் வந்திடுவான். அவன் வரட்டும். அவனோட வாய்ப்பிறப்பில் இருந்து என்ன வார்த்தைகள் வருதோ பார்ப்போம். அதுக்குப் பிறகு நாம என்ன செய்யணுமோ முடிவெடுத்துக்கு வோம்.''

''அப்ப இந்தக் கோகுலுக்குத் தான் நம்ம மோக னாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்னு முடிவே பண்ணிட்டீங்களா?'' மனம் ஆறாமல் கேட்ட மகனை வெறித்தாள் மனோன்மணி.

''கருப்பட்டியிலும் கூட கல் இருக்கும் ராசா. நாமதான் பக்குவமாக் காய்ச்சி எடுத்து அதைப் பக்குவமா பிரிச்சு எடுக்கணும். தெரியாத ஒரு புள்ளைக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டு அப்புறமா அவனோட குணத்தைப் பத்தி கவலைப்படுறத விட தெரிஞ்ச பிள்ளைக்குக் கொடுத்து அத நம்ம வழிக்குத் திருத்தப் பார்ப்போம். என்னப்பா நான் சொல்றது சரிதான?''

''என்னமோம்மா. நீங்க சொல்றதும் சரியாத்தான் தோணுது. இருந்தாலும்'' மனம் சமாதானம் ஆகாத தன் கணவரின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் அகல்யா.

''அத்தை சொல்வதைக் கேளுங்க. இவ்வளவு நேரம் நான் பேசாம இருந்தது நீங்க ஒரு நல்ல முடிவை யோசனை பண்ணி எடுப்பீங்கன்னு நம்பித்தாங்க. ஆனா நீங்க என்னடான்னா இன்னும் அரை மனசாவே இருக் கீங்களே?'' கண்கலங்கக் கேட்ட அகல்யாவைத் தடுத்தார் மனோன்மணி.

''அவனை அவன் போக்குல விட்டுவிடு அகல்யா. நாலையும் யோசிச்சு அவனே முடிவு பண்ணினா நல்லது தானே'' முடிவாகக் கூறிவிட்டு அறையைத் திறந்து வெளியேப்போன மாமியாரைத் தொடர்ந்து தானும் கணவரைத் தனியே விட்டு விட்டு வெளியேறினாள் அகல்யா.



# 28

மோகனமலர். இந்த ஒரு வார்த்தையில் தன் உயிரையே அடக்கி வைத்திருந்தார் கணபதி. அவள் கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வந்தாலும் தன் உயிரே போனதுபோல தவித்துப் போய்விடுவார் கணபதி. அவள் பிறந்தது முதல் இன்றுவரை அவளைத் தொட்டு ஒரு அடிகூட, ஏன் அவளைப் பார்த்து ஒரு சுடுசொல் கூட சொன்னதில்லை கணபதி. அப்படிப் பட்ட மகள் இன்று தப்பான ஒருவனை தன் கணவனாக தேர்ந்தெடுத்து விட்டாளோ என்று கணபதியின் மனம் எல்லையில்லா துயரம் கொண்டது. ஆனால் விவரம் தெரிந்த நாள் முதல் அவள் கேட்ட எதையும், ஆசைப் பட்ட எதையும் இல்லை என்று சொல்லியிராத அவர் இன்று அவள் ஆசைப்பட்ட கணவனையும் கொடுத்து விடலாம் என்று முடிவெடுத்து ஒரு பெருமூச்சுடன் தானும் அறையைவிட்டு வெளியேறினார் கணபதி.

இவ்வளவு வாக்குவாதம் தன்னைப் பற்றி அங்கு நடப்பதை அறியாதவனாக தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான் கோகுல். அந்த அலுவலகத்தில் அவன் நுழைந்து தன் விசிட்டிங் கார்டைக் கொடுத்த வுடன் அந்த சூழ்நிலையே சுவிட்ச் போட்டது போல மாறியது. அவனை ராஜ உபசாரத்துடன் வரவேற்று அமரவைத்து அவனுக்கு வேண்டிய அனைத்தையும்

ஒரு மணி நேரத்தில் முடித்துக் கொடுத்தார் அந்த அலுவலக மேலாளர். அவனும் தன் பங்குக்கு அவரை எந்த வகையில் உபசாரம் பண்ண முடியுமோ அந்த வகையில் நன்றாக கவனித்து விட்டு வெளியேறினான். சென்ற ஒரு மணி நேரத்தில் தன் வேலையை செவ்வனே முடித்துக் கொண்டு வந்த கோகுலை மனதிற்குள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை கணபதியால். அவர் காலையில நடந்து கொண்டதைப் போல அமைதியாக இருக்காமல், தன்னுடன் இணக்கமாக பேசியதில் உள்ளூர நிம்மதியானான் கோகுல்.

''லீகல் பார்மாலிட்டீஸ் எல்லாம் பார்த்தாச்சு அங்கிள். எல்லாம் பக்காவா இருக்கு. ஒரு பிராப்ளமும் இல்லை.''

''நான் இதைத் தெரிஞ்சுதான் ரெங்கநாதன் இந்தச் சொத்தை வாங்குறத தடுக்கலை கோகுல்.''

''தேங்க்ஸ அங்கிள். அப்போ நான் அப்பாவை போன் பண்ணி வரச் சொல்லவா?''

''ம்ம்... தாராளமா வரச் சொல்லு. ஆனா அதுக்கு முன்னாடி ஒரு அமௌண்ட்டை அட்வான்ஸா கொடுத்திட்டா நாம பத்திரம் எழுதிவைக்கத் தோதா இருக்கும்.''

''அதுக்கென்ன அங்கிள். செய்துட்டாப் போச்சு. நான் வரும்போதே செக் புக் எடுத்துட்டுத்தான் வந்தேன்.''

''அதுக்கில்லப்பா. அட்வான்ஸ் கொடுக்கிறப்போ உங்க அப்பா இங்க இருந்தான்னா... அதனால அவனைக் கொஞ்சம் சீக்கிரமா வரச்சொன்னா நல்லாயிருக்கும்.''



''நோ நோ அங்கிள். டாடி வர்றபோது வரட்டும். நாம அவங்களுக்கு இன்பார்ம் பண்ணிட்டு, உங்க கையால அட்வான்ஸைக் கொடுத்துடலாம்.''

''அதெல்லாம் சரிவருமா கோகுல்'' தயங்கிய கணபதியை உறுதியுடன் தடுத்தது கோகுலின் குரல்.

''எனக்கு அப்பாவும் நீங்களும் ஒண்ணுதான் அங்கிள். அப்பாவைக் கேட்டாலும் அவரும் இதைத்தான் சொல்வார்.''

''ரொம்பத் தேங்க்ஸ்ப்பா'' கோகுலின் வார்த்தைகளைக் கேட்ட கணபதி நெகிழ்ந்து போனார்.

''இதுக்கெல்லாம் தேங்க்ஸ் எதுக்கு அங்கிள். எனக்கு உங்களுக்கும் அப்பாவுக்கும் நடுவுல இருக்கற நட்பைப் பத்தி நல்லாத் தெரியும் அங்கிள்'' கூறியவாறு தனக்காக ஒதுக்கியிருந்த அறைக்குற் சென்று செக் புக்கோடு வெளியே வந்தான் கோகுல்.

''பாட்டி... பாட்டி... கொஞ்சம் இங்க வாங்களேன்'' கூப்பிட்ட குரலுக்கு உடனே வந்து நின்ற மனோன்மணியை வியப்புடன் பார்த்தான் கோகுல்.

''வாவ்... பாட்டி. இந்த வயசிலயும் உங்களுக்கு இருக்கும் எனர்ஜி எங்களுக்கெல்லாம் கிடையாது.''

''சும்மா ஐஸ் வெக்காத பேராண்டடி. எனக்கு குளிர்ச்சி ஒத்துக்காது.''

''ஹை... ஜோக்கு?'' கேட்ட கோகுல் வாய்விட்டுச் சிரித்தான். சிரிக்கும் போது தனி அழகுடன் திகழ்ந்த அவனது முகத்தை கண் இமைக்காமல் பார்த்தார் கணபதி.

"அதெல்லாம் சரிப்பா. இப்ப என்னைய எதுக்காகக் கூப்பிட்ட?"

"வேற ஒண்ணும் இல்ல பாட்டி. நானும் அங்கிளும் எஸ்டேட்டுக்காக அட்வான்ஸ் கொடுக்கப்போறோம். அதான் வீட்டுக்குப் பெரியவங்க உங்க கையால தொட்டு வாங்கலாம்னு கூப்பிட்டேன்'' கூறிய கோகுலை கன்னம் தொட்டு முத்தமிட்டாள் மனோன் மணி.

"எவ்வளவு படிச்சிருந்தாலும் இத்தனை பண்போட உன்னை வளர்த்திருக்கிற உன் பெத்தவங்களை நான் பாராட்டத் தான் வேணும் ராசா."

"இல்ல பாட்டி... அவங்க என்னைக் கரெக்டாத் தான் வளர்த்தாங்க. ஆனா நீங்க பாராட்டக்கூடிய அளவுக்குப் பண்பானவனா நான்...'' தொண்டை கம்மக் குரல் அடைக்கக் கூறிய கோகுல் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். பின் ஒரு தீர்மானத்துடன் தலை நிமிர்ந்த அவனை முதல் முறையாக நம்பிக்கையோடு பார்த்தார் கணபதி.

"இட்ஸ் ஓகே... பாட்டி. போனதெல்லாம் போகட்டும். ஆனா இனிவரும் காலங்களில் நான் நீங்க பாராட்டுற அளவுக்கு பண்புள்ளவனா நடந்துக்குவேன் பாட்டி. இது என் மேல சத்தியம்'' உணர்ச்சிவசப்பட்ட கணபதி கோகுலின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண் டார்.

எதிலும் புத்திசாலித்தனத்துடன் நடந்து கொண்டு தீயவர்களை தன் பக்கம் கூட அண்ட விடாமல்



வளர்ந்திருந்த தன் மகள் தன்னுடைய காதல் கண வனைத் தேர்ந்தெடுப்பதிலும் தவறு செய்யவில்லை என்று எண்ணிக் கொண்ட கணபதியின் மனதில் இருந்து ஒரு பெரிய பாறாங்கல் நீங்கியது போல நிம்மதியுடன் பெருமூச்சு விட்டார் அவர்.

## 29

நாள் முழுவதும் தன் கடமையைச் செய்த போர்வீரன் களைப்புடன் ஓய்வெடுக்க ஆயத்தம் ஆவது போல சூரியன் சோம்பலுடன் தன் கதிர்களை மறைய வைத்துக் கொண்டு இருந்தான். செந்நிறக் கதிர்களின் உபயத்தால் தன் மேனியும் தங்கம்போல ஒளிவீசிக்கொண்டு இருப்பதை உணராத அழகோடு தோட்டத்தில் தன் தம்பி அகிலோடு சிரித்து உரையாடியபடியே நடந்து கொண்டு இருந்தாள் மோகனமலர். அவள் வாய் அகில் கேட்ட கேள்விக்குத் தகுந்த பதில்களைக் கூறிக்கொண்டு இருந்தாலும், கண்களும், மனமும் பரபரப்புடன் கோகுலின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

காலையில் பார்த்த கோகுலின் நினைவோடு மாலை அவன் முகம் காண ஓடிவந்த மோகனாவுக்கு அவன் வீட்டில் இல்லாதது கண்டு மனம் சோர்ந்துவிட்டது. எத்தனையோ வருடங்களாக அவனைக் காணாதது போல் உள்ளம் அவன் முகம் காணத் தவித்தது. தன்

தவிப்பு அவனுக்கு இல்லாதை எண்ணி அவன்மேல் கோபத்தில் இருந்தாள் மோகனா. ஆனால் அவனும் தன்னைக் காண்பதற்காக தவியாய்த் தவித்துக் கொண்டு இருப்பதை பேதை அவள் அறியவில்லை.

வாள் பிடித்து நிற்கும் போதும் தன் காதலியை எண்ணிக் கலங்கும் வீரனைப் போல் தன் ஜீவன் போனாலும் தன் உயிர் அவள் காலடியில் தஞ்சம் அடைந்துவிடும் என்று பெருமூச்சுடன் எண்ணிக்கொண்டான் கோகுல். இந்தக் கற்பனையை பாட்டாக எழுதியவர் பெரிய காதலராக இருக்க வேண்டும் என்று புன்னகையுடன் நினைத்துக் கொண்டான் கோகுல். அவன் தன் வேலைகளை வேகமாக முடித்துக்கொண்டு வீடு தேடிப் பறந்து வந்தான்.

கார் வரும் ஓசையைக் கேட்டவுடன் மனமெல்லாம் ஆனந்தத்தில் துடிக்கும் தன் கண்களை மிகுந்த முயற்சியுடன் கட்டுப்படுத்திக் கொண்டாள் மோகனா. தன்னைக் காணும் ஆசையில்லாதவனை எண்ணி ஆசையுடன் அலைபாயும் தன் மனதை தனக்குள் அதட்டிக் கொண்டாள் அவள்.

'என்ன பெண் நீ? அவனுக்குத்தான் உன்னைப் பார்க்க ஆசையே இல்லையே? நீ மட்டும் ஏன் இப்ப அலைபாய்கிறாய்.'

''அலைபாயாமல் என்னசெய்வது? என் உடலும் உயிருமாய் ஒன்றாகக் கலந்துவிட்டவன் மேல் என்னால கோபம் கொள்ள முடியுமா?''

'அடி முட்டாள் பெண்ணே. நீ மட்டும் அவனை எண்ணி உருகினாள் போதுமா? அவனும் உன்னைப் போல் உருக வேண்டாமா?'



'உருகாமலா என்னை விழுங்குவது போல அப்படிப் பார்த்துக் கொண்டு நிற்கிறார். பக்கத்தில் அப்பா இருப்பது கூட தெரியாமல் எப்படிப் பார்க்கிறான் பார். திருட்டு ராஸ்கல்... இல்லையில்லை ... ஸ்வீட் ராஸ்கல்' மனதிற்குள் கேள்வியும் பதிலும் படமாக ஓட பார்வை மட்டும் கள்ளத்தனமாக கோகுலை விழுங்கிக் கொண்டு இருந்தது.

'எவ்வளவு அழகாக இருந்து தொலைக்கிறாள்!'

''பக்கத்தில் இவ அப்பன் வேற நந்தி மாதிரி இப்படி நிக்கறாரே?''

'கூடவே தம்பியையும் கூட்டிக்கிட்டு வந்து நிக்கிறாள் பார். சரியான மக்கு.'

'பார்வையிலேயே என்னைக் கொல்லாதடி. நான் நல்லவனா இருக்கணும்னு பார்க்கிறேன்.'

'ம்ஹூம். என்னை ரொம்பச் சோதிக்கிறடி. வேண்டாம் அப்படிப் பார்க்காத. நான் யார் இருந்தாலும் பரவாயில்லை என்று முடிவெடுத்து விடுவேன். ப்ளீஸ்டி... என் குண்டுப் பொண்டாட்டி.

மனதிற்குள் அவளைக் கொஞ்சிக்கொண்டே வெளிப்படையாக எதுவும் செய்ய முடியாதவனாகக் காதலுடன் அவளைப் பார்த்தான் கோகுல்.

அவர்கள் இருவரையும் கண்டும் காணாதவராக அவனை அழைக்காமல் தான் மட்டும் வேகமாக வீட்டிற்குள் நுழைந்தார் கணபதி.

கணபதி அகன்றவுடன் நிம்மதிப் பெருமூச்சுடன் கள்ளத்தனமாக வீட்டிற்குள் ஒரு பார்வை

பார்த்துக்கொண்ட கோகுல் ஆவலுடன் மோகனாவை நோக்கி விரைந்து சென்றான். அவன் அருகில் வந்ததைக் கவனிக்காதவள் போல மோகனா திரும்பித் தம்பியுடன் பேச ஆரம்பித்தாள்.

''என்னடி... என்னைப் பார்க்காதது போல இருக்க'' மெல்லிய குரலில் அகில் அறியாத வண்ணம் கேட்டான் கோகுல்.

''ஆமா... என்னைப் பார்க்கணும்னு ஆசையில்லை? உங்களைப் பார்த்தால் என்ன? பார்க்கவிட்டால் என்ன?''

அவனைப் போலவே மெல்லிய குரலில் கேட்டாள் அவள். அவளது கோபம் தன் ஆண்மையைத் தூண்டுவதை மிகவும் ரசித்தான் அவன்.

''அகில்... பாட்டி உன்னைக் கூப்பிடுவது போல் இல்லை?'' அகிலை வெளியேற்றுவதில் குறியாகச் சொன்னவனைப் பார்த்து தலைசாய்த்து சிரித்தாள் மோகனா. அவளது செயலால் கவரப்பட்டு அவளையே விழுங்குவது போல பார்த்த கோகுலுக்குத் தன்னைக் கட்டுக்குள் கொண்டுவருவது பெரும்பாடாக இருந்தது.

''அங்கிள். அந்த ஏலியன் கிட்ட இருந்து என்னைத் தயவு செய்து காப்பாத்துங்களேன். ப்ளீஸ்.''

''என்னடா இது? பாட்டியைப் போய் வேற்று கிரகவாசின்னு சொல்ற?'' சிரிப்பை அடக்கிக்கொண்டு கேட்டான் கோகுல்.

''அதுக்காக அந்தக் கிரகத்துல இருக்கறவங்கதான் அங்கிள் கவலைப்படணும். நல்ல வேளை. நான் இப்படிச் சொல்றது அவங்களுக்குத் தெரியாது. இல்லைன்னா என் மேல கேசே போட்டுருவாங்க அவங்க'' சீரியஸாக தன் முகத்தை வைத்துக்கொண்டு கூறிய அகிலைக் கட்டிக் கொண்டான் கோகுல்.



''டேய் நீ ரொம்பப் பேசறடா. யார்கிட்ட இப்படிப் பேச டியூசன் எடுத்துக்கிட்ட?''

''அடப்போங்க அங்கிள். இதெல்லாம் டியூசன் எடுத்து வர்றது இல்லை. எங்க அப்பத்தாவைப் பார்த்த பயத்துல தானா வர்றது.''

''ஹா... ஹா... ஹா...' இம்முறை சிரிப்பை கோகுலால் அடக்க முடியவில்லை. அவன் சிரிப்பதை ஆசையுடன் பார்த்தாள் மோகனா.

''ஹூம்... என்பாடு உங்களுக்கு ஜோக்கா இருக்குது. என் இடத்தில இருந்து பார்த்தாத்தான உங்களுக்கு என் கஷ்டம் தெரியும்'' பெருமூச்சு விட்ட அகில் அருகில் இருந்த பெஞ்சில் அமர்ந்து கொண்டான். அந்த நேரம் பார்த்து வெளியே வந்த மனோன்மணி,

''டேய் சோம்பேறிப் பயலே. என்னமோ நூத்துக் கிழவன் போல இப்படி உட்கார்ந்திருக்கே? என்ன வேலைய வெட்டி முறிச்ச?'' எனக்கேட்க, கோகுலைத் திரும்பிப் பார்த்தான் அகில். கோகுலால் சிரிப்பை அடக்க முடியாமல் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

''பார்த்தீங்கள்ல? இந்த அந்நிய சக்தியை எல்லாம் நாடு கடத்தாம என் உயிரைப் போட்டு வாங்குது இந்த உலகம்'' பெருமூச்சு விட்டான் அகில்.

# 30

கண்களில் நீர் மல்க மனம் விட்டுச் சிரித்துக் கொண்டு இருந்த கோகுலை மென்மையாகப் பார்த்தாள் மோகனா. அவளது குண்டுக் கன்னங்களில் இந்த மென்மை தனி சோபை அழிப்பதை உணர்ந்த கோகுல் அந்தக் கன்னத்தில் முத்தமிட ஆசை கொண்டான்.

"மோகனா... என் மோகனமலர்" கிறங்கிய குரலில் மோகனாவின் காதோரம் கிசுகிசுப்பாக அழைத்தான் கோகுல். அவசரமாக அகிலைப் பார்த்தாள் மோகனா. அவன் தன் சோகத்தில் மூழ்கியவனாக எங்கோ வெறித்துக் கொண்டிருந்தான்.

"டேய்... மோகனா... நான் கூப்பிடுறது கேட்குதா இல்லையா?"

"ம்ம்ம்... கேக்குது" மெல்லிய குரலில் முணுமுணுத்தாள் மோகனா.

"என் மேல இருந்த கோபமெல்லாம் போயிருச்சா."

"இன்னும் இல்ல."

"ஏய் நான் என்னடி பண்ணுவேன். வேலை முடிய லேட் ஆகிருச்சு. நானும் தான் உன்னைப் பார்க்காம தவிச்சுப் போய் இருக்கேன்" - கூறிய கோகுலைத் தன் பெரிய கண்களை விரித்துக் காதலுடன் பார்த்தாள் மோகனா.



"அப்படிப் பார்க்காதடி. என்னால முடியல."

"என்ன முடியலயாம்."

"எதுவுமே முடியலடி. அப்புறம் பகல்னு கூடப் பார்க்க மாட்டேன்."

"பார்க்காம..." வெட்கத்துடன் இதழ் கடித்தாள் மோகனா. அவள் இதழ்களை ஆசையுடன் பார்த்தான் கோகுல்.

"ம்ம்... பார்க்காம நீ கடிக்கிற உன் உதட்டை நான் செல்லமாக் கடிச்சிடுவேன்" அவன் பேசிக்கொண்டிருக்காமல் செய்தால் தான் என்ன என்று ஏங்கினாள் மோகனா.

"கடிப்பீங்க... கடிப்பீங்க. நீங்க கடிக்கிற வரைக்கும் நான் காட்டிக்கிட்டு நிற்பேனாக்கும்."

"அதைத்தான் நான் நேத்து நைட்டே பார்த்தேன். நீ எப்படியெல்லாம் நிற்பேன்னு" அவள் கன்னங்கள் வெட்கத்தில் சிவப்பதை ஆசையுடன் பார்த்துக் கொண்டே கூறிய கோகுலின் கைகளில் கிள்ளினாள் மோகனா.

"ஸ்ஸ்... என்னடி இது? நான் நடந்ததைத் தானே சொன்னேன்" பொய்க் கோபத்துடன் கண்களை உருட்டினான் கோகுல்.

"அப்படியே உருட்டற கண்ணை நோண்டிருவேன். நடந்ததைச் சொன்னாராம். பெரிய உண்மை விளிம்பி இவர்" கூறிவிட்டுச் சிரித்தாள் மோகனா.

ஏனோ அவள் கூறிய வார்த்தைகள் தன் நெஞ்சில் ஈட்டியைப் போல பாய்வதைப் போல் உணர்ந்தான்

கோகுல். அவனால் மோகனாவுடன் இணைந்து சிரிக்க முடியவில்லை. அவனது மௌனத்தை வேறுபாடாக உணர்ந்த மோகனா கோகுலைப் பார்த்தாள்.

"சரி சரி. போனால் போகுது. நான் உங்கள் கண்களை நோண்டிவிட மாட்டேன். பிழைச்சுப் போங்க" கையைத் தூக்கி வரம் கொடுப்பவள் போல அபிநயம் செய்த வளின் தலையில் செல்லமாகத் தட்டிச் சிரித்தான் கோகுல்.

"போக்கிரி. இவ்வளவு சேட்டையை உள்ளுக்குள் வைத்துக் கொண்டு வெளியே அப்பாவிபோல் வேஷம் போடுறியா" கேலியாய்க் கேட்டான் கோகுல்.

"நீங்க மட்டும் ஒண்ணும் தெரியாதவராக்கும். நீங் களும் தான் இல்லாத சேட்டை பண்ணிட்டு ஒண்ணும் தெரியாத அப்பாவிபோல் இருக்கீங்க" முதல் நாள் இரவின் நினைவில் நெஞ்சம் இனிக்கக் கூறினாள் மோகனா.

'என்ன இவள்! இன்னிக்கு இவளோட பேச்சு எல் லாமே என்னைக் குத்திக் காண்பிக்கிற மாதிரியே இருக்கே!' மனதிற்குள் குற்ற உணர்ச்சியால் குமைந்தான் கோகுல்.

ஆனால் அவனது மனநிலை அறியாமல் அவன் தன்னை ரசித்துப் பார்ப்பதாக எண்ணி வெட்கத்துடன் தலை குனிந்து கீழ்க் கண்களால் ஆசையுடன் கோகுலைப் பார்த்தாள் மோகனா.

சரியாக அதேநேரத்தில் 'கணபதி விலாஸ்' என்ற பெயர்ப்பலகை தாங்கிய அவர்களது அந்தப் பெரிய



மாளிகையின் முன் சிறிது நின்றுப் பின் மெதுவாக நகர்ந்தது அந்த இண்டிகா கார். சிறிதளவே இறக்கி விடப்பட்டு இருந்த அந்த காரின் கண்ணாடிகளுக்கு இடையே இருந்து மெல்ல வெளியே எட்டிப்பார்த் தவளின் கண்கள் பொறாமையால் சிவந்தது. அவள் கோபத்துடன் தன் கை முஷ்டியை மடக்கி காரின் சீட்டில் ஆத்திரத்துடன் குத்தினாள். அவளது ஆத்திரத்தைத் திரும்பிப் பார்த்த காரோட்டி கேலியாகச் சிரித்தான்.

"என்ன மாலினி? கடைசியில இந்தக் கோகுல் பயலும் உன் கையை விட்டு நழுவிட்டான் போல இருக்கு?" கேட்டவனைத் தன் கண்களால் சுட்டெரித் தான் மாலினி.

"நீ முதலில் ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டு மாரி. ஏற்கனவே ரோடு குண்டும் குழியுமா இருக்கு. இதுல நீ காரை ஓட்டுற லட்சணம் வேற சகிக்க முடியல சீறினாள் மாலினி.

"நான் நல்லாத்தான் ரோட்டைப் பார்த்து காரை ஓட்டிக்கிட்டு இருக்கேன். நீ தான் விவரம் புரியாமல் உன் ஆளைக் கோட்டை விட்டுட்டு நிக்கிறே" குத்த லாகப் பேசினான் மாரி.

"என்னை யாருன்னு நினைச்ச. இந்த கோகுல் பயலை நம்பியா இந்த மாலினி இருக்கிறா?" அலட்சியமாக தோள்களைக் குலுக்கிய மாலினியை நம்பாமல் பார்த் தான் மாரி.

"ம்ஹூம்...? அப்படியா? அப்புறம் எதுக்காகம்மா நீ இத்தனை செலவு பண்ணி காரைப் போட்டுக்கிட்டு

சென்னையில் இருந்த மூணாறுக்கு பறந்து வந்த?'' மாரியின் கேள்விக்குப் பதில் அளிக்க முடியாமல் திணறினாள் மாலினி. அவள் சீற்றத்துடன் தலை நிமிர்ந்து மாரியைப் பார்த்தாள்.

''எதுக்கா? எதுக்குன்னா கேட்குற? நான் என்ன இந்தக் கோகுல் வீட்டுக் கிள்ளுக்கீரையா. இந்தப் பணக்கார பசங்களோட எல்லா ஆசைக்கும் இணங்கி அவனுக இழுத்த இழுவைக்கெல்லாம் போறோன்னா... எதுக்காக? பணம்... மாரி... பணம். இவன் பாட்டுக்கு என்னை யூஸ் பண்ணிவிட்டு ஒரு பத்தினிப் பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிட்டா அப்புறம் நான் என்ன பண்றது? எனக்கு என்ன வழி?'' ஆத்திரத்துடன் கேட்ட மாலினியைப் பார்த்து சிரித்தான் மாரி.

''என்ன மாலினி? என்னவோ இவன் ஒருத்தன் கூட மட்டும் பழகின பத்தினி மாதிரிப் பேசுற? அதுதான் அவன் உன்கூடப் பழகினதுக்கு உனக்கு என்ன வேணுமோ அத்தனையையும் கேட்காமலே செய்து கொடுத்தான்ல? அதுக்கும் இதுக்கும் சரியாப் போச்சுன்னுட்டு பேசாமல் போவியா... அதவுட்டுட்டு பெரிய இடத்துப் பையன்கிட்ட விவகாரம் பண்ணிக்கிட்டு இருக்கப் பார்க்கறீயே?''

''அப்படியெல்லாம் விட்டுட்டு போக முடியாது மாரி? இதுக்கெல்லாம் பயந்தா காசு பார்க்க முடியுமா?''

''அதுக்கு...?''

''அதுக்கு? நான் கொஞ்சம் விளையாட்டுக் காட்டிப் பார்க்கணும். அந்த விளையாட்டுல ஒண்ணு அவன்



என்னைத் தானாத் தேடி வரணும். அப்படி இல்லேன்னா அவன் கல்யாணம் நின்று தனியா இருக்க முடியாமல் என்னை அவன் தேடணும். ரெண்டில எது நடந்தாலும் லாபம் என்னவோ எனக்குத்தான்'' வெகு நிச்சயமான குரலில் கூறிய அவளைத் திரும்பிப் பார்த்த மாரி மேலே எதுவும் பேசாமல் ரோட்டில் கவனமாகக் காரை ஓட்டத் தொடங்கினான்.

# 31

அடர்ந்த சிவப்பு நிற லிப்ஸ்டிக்கை உதடுகளைக் குவித்து தடவிக்கொண்ட மாலினி அதை மூடிக் கீழே வைத்தாள். அலங்காரத்தை முடித்துக் கொண்டு எதிரில் இருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டவளின் இதழ்கள் மெல்லிய விசில் சத்தத்தை உற்சாகத்துடன் வெளியிட்டது. இத்தனை அலங்காரத்துடன் தன்னை கோகுல் பார்த்தால் எப்படிக் கிறங்கிப் போவான் என்று மனக்கண்ணில் கற்பனை செய்து பார்த்த மாலினியின் உடல் பரபரப்பானது. அவள் இதுவரை பழகிய ஆண்கள் காட்டாத சொர்க்கத்தை எல்லாம் எல்லா வகையிலும் காட்டிய கோகுலின் பழக்கத்தை அவள் மிகவும் விரும்பினாள். வீட்டை விட்டு வெளியே வந்த அவள் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே எதிரில் வந்த மாரியை வழிமறித்தாள்.

''என்ன மாலினி? வெளியே கிளம்பிட்ட போல இருக்கே?'' அவளை உச்சி முதல் உள்ளங்கால் வரை விகாரமாகப் பார்த்தபடி பல்லிளித்தான் மாரி.

''அதான் தெரியுதில்ல? வண்டியை எடுத்துக்கிட்டு வர வேண்டியது தானே?'' எரிந்து விழுந்தாள் மாலினி.

''என்ன மாலினிக் கண்ணு? இந்த மாமனை என்னிக் காவது ஆசையாய் பார்த்துப் பேசுறயா? யார் யார் கூடவோ... என் கூடவும் அது மாதிரிப் பழகினா நான் உன்னை ராணி மாதிரி வச்சுக்க மாட்டேனா.''

''ஆமாமாம். நீ வச்சுக்கிட்டாலும். முதல்ல போய் வண்டியக் கொண்டாரயா இல்ல நான் வேற வண்டி எதுலயாச்சும் போகவா?'' பல்லை கடித்தாள் மாலினி.

''இல்லயில்ல. இதோ ஒரு நிமிசத்துல வந்துடுறேன். வேகமாக ஓடினான் மாரி.

'முதல்ல கோகுல் கிட்ட இருந்து இன்னிக்கு ஒரு நல்ல தொகையை வாங்கிரணும். அப்பத்தான் இந்த ஏரியாவை விட்டு வெளியே போய் வீடு பார்த்து நிம்மதியா இருக்க முடியும்' மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டாள் அவள்.

அவளை வழக்கமாக இறக்கிவிடும் ஸ்டார் ஹோட்டலின் முன் இறக்கி விட்டுவிட்டு அவளது பதிலை எதிர்பார்க்காமல் காரைக் கிளப்பினான் மாரி. மிகவும் சுவாதீனமாக ரிசப்ஷனைக் கடந்த பாருக்குள் சென்ற மாலினி ஒய்யாரமாக நின்று கொண்டு கோகுலைத் தன் விழிகளால் தேடினாள். கோகுலைக் காணாத ஏமாற்றத்



துடன் அருகில் இருந்த நாற்காலியில் மிகவும் நளினமாக அமர்ந்த அவள் அருகில் கையில் கிளாஸோடு மது வாடையுடன் நெருங்கி அமர்ந்தான் பிரேம்.

''ப்ட்ச்... என்னது இது பிரேம்? ஏன் இப்படி வந்து இடிச்சுக்கிட்டு உட்காருறே?'' முகம் சுளித்தாள் மாலினி.

''ஏன் நான் இப்படி உட்காரக்கூடாதா? அந்தக் கோகுல் மட்டும்தான் உட்காரணுமா?''

''இப்ப ஏன் கோகுலைப் பத்திப் பேசுற. அவன் வர்ற நேரம் ஆகிருச்சு. நீ வம்பை விலைக்கு வாங்காம பேசாமல் போ பிரேம்'' எச்சரித்த மாலினியைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான் பிரேம்.

''அவன் இந்நேரம் மூணாறுல இருப்பான். இங்க எப்படி வருவான்?'' கோகுல் இல்லாத தைரியத்தில் பிரேமின் கண்கள் மாலினியின் உடலில் மேய்ந்தது. அவனது பார்வையைக் கண்டு கொள்ளாமல் அவனது வார்த்தைகளால் வியந்தாள் மாலினி.

''என்னது மூணாறுக்கா? என்கிட்ட கோகுல் சொல்லவேயில்லையே? ஒரு போன் கூடப் பண்ணாம போயிருக்கானே?''

''அவன் எப்படிப் போன் பண்ணுவான்? அவங்க அம்மாவும் பாடிகார்டு போல அவன் கூடவே இல்ல போய் இருக்காங்க.''

''அப்படியென்ன முக்கியமான வேலை பிரேம்?''

''வேலையெல்லாம் ஒண்ணும் இல்லை. எனக்குக் கிடைத்த தகவல்படி அவங்க பேரண்ட்ஸ அவனுக்கு

பொண்ணு பார்த்து பேசி முடிக்கிறதுக்காக நம்ம கோகுல் மாப்பிள்ளையை மூணாறுக்கு கடத்திட்டுப் போய் இருக்காங்க.''

''பொண்ணு பார்க்கவா?'' அதிர்ந்தாள் மாலினி.

''பின்ன? அவன்... அந்தக் கோகுல், உன்னைத்தான் கல்யாணம் பண்ணப் போறான்னு நினைச்சியா?'' அலட்சியமாக அவளைப் பார்த்தான் பிரேம்.

''பிரேம்... மைண்ட் யுவர் வர்ட்ஸ்'' கோபமாக கூறினாள் மாலினி.

''சரிதான் நிப்பாட்டுடி. உன் கோகுல் இனிமே உன்னைப் பார்க்க வரமாட்டான். அவன் அளவுக்கு இல்லாட்டியும் நானும் கோடீஸ்வரன்தான். அதனால நீ பேசாம இனிமே என்கூட...'' பல்லைக் காட்டிய பிரேமை முறைத்துவிட்டு வேகமாக கிளம்பி ஹோட்டலை விட்டு வெளியேறினாள் மாலினி. என்றும் இல்லாமல் அன்று சீக்கிரமே வீடு திரும்பிய மகளைப் பார்த்து தோள் பட்டையில் முகத்தை இடித்துக் கொண்டாள் அவள் அன்னை.

''இன்னிக்கு வருமானம் ஒண்ணும் இல்லை யாக்கும்?'' நக்கலாகக் கேட்டவளை முறைத்துவிட்டு தன் படுக்கையறைக் கதவை ஓங்கி அறைந்து மூடி விட்டுப் படுக்கையில் விழுந்த மாலினியின் மனம் என்ன சமாதானம் செய்தாலும் அடங்கவேயில்லை. கோகுல் தன் பிடியிலிருந்து நழுவிவிட்டான் என்ற உண்மையை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடிய வில்லை.



கோகுல் ஒரு பொன்முட்டை இடும் வாத்து. அவனைத் தன் கைப்பிடியில் இருந்த நழுவ விடக்கூடாது என்று உறுதியாக எண்ணிய அவள் காலை எழுந்தவுடன மாரியைக் கூட்டிக்கொண்டு மூணாறுக்கு விரைந்து வந்துவிட்டாள்.

மூணாறுக்கு வந்த மாலினி நேராக ஒரு ரூம் எடுத்து தன் பெட்டிகளை வைத்துவிட்டு செய்த முதல் காரியம் பிரேமுக்கு போன் பண்ணியதுதான். பிரேம் போனை எடுத்த உடன் தன் குரலை சோகமாக வைத்துக் கொண்டாள் மாலினி.

''ஹாய் மாலினி. வாட் எ சர்ப்ரைஸ்? எனக்கு நீ போன் பண்ணியிருக்க?'' மறுமுனையில் உற்சாகமாக ஒலித்தது பிரேமின் குரல்.

''பிரேம்... எனக்கு உன்னைப் பார்க்கணும். இன்னிக்கு ஈவ்னிங் மீட் பண்ணலாமா?'' சோகமாகக் கேட்டாள் மாலினி. கிளி தன் வலையில் விழுந்துவிட்டது என்று எண்ணி மகிழ்ந்தான் பிரேம்.

''ஷ்யூர் மாலினி. கண்டிப்பா நான் ஈவ்னிங் வந்துடு றேன்'' அவசரமாகக் கூறினான் பிரேம்.

''பிரேம்... அப்புறம் உன்கிட்ட ஒண்ணை கன்பார்ம் பண்ணிக்கணும். ஏன்னா கோகுல் நாளைப்பின்ன என்னை தப்பா நினைச்சு கேள்வி கேட்கக்கூடாது பார்'' வினயமாக கூறினாள் மாலினி.

''கேளு மாலினி. உனக்கு என்ன இன்பர்மேசன் வேணுமோ சொல்றேன்.''

"வேற ஒண்ணும் இல்லை பிரேம். கோகுல் உறுதியா கல்யாணம் பண்ணிக்கப் போறானா?'' அவசரமாக அவளது கேள்விக்கு பதிலளித்தான் பிரேம். எங்க அவள் கைநழுவிப் போய்விடுவாளோ என்ற பயம் அவனுக்கு.

"சத்தியமா மாலினி. என் பேச்சில் உனக்கு நம்பிக்கை இல்லையா. மூணாறில் கணபதி எஸ்டேட் ஓனரின் பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறான்.''

தனக்குத் தேவையான தகவல்களைத் தெரிந்து கொண்ட மாலினி சோகமான குரலில் பிரேமுக்கு நன்றி சொல்லி போனைக் கட் பண்ணிவிட்டாள்.

"அப்புறம் என்ன பேபி? அதான் குருவி அங்க இருக்குன்னு கண்டுபிடிச்சிட்டயே? அப்புறம் எதுக்கு இந்த ஹோட்டல் ரூம் எல்லாம்? காலி பண்ணிட்டு...'' மேலே தொடரவிடாமல் இடைமறித்தாள் மாலினி.

"உன் ஐடியாவ நான் கேட்கவே இல்லையே மாரி. நான் என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்.''

"இல்ல. வெட்டியா எதுக்கு ரூமுக்கு செலவு பண்ணணும் என்றுதான்...'' இழுத்தான் மாரி.

"ஏன்? உன் கைக்காசு எதுவும் காணாமல் போகுதா இல்லையே? அப்ப வாயை மூடிக்கிட்டு உன் வேலை என்னவோ அதப்பாரு'' அலட்சியமாகக் கூறிவிட்டு படுக்கையில் சரிந்த மாலினியை முறைத்து விட்டு வெளியே போனான் மாரி.



# 32

அவன் சொன்னது போல நேரே கோகுலைத் தேடிப் போக அவள் ஒன்றும் முட்டாள் இல்லை. அப்படிப் போனால் அவள் கழுத்தைப் பிடித்து கோகுலே வெளியே தள்ளிவிடுவான் என்பது மாலினிக்கு நன்றாகத் தெரியும். அத்துடன் அவன் மாலினியின் முகத்தில் முழிப்பதே அதுதான் கடைசியாக இருக்கும் என்பதும் அவளுக்கு நன்றாகத் தெரியும். எனவே மூணாறுக்கு சுத்திப் பார்க்க வந்தது போல, அவன் முன் தற்செயலாகத் தோன்ற வேண்டும் என்று அவள் திட்டம் போட்டாள். அப்படி அவன் தன்னைப் பார்த்தப்பின் தன்னை விட்டுப் பிரியாமல் இந்த ஹோட்டல் அறைக்கே அவன் வந்துவிடுவான் என்றும் உறுதியாக எண்ணினாள் அவள்.

எனவேதான் அவள் கோகுலைக் கண்காணிக்கும் பொருட்டு கணபதி விலாஸ் பக்கமாகக் காரை விடச் சொன்னாள். ஆனால் மாலினி அங்கே கண்ட காட்சி அவளது பொறாமைத் தீயை கொழுந்துவிட்டு எரியச் செய்தது. அழகிய பெண் ஒருத்தியைக் காதலுடன் பார்த்துக் கொண்டு ஆசையுடன் நெருங்கி நின்றிருந்தான் கோகுல். அதைக் கண்டவுடன் உடம்பெல்லாம் பற்றி எரிவதுபோல இருந்தது மாலினிக்கு. எப்படியாவது கோகுலைத் தன் பக்கம் திருப்பி விடவேண்டும் என்ற வைராக்கியமும் தோன்றியது அவளுக்கு.

தன் வாழ்வில் வீசப்போகும் சூறாவளியை அறி யாமல் சிந்தனையுடன் அமர்ந்திருந்தான் கோகுல். என்றும் இல்லாமல் அவனது மனம் மிகவும் கலக்கமாக இருந்தது. மாலை மோகனா அவனைப் பார்த்து விளை யாட்டாகக் கூறிய வார்த்தைகள் அவன் இதயத்தைக் குத்திக் கிழித்து ரணமாக ஆக்கிக்கொண்டு இருந்தது. தன்னுடைய வாழ்வில் அவன் செய்த தவறுகள் தன் எதிர்கால வாழ்வைப் பாழாக்கிவிடுமோ என்று பயந் தான் அவன்.

"கோகுல்... கோகுல்... சாப்பிட வாப்பா'' அழைத்த லட்சுமியின் குரல் கோகுலின் சிந்தனையைக் கலைத்தது.

இரவு உணவிற்குப் பின் அன்னையிடம் கூட ஒன்றும் பேசாமல் தனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள் ஒதுங்கிக் கொண்டான் கோகுல். அவனது இந்த ஒதுக் கத்தை லட்சுமி கவனித்தாலும் கோகுலிடம் அதுசமயம் எதுவும் கேட்டு பிரச்சினையை இழுத்துக் கொள்ள வேண்டாம் என்று முடிவெடுத்த அவள் கண்டு கொள் ளாதவள் போல் இருந்து விட்டாள்.

மாலை தன் முகம் பார்த்து மயக்கத்துடன் பேசிய கோகுல் இரவு உணவை முடித்துக் கொண்டு உள்ளே தன் ரூமிற்குள் சென்றுவிட்ட கோகுலின் செயல் மோகனாவின் மனதில் ஏமாற்றத்தை உண்டு பண் ணியது. அவள் மனம் கோகுலின் பாராமுகத்திற்கான காரணம் புரியாமல் திகைத்து நின்றது. மாலையில் தன்னுடைய வார்த்தைகள் ஏதேனும் கோகுலின் மனதைக் காயப்படுத்தி விட்டதா என்று மோகனாவின் உள்ளம் பரிதவித்தது.



உணவிற்குப் பின் தம்பியுடன் தங்கள் அறைக்குள் நுழைந்த மோகனாவின் உள்ளம் அவள் வசம் இல்லை. கோகுலின் பாராமுகத்திற்கான காரணம் என்னவென்பதை அறிந்து கொள்ளாமல் அவளால் அன்று இரவு தூங்க முடியாது என்று மோகனாவிற்குத் தோன்றியது.

கோகுலின் நடவடிக்கைகளைக் கண்டு மிகவும் திகைத்து விட்டாள் லட்சுமி. தன் மகன் தனக்கு அளித்த சத்தியத்தை மீறிவிடுவானோ என்று பயந்தாள் அவள். வெண்ணெய் திரண்டு வரும் நேரம் தாழியை உடைத்த கதையாய் எல்லாம் கூடிவரும் சமயத்தில் கோகுல் அவனது நடவடிக்கைகளால் தன் வாழ்வைத் தானே கெடுத்துக் கொண்டு விடுவானோ என்று மிகவும் பயந்தாள் லட்சுமி. எனவே அங்கு விரைவாக வரும்படி ரெங்கநாதனுக்கு யாரும் அறியாமல் தொலைபேசியில் தெரிவித்தாள் லட்சுமி.

அறைக்குள் தன்னுடைய கட்டிலில் படுத்திருந்த கோகுலுக்கு மூச்சு முட்டுவது போல் இருந்தது. அவன் சிந்திக்க சிந்திக்க அவனது எதிர்கால வாழ்க்கை பூதாகரமாய் அவன்முன் தோன்றி கோகுலைப் பயமுறுத் தியது. அறையில் நான்கு சுவர்களும் நெருக்கமாக வந்து அவனை அமுக்குவது போல உணர்ந்தான் கோகுல். அவன் தன் நிலையை எண்ணி அவனுக்கு உள்ளேயே மறுகிக்கொண்டு கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்து கொண்டான். தன் தவறுகளை எல்லாம் மோகனாவிடம் கூறி அவளது மன்னிப்பை அப்போதே வாங்கிவிட வேண்டும் என்று துடித்தது கோகுலின் உள்ளம். அவன்

ஒரு உறுதியான மனநிலையோடு கட்டிலில் இருந்து இறங்கிக் கால்களில் செருப்பை மாட்டியபோது அவனது கைப்பேசி அவனை அழைத்தது.

அழைத்தது ரெங்கநாதன் தான். தன் மனைவியின் தொலைபேசி உரையாடலைக் கேட்ட ரெங்கநாதனது மனம் உடனே கோகுலை அழைத்துப்பேச வேண்டிய அவசியத்தை அவருக்கு உணர்த்தியது.

''ஹாய் டாட்... சொல்லுங்க'' போனைக் காதிற்குக் கொடுத்துக் கொண்டே அறையைவிட்டு வெளியே வந்தான் கோகுல்.

''ஹாய் கோகுல்... ஹவ் ஆர் யூ? எவ்ரிதிங் இஸ் நார்மல் தேர்?'' என்று கவலையுடன் கேட்ட தன் தந்தையின் குரலில் மனம் கரைந்தான் கோகுல்.

''யா... டாட். ஏன் அப்படிக் கேட்கறீங்க?''

''நத்திங் கோகுல். நீ ஏதோ மூடு அப்செட்டா இருக்கறதா அம்மா போன் பண்ணினாங்க. அதான் கேட்டேன்.''

''லேசான தலைவலி டாட். வேற ஒண்ணும் இல்லை. நீங்க இங்க எப்ப டாட் வர்றீங்க? சீக்கிரம் வந்தீங்கன்னா வேலையை முடிச்சிடலாம். நான் எல்லாத்தையும் ரெடியா வெச்சிருக்கேன்'' கூறிய மகனை எண்ணி பெருமை கொண்டார் ரெங்கநாதன்.

''ஐ நோ அபௌட் யூ கோகுல். நீ ஒரு காரியத்தில் இறங்கினா சக்ஸஸ்புல்லா முடிச்சிடுவேன்னு எனக்கு நல்லாத் தெரியும். நான் நாளைக் காலை அங்க



இருப்பேன் கோகுல்'' தந்தையின் வார்த்தைகள் சொல்ல முடியாத மன நிம்மதியைக் கொடுத்தது கோகுலுக்கு.

''தேங்க்யூ டாட். ஐ மிஸ் யூ ஸோமச். சீக்கிரமா வாங்க டாட்'' மகனின் குரலில் இருந்த கரகரப்பை உணர்ந்த ரெங்கநாதனுக்கு ஏதோ சரியில்லை என்று மனதிற்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது.

''எதையும் நினைச்சு மனதைக் குழப்பிக்காதே கோகுல். டாடி நான் இருக்கேன். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்வேன'' மகனுக்கு நம்பிக்கையளித்தார் ரெங்கநாதன்.

''ஓகே டாட். குட் நைட்'' கூறி செல்போனை அணைத்து தன் ஷார்ட்ஸின் பாக்கெட்டில் போட்டுக் கொண்ட கோகுல் மூணாறின் இயற்கைக் காற்றை கண்மூடி உள்ளிழுத்துக் கொண்டான். குளிருக்கு இதமாக தன் உள்ளங்கைகள் இரண்டையும் தேய்த்துக் கொண்டே மெதுவாகத் தோட்டத்தைச் சுற்றி நடக்க ஆரம்பித்தான் கோகுல். ஏதேதோ சிந்தனைகளுடன் மெதுவாக நடந்த அவன் தாமரைக் குளத்துக்கு அருகில் வந்தவன் கால்கள் நகராமல் அப்படியே நின்று விட்டான். முந்தைய நாளைப் போன்றே அதே இடத்தில் அமர்ந்து தன்னை ஆசையுடன் பார்த்த மோகனமலரைக் கண்டவுடன் கோகுலின் முகம் மென்மையாக மாறியது. அவன் மெதுவாக அடியெடுத்து நடந்து அவள் அருகே சென்று அமர்ந்து கண்கொட்டாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

# 33

அறைக்குள் இருக்க முடியாமல் தவித்த மோகன மலரை உள்ளம் முந்தைய நாளைப் போலவே கோகுல் இன்றும் தன்னைத் தேடி வருவான் என்று உரைத்தது. அதற்கு மேல் ஒரு நொடியும் அங்கிருக்க முடியாமல் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த அகிலிடம் காலில் விழுகாத குறையாக ஏதேதோ பொய் சொல்லி சமாளித்து விட்டு யாரும் அறியாமல் தோட்டத்தில் வந்து அமர்ந்து ஆவலுடன் கோகுலின் வரவை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருந்தாள் மோகனா.

அவள் உள்ளம் சொன்னதைப் பொய்யாக்காமல் கோகுலும் வந்துவிட்டதை அறிந்த மோகனாவின் கண்கள் ஆவலுடன் கோகுலின் முகத்தை ஆராய்ந்தது.

''என்னடி! அப்படிப் பார்க்கிற?'' மோகனாவின் பார்வையில் மயங்கிய குரலில் கேட்டான் கோகுல்.

''ஒண்ணுமில்ல... சும்மாத்தான் பார்த்தேன்...'' வெட்கிய குரலில் சொன்ன மோகனாவின் பதில் கோகுலின் மயக்கத்தை அதிகரித்தது.

அவன் மெதுவாக கீழிறங்கி ரோஜாச் செடிகளின் மறைவில் அமர்ந்து கொண்டு மோகனாவிற்காக அவளை நோக்கி கை நீட்டினான். அவனது கைகளில் தன் கையைக் கொடுத்த மோகனாவை தன்னை நோக்கி



இழுத்துக் கொண்ட கோகுலின் கரங்கள் ஆவேசத்துடன் அதற்குமேல் தாங்க முடியாத தவிப்புடன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டது. அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கிறங்கிய கோகுல் அவளைத் தன் மேல் அழுத்திக் கொண்டு தாபத்துடன் பார்த்தான். அவனது தாபத்திற்கு குறையாக தாபத்துடன் அவனது அணைப்பிற்குள் விலகாமல் புகுந்து கொண்டாள் மோகனா. இதுவரை எத்தனையோ பெண்களை ஆண்டபோதெல்லாம் கிடைக்காத பேரின்பம் மோகனாவின் அணைப்பில் கிடைத்ததை மிகவும் ஆச்சரியத்துடன் உணர்ந்த கோகுல் மேலும் மேலும் முன்னேறி அவளை ஆண்டுவிடும் தாபத்தோடு படர்ந்தவன் ஏனோ ஒரு எல்லையோடு விலகி அமர்ந்தான்.

அவனது கண்ணியத்தை எண்ணிப் பெருமை கொண்ட மோகனா நகர்ந்து அவன் மார்பின் மீது எல்லையற்ற ஆனந்தத்துடன் சாய்ந்து கொண்டாள். தன் மீது சாய்ந்து கொண்டவளின் தோள்மீது கைபோட்டு அணைத்துக் கொண்ட கோகுல் முத்தாய்ப்பாக அவளது உச்சியில் முத்தமிட்டு சாய்ந்து கொண்டான். அலை கடலாய் ஆர்ப்பரித்த கோகுலின் உள்ளத்தை தன் அணைப்பினால் அடக்கிவிட்டதை உணராத மோகனா அவனது அருகாமை தந்த ஆனந்தத்துடன் கண்மூடி கோகுலின் மார்பில் சாய்ந்து கொண்டிருந்தாள். இருவரின் ஆனந்தத்தைக் குலைப்பது போல் கோகுலின் செல்போன் ஒளிர்ந்து ஓசையிட ஆரம்பித்தது. யாரும் பார்த்துவிடப் போகிறார்களோ என்ற பதட்டத்துடன் போனை எடுத்துப் பார்த்த கோகுல் முகம் மாற உடனே அதை கட் பண்ணிவிட்டான்.

பொங்கிப் பெருகிய உணர்வுகள் அனைத்தும் அடங்கியவனாய் விலகி அமர்ந்த கோகுலை வியப் புடன் பார்த்த மோகனா அவன் கைகளில் இருந்த போனில் அழைத்தது யார் என்று அவசரமாகப் பார்த்தாள். பார்த்தவளின் புருவங்கள் கேள்விக்குறியாய் உயர்ந்து கோகுலைப் பார்த்தது. அழைத்தவர் பெயர் மாலினி என்று இருந்ததைப் பார்த்த மோகனாவின் உள்ளம் அவனை ஆயிரம் கேள்வி கேட்டது.

ஒரு போன் காலை வைத்து கோகுலைத் தவறாக எண்ண அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆனால் அதைப் பார்த்தவுடன் மாறிய கோகுலின் முகமும் அவனது விலகலும் மோகனாவின் மனதில் சந்தேக விதையை விதைத்தது. சிறிது இடைவெளி விட்டு மீண்டும் அழைத்த செல்போனை வாங்க நீண்ட கோகுலின் கரங்களைத் தட்டிவிட்டு போனை ஆன் பண்ணினாள் மோகனா. அதைச் செய்யும் உரிமையை அவளது காதல் அவளுக்கு அளித்திருப்பதாக எண்ணிய மோகனா போனை தன் காதில் வைத்துக் கொள்ள முகம் இருண்டு விட்டது கோகுலுக்கு. செய்வது அறியாமல் திகைத்து அமர்ந்து விட்டான் கோகுல்.

தன்னுடைய தவறுகளைத் தானே மோகனாவிடம் கூறி மன்னிப்பை வேண்டுவது என்ற முடிவை ஏற் கனவே எடுத்தவன் தான் கோகுல். ஆனால் தன் வாய்ப்பிறப்பினால் அவனது தவறுகளை தெரிந்து கொள்ளாமல், அதற்கு முன்பாக மோகனா அவனது தவறுகளைத் தெரிந்து கொண்டால் தான் குற்ற வாளியாக நிற்க வேண்டிய நிலை உருவாகிவிடும்



என்று அஞ்சினான் கோகுல். அவனது திகைத்த முகத் தினை பார்த்துக் கொண்டே போனைக் காதில் வைத்து பேச வாயெடுத்த மோகனா திகைத்தாள். ஏனெனில் எதிர்முனையில் இருந்து அழுத்தமாக வந்தது ஒரு முத்தம். அதைத் தொடர்ந்து பேசிய குரலில் தோன்றிய நெருக்கம் மோகனாவின் உடலைக் கூசச் செய்தது.

‘ஹாய் டார்லிங். எப்படி இருக்க? ரெண்டு நாளா என்னப் பார்க்காம, கொஞ்சாம எப்படி உன்னால இருக்க முடியுது? உன் பெட் உன்ன முள்ளாக் குத்தலயா? ஆனா நீ பக்கத்துல இல்லாம என்னோட படுக்கை என்னைக் கொல்லுது டியர்...'' பதிலை எதிர்பாராமல் தொடர்ந்தது மாலினியின் குரல்.

மூணாறு போயிட்டு ஒரே நாளில் வந்துடுவேன்னு சொல்லிட்டுப் போனியே டியர். ரெண்டு நாளாகியும் இன்னும் வராம அங்கயே இருந்துட்ட. ஏன் அங்க ஏதாவது பிகர் செட் ஆகிருச்சா?'' சற்றுமுன் கோகுலை அணைத்துக் கொண்டு அமர்ந்ததை அருவெறுப்பாக உணர்ந்தாள் மோகனா.

''ஆனால் எனக்குக் கவலையே இல்ல. ஏன்னா என்னை விட வேற யாராலும் உன்னைத் திருப்தி படுத்தவே முடியாதுன்னு எனக்குத் தெரியும். சரிதானே டியர்? என்ன டியர் பேச்சைக் காணோம்? உனக்கு என்னை உடனே பார்க்கணும் போல இருக்கா? எனக்கும் தான் டார்லிங். அதனாலதான் நான் மூணாறுக்கே வந்துட்டேன். நீ என்னோட ஹோட்டல் ரூமுக்கு வந்துடறியா? இந்த ரெண்டு நாள் கேப்ப நாம இப்பவே ஈடுகட்டி விடலாம்? என்ன கோகுல்? வர்றதானே?''

கொஞ்சலாகக் கூறிய குரலுக்கு பதில் சொல்லாமல் போனை கட் பண்ணிய மோகனா இயந்திரமாய் கோகுலிடம் அதனைக் கொடுத்தாள். காலடியில் பூமி நழுவுவதைப் போல உணர்ந்த அவளால் எழுந்து நிற்கவே முடியவில்லை. நிற்க முடியாமல் தள்ளாடிய அவளைப் பிடிக்க ஓடிவந்த கோகுலைத் தன் பார்வையால் தடுத்து நிறுத்தினாள் மோகனா. நடைபிணமாக தள்ளாடியபடித் திரும்பி நடந்தவளைப் பார்க்க முடியாமல் மனம் தவித்த கோகுல் மீண்டும் ஓடி சென்று அவளைக் கைப்பிடித்து தடுத்து நிறுத்தினான் அவன் கைபட்ட இடம் தீயாகச் சுடுவதைப் போல வேதனையுடன் உதறிய மோகனாவைப் பார்த்த கோகுலுக்கு கோபம் வந்தது.

“மோகனா... நான் சொல்வதை முழுசாக் கேள். நான்... வந்து... நான்'' வார்த்தைகளைத் தேடித் தவித்த கோகுலை ஒரு நொடி உற்றுப் பார்த்தாள் மோகனா.

“மோகனா...'' மேலே பேச முயன்ற கோகுலை இடைமறித்து மோகனாவின் ஒற்றைச் சொல்.

“ச்சீய்...'' அருவெருப்புடன் அவனைப் பார்த்து விட்டு வேகமாக வீட்டிற்குள் ஓடிவிட்டாள் மோகனா.

## 34

“ச்சீய்...'' அருவெறுப்பும் கோபமும் கலந்த ஒரே வார்த்தை. அந்த ஒரே வார்த்தையைக் கேட்ட



கோகுலுக்கு நூறு பேர் சேர்ந்து தன் முகத்தில் காறி உமிழ்ந்ததைப் போல இருந்தத.

அந்த ஒரே வார்த்தை ஆயிரம் யானைகள் சேர்ந்து நின்று தன் கால்களால் அவன் நெஞ்சை மிதித்தது போல் இருந்தது கோகுலுக்கு.

அந்த ஒரே வார்த்தை அவன் உயிரோடு இருப்பதற்கே அருகதை இல்லாதவன் என்று உணர்த்தியது கோகுலுக்கு.

அந்த ஒரே வார்த்தை அவன் உடல், பொருள், ஆவி, காதல் என அனைத்தையும் உடைத்து நொறுக்கித் தூள் தூளாக்கியது.

பித்துப் பிடித்தவனாய் சத்தமில்லாமல் உடல் குலுங்க, கேவி வந்த விம்மல்களை நெஞ்சுக்குள் அடக்கிக் கொண்டு புல்தரையில் வேர் அறுந்த மரம் போல் அப்படியே சாய்ந்தான் கோகுல்.

யாருடைய முகத்தையும் பார்க்க அஞ்சிக் கொண்டு ஓடிவந்து தன் அறையின் குளியல் அறைக்குள் நுழைந்து கொண்ட மோகனா, அழுகையை அடக்க முடியாமல் வாய்விட்டுக் கதறிக் கொண்டே சுவற்றில் சரிந்து தரையில் அமர்ந்து கதற ஆரம்பித்தாள். எவ்வளவு அழுதும் துக்கம் ஓயாமல் பொங்கிப் பெருகிய ஆறாய் அணை உடைத்த வெள்ளம் போல் அழுது, கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்த மோகனாவைக் குளியல் அறைக் கதவு தட்டப்படும் ஓசை தன் நிலைக்குத் திரும்ப வைத்தது.

“அக்கா... அக்கா...'' மெல்லிய குரலில் பதற்றமாக ஒலித்தது அகிலின் குரல்.

'என்னடா...'' பொங்கிய அழுகையை அடக்கிக் கொண்டு கேட்டாள் மோகனா.

''இவ்வளவு நேரமா என்னக்கா செய்யுற? வயிறு எதுவும் சரியில்லையா? நான் வேணும்னா அப்பத் தாவைக் கூப்பிடவா?'' பயத்துடன் கேட்டான் அகில்.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லடா. இதோ நான் வந்துட்டேன். நீ யாரையும் கூப்பிட வேண்டாம்'' முகத்தில் தண்ணீரை அடித்துக் கொண்டு கதவைத் திறந்து வந்த மோகனாவின் முகத்தைப் பார்த்த அகிலுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அழுது அழுது கண்ணெல்லாம் வீங்க மூக்கு நுனி சிவந்திருக்க, அழுகையை அடக்கியதில் கீழ் உதடு கண்ணிச் சிவந் திருக்க வந்து நின்ற அக்காவைக் கவலையுடன் பார்த்தான் அகில்.

ஆனால் அவனது எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லும் மனநிலையில் இல்லாத மோகனா போர் வையை முகம் தெரியாமல் போர்த்திக் கொண்டு படுக்கையில் சரிந்தாள். அழுகையில் குலுங்கும் அவள் முதுகை வெறித்துக் கொண்டு தூங்காமல் இருந்தான் அகில்.

புலர்ந்தும் புலராத காலைப்பொழுதிலேயே மூணாறு வந்து சேர்ந்து விட்டார் ரெங்கநாதன். வந்தவரை ஓடிச் சென்று கட்டிப்பிடித்து வரவேற்றார் கணபதி. வீட் டினுள் நுழைந்து தன் கால்களைப் பணித்த ரெங்க நாதனின் பணிவு மனோன்மணிக்கு மன நிறைவைக் கொடுத்தது.



''நல்லா இருப்பா...'' அவர் தலையில் கை வைத்து முழு மனதோடு ஆசீர்வதித்தாள் அவள்.

நண்பனை அழைத்துக் கொண்டு போய் ஹால் சோபா வில் அமர வைத்த கணபதி தானும் அவர் அருகில் அன்புடன் அமர்ந்து கொண்டார்.

''வாங்கண்ணா'' கையில் காபிக் கோப்பைகளுடன் வந்த அகல்யாவை புன்சிரிப்புடன் ஏறிட்டார் ரெங்க நாதன்.

''வீட்டை அப்படியே கோவிலாட்டம் வைச்சிருக் கம்மா. உன் அண்ணிக்கும் கொஞ்சம் இந்த டெக்னிக்கை சொல்லிக்குடேன்'' சிரித்த ரெங்கநாதனை கோபமாய் முறைத்தாள் லட்சமி.

''ஏன் நான் வீட்டை எப்படி வெச்சிருக்கேனாம்'' கேட்ட மனைவியைப் புன்சிரிப்புடன் பார்த்தார் அவர்.

''நீ வீட்டை பைவ் ஸ்டார் ஹோட்டல் மாதிரி வெச் சிருக்க.''

''என்னது?'' பல்லைக் கடித்த லட்சுமியைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டார் ரெங்கநாதன்.

''அவ்வளவு அழகா வெச்சிருக்கன்னு சொன்னேன் அகல்யா. நீ தப்பாப் புரிஞ்சுக்கிட்ட'' சொன்ன அவரைப் பார்த்த அனைவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அனைவரிடமும் சரளமாகப் பேசிக்கொண்டு அமர்ந்த இருந்த ரெங்கநாதனின் கண்கள் மட்டும் கோகுலைத் தேடிச் சுற்றிச் சுழன்றது. அதை அறிந்த லட்சுமி அவனது அறையைக் கண்களால் சுட்டிக் காட்டினாள்.

''சரிடா... நீ போய் குளிச்சுட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. பிரேக் பாஸ்ட்டில் மீட் பண்ணலாம்'' என்றார் கணபதி. அவரது பேச்சுக்கு தலையசைத்து விட்டு லட்சுமி வழிகாட்டக் கோகுல் இருந்த அறைக்குள் நுழைந்த ரெங்கநாதன் திகைத்தார். இரவு முழுவதும் தூங்காமல் சிவந்திருந்த கண்களுடன் தோட்டத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் கோகுல். முகத்தில் கேள்விக் குறியுடன் அவன் அருகில் நெருங்கி அவன் தோள் தொட்டார் அவர். திடுக்கிட்டுத் திரும்பிய கோகுலின் கண்கள் கண்ணீர் வடித்துக் கொண் டிருப்பதை அறிந்த பெற்றோர் இருவரும் துடித்துப் போனார்கள்.

''டேய் கோகுல்... என்னடா இது? என்னப்பா ஆச்சு? எதுக்காக இப்படி ஒரு கோலத்துல நின்னுக்கிட்டு இருக்க?'' பதறிய ரெங்கநாதனின் மடியில படுத்துத் தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மறந்து கதறித் தீர்த்து விட்டான் கோகுல். மெல்ல மெல்ல சமாதானம் அடைந்த கோகுல் கூறிய செய்திகளைக் கேட்ட ரெங்க நாதகனின் கண்கள் கோபத்தில் சிவந்தன. அவர் தன் செல்போனை எடுத்து சில எண்களைத் தட்டினார். மறுமுனையில் இருந்தவரிடம் பேச வேண்டியதைப் பேசிவிட்டு வைத்த அவர் கோகுலைக் கோபம் அடங் காமல் முறைத்தார். பரிதாபமாக அவரைப் பார்த்த கோகுலின் பார்வையில் கோபம் தணிந்து விட்ட ரெங்கநாதன் மகனைத் தன்னுடன் அணைத்துக் கொண்டார்.

''சரிப்பா. விடு. நடந்தது நடந்து விட்டது. இனி மாலினி உன்பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்க



மாட்டாள். அவளை எப்படிக் கவனிக்கணுமோ அப்படிக் கவனிக்க சொல்லி விட்டேன். இதை ஏன் நான் முன்னாடியே செய்யவில்லை என்றுதானே நினைக்கிற? அப்படி நான் அவளை விரட்டியிருந்தா நீ இன்னொரு காமினியைப் பார்த்துப் போயிருப்ப. ஆனால் இன்று நீயே திருந்தி மனிதனாக நினைக்கும் போது அதுக்கு உதவி செய்வது ஒரு அப்பாவா என்னோட கடமை இல்லையா?'' கேட்ட ரெங்கநாதனை பார்க்க முடியாமல் தலை குனிந்தான் கோகுல். அவனை முதுகில் ஆறுத லாகத் தட்டிக் கொடுத்தார் பெற்றவர்.

## 35

பொழுது புலர்ந்து வெகுநேரம் ஆகிவிட்ட பிறகும் எழுந்து வராத பேத்தியை எண்ணி கவலை கொண்ட மனோன்மணி மோகனாவின் அறைக்குள் பதட்டத்துடன் சென்று பார்த்தார். மோகனா படுக்கையை விட்டு எழுந்து நடக்க முடியாமல் அனத்திக் கொண்டு படுத்திருந்த நிலையைப் பார்த்துப் பரிதவித்துப் போன மனோன்மணி, வேகமாக மோகனாவின் அருகில் சென்று அவள் நெற்றியில் கைவைத்தவர் வெப்பம் தாங்காமல் கையை உடனே எடுத்து விட்டார்.

''அம்மா... கண்ணு... மோகனா? என்னடா இது? இப்படி உடம்பு அனலாக் கொதிக்குது? இந்த அகில்

பையன் என்ன பண்றான்? அக்காவுக்கு இப்படி காய்ச்சல் அடிக்கிறது கூடத் தெரியாமல் போச்சா அவனுக்கு? ஆண்டவனே... நான் என்ன செய்வேன். என் பிள்ளை இப்படிக் காய்ச்சல் தாங்காம துடிச்சிக்கிட்டு இருக்கே...! அப்பா... கணபதி... இங்கே வாய்யா...'' புலம்பிக் கொண்டே வேகமாக இறங்கி வந்த மனோன்மணியின் சத்தத்தில் வீடே அவளைத் திரும்பிப் பார்த்தது. மனோன்மணி வந்த திசையைப் பார்த்தே மோகனா விற்கு ஏதோ ஆகிவிட்டதா என்ற பதட்டம் தோன்ற நாலே எட்டில் படிகளைக் கடந்து மோகனாவின் அறைக்குள் நுழைந்த கோகுல் அவளுடைய நிலையைக் கண்டதும் துடித்துப் போய் விட்டான். அவன் மோகனாவின் மறுப்பை அலட்சியம் செய்துவிட்டு அவளைக் கைகளால் அள்ளிக் கொண்டு ஹாலுக்கு வந்தான். அதற்குள் மனோன்மணி கூறிய செய்தியை அறிந்து கொண்ட கணபதி ஹாஸ்பிடலுக்குப் போன் பண்ணிவிட்டுக் கார் சாவியை எடுத்துக் கொண்டு வர, மோகனாவை தன்கைகளாலேயே தூக்கிச் சென்று காரில் படுக்க வைத்த கோகுல் அவளது பாதத்தை தன் மடியில் வைத்துக் கொண்டு அவளுடனேயே காரில் அமர்ந்து விட்டான். அவனுடைய செயல்கள் அனைத்தையும் வியப்புடன் பார்த்த மற்ற அனைவரும் மற்றொரு காரில் பின்தொடர ஹாஸ்பிடலில் கொண்டு போய் சேர்க்கப் பட்ட மோகனாவை விட்டு இம்மியளவும் போகவில்லை கோகுல்.

சுற்றி இருந்த அனைவரும் அவனது தவிப்பைப் புரிந்து விலகி நிற்க, அவர்கள் யாரையும் கவனத்தில்



கொள்ளாமல் மோகனாவையே பார்த்தபடி அவள் காலடியில் அமர்ந்து விட்டான் கோகுல். டாக்டர்கள் வந்து, மோகனாவைப் பரிசோதித்தது, மோகனாவிற்கு ஊசி போட்டது, குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது என்று ஏதுவுமே கோகுலின் மனதில் பதியவில்லை. அவனுக்குத் தெரிந்தது எல்லாம் தன்னுடைய மோகன மலர் தன்னால்தான் இப்படிக் குற்றுயிராகத் துடித்துக் கொண்டு இருக்கிறாள் என்பதுதான். குற்ற உணர்ச்சியால் உள்ளம் உருக மனதார அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டே அவள் காலடியிலேயே அமர்ந்து விட்டான் கோகுல்.

அவனுடைய நிலை உணர்ந்த ரெங்கநாதன் வெகு நேரம் வரை அவனது சிந்தனையைக் கலைக்காமல் அவன் போக்கிலேயே இருக்க விட்டுவிட்டார். மற்ற எவருமே கூட அவனது சிந்தனையில் குறுக்கிடாமல் விலகியே நின்று விட்டனர்.

கணபதிக்குக் கோகுல் தன் மகளின் மேல் வைத் திருந்த அளப்பரிய அன்பு அந்த நொடியில் நன்றாகப் புரிந்தது. மோகனாவின் முகம் பார்த்துத் தவிப்புடன் அமர்ந்திருந்த கோகுலைப் பார்க்கையில் தானே தேடியிருந்தால் கூட இப்படியொரு மணமகனைத் தன் மகளுக்கு மாப்பிள்ளையாக கொண்டு வந்திருக்க முடியாது என்று தோன்றியது அவருக்கு. தீர்க்கமான அனுபவ அறிவுடன் தனக்கு அறிவுரை கூறிய அன் னையை நன்றியுடன் பார்த்தார் அவர்.

அவரைப் போலவே ரெங்கநாதன் தம்பதியினரும் தன் மகன் மோகனாவின் மேல் காட்டிய அன்பு மகிழ்ச்சியையே அளித்தது. தங்களது ஆருயிர் மகன் மோகனாவின் மேல் வைத்திருக்கும் உண்மையான அன்பினால் இனி தீய வழிகளுக்கும் போகமாட்டான் என்று அவர்களது உள்ளம் பெரும் நிம்மதியை அடைந்தது.

ஆனால் இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டு அமைதியாக நின்றிருந்த மனோன்மணி மட்டும் கோகுலையும் மோகனாவையும் உள்ளம் நம்பாமல் கண்காணித்துக் கொண்டிருந்தார். இவர்கள் இருவருக்கும் இடையில் ஏதோ வேண்டாத ஒன்று நடந்திருக்கிறது என்பதை மட்டும் அவரது உள் உணர்வு மனோன்மணிக்குத் தெளிவாக உணர்த்தியது. ஒரு வேளை தனது திருமணத்திற்கு தந்தையின் சம்மதம் கிடைக்காதோ என்ற கவலையில் கூட தன் பேத்தி இப்படி கிடக்கிறாளோ என்ற சந்தேகமும் அவருக்கு இருந்தது. எது எப்படியிருந்தாலும் தன் பேத்திக்கும் கோகுலுக்கும் நடக்க இருக்கும் திருமணத்தை இனிமேலும் தள்ளிப் போடக்கூடாது என்று உறுதியாக எண்ணிக் கொண்ட அவர் மோகனாவின் உடல்நிலை தேறி வருவதற்காகக் காத்திருந்தார்.

தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி ஒவ்வொருவிதமாக கவலை கொண்டு இருப்பதை அறியாதவளாக கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்த மோகனாவின் உடல்நிலை இரு தினங்களுக்குப் பிறகு மெல்ல மெல்லத் தேறியது. அவள் மயக்கம் தெளிந்து



கண்விழித்து முதன் முதலாகப் பார்த்தது கோகுலின் முகத்தைத் தான். அவள் கண்விழித்ததை அறிந்தவுடன் அனைவரையும் முந்திக்கொண்டு அவள் முகத்தருகே குனிந்து பார்த்த கோகுலின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் மோகனாவின் கன்னங்களில் பட்டுத் தெறித்தது. கோடானு கோடி வார்த்தைகள் விளக்க முடியாத அர்த்தத்தை அவனது கண்களில் இருந்து விழுந்த கண்ணீர் துளிகள் மோகனாவிற்கு உணர்த்தியது. அவன் ஆனந்தமும் வேதனையும் கலந்த உணர்வுடன் கண்களை மீண்டும் மூடிக் கொண்டாள்.

''கோகுல், ரெண்டு நாளாப் பச்சத் தண்ணிகூட குடிக்காம இப்படியே உட்கார்ந்திருக்கியே? அதான் மோகனா கண்ணைத் திறந்து பார்த்துருச்சில்ல? அதோட உடல்நிலை கூட சரியாகிடுச்சு. இப்பவாவது ஏதாச்சும் சாப்பிடுப்பா'' மகனின் நிலையை எண்ணிப் பரிதவிப்புடன் கூறினார் ரெங்கநாதன்.

''ஆமாம்ப்பா கோகுல். காய்ச்சல் வந்த என் பேத்திகூடத் தெம்பாகிட்டா. நீதான் இப்ப பத்து நாளா காய்ச்சல் வந்து படுத்துக் கிடந்தவன் போல இருக்க. போய் குளிச்சிட்டு ஏதாச்சும் சாப்பிட்டுவிட்டு வாப்பா. அதுவரை மோகனாவை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் மனோன்மணி அன்புடன்.

அவர்களின் வார்த்தைகளைத் தட்ட முடியாமல் மோகனாவை ஒருமுறை ஆழ்ந்து பார்த்துவிட்டு ரெங்கநாதனுடன் வீடு திரும்பினான் கோகுல்.

# 36



அறையில் பாட்டியுடன் தனித்து இருந்த மோகனா மெதுவாகக் கண்களைத் திறந்து மனோன்மணியை பார்த்தாள்.

"என்னடா கண்ணு? ஏதாச்சும் சாப்பிடறியா? இல்ல வேற ஏதாச்சும் வேணுமா?" அன்புடன் பேத்தியின் தலையைத் தடவிக் கொடுத்தார் மனோன்மணி.

"அவர் எதுக்கு அப்பத்தா இன்னும் இங்க இருக்கார்?" மெல்லிய குரலில் கேட்ட மோகனாவின் வார்த்தைகளைக் கேட்ட மனோன்மணி அதிர்ந்து விட்டார்.

"எவரைப் பத்திம்மா சொல்ற? ரெங்கநாதனையா?" ஒன்றும் அறியாதவர் போல் கேட்டார் மனோன்மணி.

"அவர்தான் அப்பத்தா... அந்த... அந்த... கோகுல்" தயங்கியபடியே கூறிய பேத்தியை துளைத்தது பாட்டியின் பார்வை.

"அது உனக்குத்தான தெரியும். என்னைக் கேட்டா?" அமைதியாக பதிலளித்தார் அவர்.

"அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே அப்பத்தா. வேற என்ன இருக்கு இனிமேல்" தாங்க முடியாத வேதனையுடன் கேட்ட மோகனாவைப் பார்த்த மனோன்மணியின் கண்கள் சுருங்கின.



"அப்படின்னா... அப்படின்னா என்னம்மா அர்த்தம்?" அழுத்தமாகக் கேட்டார் அவர்.

"அப்படின்னா என் மனசு, அன்பு, காதல் எல்லாம் செத்துப் போச்சுன்னு அர்த்தம் அப்பத்தா" மனோன்மணியின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு கதறினாள் மோகனா.

அவள் அழுது ஓயும் வரை காத்திருந்த மனோன்மணி, அவளுக்கு மாத்திரை கொடுத்து உறங்க வைத்தார். மோகனா உடல் தேறி மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பும் வரை அதைப்பற்றி யாரிடமும் கூறாமல் தன் மனதிற்குள்ளேயே மறைத்த அவர் மோகனா வீடு திரும்பிய மறுநாள் அனைவரும் இருக்கும்போதே அதை எல்லோரிடமும் கூறிவிட்டார்.

அனைவரும் இரவு உணவை உண்டு முடித்துவிட்டு ஹால் சோபாவில் அமர்ந்து மகிழ்வுடன் பேசிக்கொண்டு இருப்பதைப் பார்த்த மனோன்மணி தானும் அவர்களுடன் இணைந்து அமர்ந்தார். அவர் உள்ளம் அனைவரின் முன்னிலையில் பேச வேண்டியதைப் பற்றி உருப்போட ஆரம்பித்தது.

"சரிப்பா கணபதி. நாங்களும் வந்து விளையாட்டுப் போல ஆறு, ஏழு நாள் ஆகிப்போச்சு. நான் நாளை காலையில் சென்னை திரும்பலாம்னு இருக்கேன்" கூறிய ரெங்கநாதனைப் பார்த்தார் கணபதி.

"அதுக்குள்ள என்னடா அவசரம். இன்னும் ரெண்டு நாள் இருந்திட்டுப் போகலாமே?"

"ரெண்டு நாள் இல்லடா. ரெண்டு மாசம் கூட இங்கயே இருக்கேன். நீ மட்டும் எனக்கு சம்பந்தியா வர

சம்மதம்னு சொல்லு. அப்புறம் பாரு...'' பட்டென்று மனதில் இருப்பதைப் போட்டு உடைத்து விட்ட ரெங்கநாதனை வியப்புடன் பார்த்தார் கணபதி.

''அதுக்கென்னடா. மோகனா பிறந்தப்பவே நாம சம்பந்தியா ஆகிட்டோம்ல. இப்ப என்ன புதுசா இப்படி யொரு வார்த்தையச் சொல்ற?'' தானும் நேரடியாக தன் சம்மதத்தைச் சொல்லி விட்டார் கணபதி.

இருவரின் உரையாடலைக் குறுக்கிடாமல் அமர்ந்து கேட்டுக்கொண்டு இருந்த மனோன்மணியின் பார்வை கோகுலின் முகத்தை ஆராய்ந்தது.

அவர்கள் இருவரின் வார்த்தைகளால் ஆனந்தப்படாத கோகுலின் கண்கள் ஏக்கத்துடன் மோகனாவின் அறையைப் பார்த்ததை மனதிற்குள் குறித்துக் கொண் டார் மனோன்மணி.

''அது சரிப்பா கணபதி. நீங்க ரெண்டு பேரும் சிநேகிதனுங்க. உங்க சம்மதத்தை உடனே சொல்லிட் டீங்க. ஆனா கட்டிக்கப்போற என் பேத்தி மோகனாகிட்ட சம்மதம் கேட்க வேண்டாமா?'' கேட்ட தாயின் முகத்தை திகைப்புடன் பார்த்தார் கணபதி.

''என்னம்மா இப்படிச் சொல்லிட்டீங்க. நம்ம மோகனாதான்...''

''நீயா எதையாச்சும் பேசக்கூடாது கணபதி. உன் பொண்ணு மனசில என்ன இருக்குன்னு கேட்டுத் தெரிஞ்சுக்க'' மகனை இடைமறித்தார் அன்னை.

''என்னத்தைம்மா கேட்டுத் தெரிஞ்சுக்கச் சொல்றீங்க? நம்ம கோகுலைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு



மோகனா சொல்லப் போகுதா?'' நம்பாமல் கேட்ட மகனை அமைதியாகப் பார்த்தார் மனோன்மணி.

''சொல்லப் போகுறா இல்லை கணபதி. அப்படித் தான் சொல்லிட்டா என் பேத்தி. புரியலையா... கோகுலைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு உன் பொண்ணு சொல்லிட்டா'' அழுத்தமாகக் கூறிய அன்னையின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்தது கணபதியும், அகல்யாவும்தான். மற்றவர்கள் ஓரளவு மோகனாவின் இந்த முடிவை எதிர்பார்த்தே இருந்தார்கள். கோபத்தோடு பல்லைக் கடித்த கோகுல் மெதுவாக நிமிர்ந்து மனோன்மணியைப் பார்த்தான்.

''சரி பாட்டி. என்னைக் கல்யாணம் பண்ணிக்க உங்க பேத்திக்கு விருப்பம் இல்லை. அதை மட்டும் தான் உங்க பேத்தி உங்க கிட்ட சொன்னாளா?''

''ஆமாய்யா. அத மட்டும் தான் சொல்லுச்சு. வேற என்னத்தை சொல்லச் சொல்லுற?''

''இல்ல... என்னைத்தான் கல்யாணம் பண்ண விருப்பம் இல்ல. வேற யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறாளாம்? அதையும் நீங்களே கேட்டுச் சொன்னா நாங்க நிம்மதியாக் கிளம்புவோம்'' கோபத்தை அடக்கிக் கொண்டு கூறிய கோகுலைத் தடுத்தார் ரெங்கநாதன்.

''என்ன கோகுல் இது? இப்படித்தான் நாகரீகம் இல்லாமல் பேசுவியா? நான் உன்கிட்ட இதை எதிர் பார்க்கல.''

''பொறுங்க டாட். நான் நாகரீகத்தோடதான் கேட்க றேன். சொல்லுங்க பாட்டி. போய் கேட்டுட்டு வர்றீங்களா?''

''நானா? நான் எப்படித் தம்பி இதைப்போய் அது கிட்டக் கேட்குறது? அதோட...'' பேசிய மனோன் மணியை கை உயர்த்தித் தடுத்தான் கோகுல்.

''முடியாதுல்ல? அப்ப... வித் யுவர் பர்மிஷன்... நான் போய் கேட்டுட்டு வர்றேன்'' யாருடைய பதிலையும் எதிர்பார்க்காமல் நாலே எட்டில் படிகளைக் கடந்து போய் மோகனாவின் அறைக்குள் புயலாய் நுழைந்தான் கோகுல்.

காற்றை விட வேகமாய் அறைக்குள் நுழைந்த கோகுலை எதிர்பாராத மோகனா அவசரமாக கட்டிலை விட்டு இறங்கி நின்றாள். நின்றவளின் முன் வந்து நின்று அவள் கண்களை உற்றுப் பார்த்த கோகுல் கோபம் தாங்காமல் கை முஷ்டியை இறுக்கிக் கட்டிலில் குத்தி விட்டு நிமிர்ந்தான். அவனது அத்தனை செயல்களையும் பார்த்துக் கொண்டே சிலையாக நின்று கொண்டிருந்த மோகனாவின் தோள்களைப் பற்றி உலுக்கிய கோகுல் கோபத்துடன் உறுமினான்.

''என்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு பாட்டிகிட்ட சொன்னியா? சொல்லு...''

''ஆமா சொன்னேன்'' அமைதியாகக் கூறினாள் மோகனா.

''என்ன திமிர்டி உனக்கு? சரி என்னப் பண்ணிக்க மாட்ட. வேற யாரைக் கல்யாணம் பண்ணிக்கிறதா உத்தேசம்?''

''அது உங்களுக்குத் தேவை இல்லை'' கூறிய மோகனா கண்களில் நீர் நிறையத் திரும்பிக் கொண்டாள்.



''அது எப்படிம்மா எனக்குத் தேவையில்லாத விசயமா போகும்?''

''அது அப்படித்தான்'' அழுத்தமாகக் கூறிய மோகனாவை இழுத்துக் கட்டிலில் அமரவைத்து அவள் எதிரே அமர்ந்தான் கோகுல். அவன் முகத்தை ஏறிட்டும் பாராமல் தலை குனிந்த மோகனாவின் தாடையைப் பிடித்து கோபமாக அவளது கண்களைப் பார்த்தான் கோகுல். அதில் தெரிந்த வேதனை அவள் அவன்மேல் கொண்டு இருந்த காதலைப் பறைசாற்றியது.

''ஏண்டி இப்படிப் பிடிவாதம் பிடிக்கிற? நான் செய்ததெல்லாம் தவறுதான். அதை நான் என்னிக்கும் மறுக்கவே மாட்டேன். ஆனா அதெல்லாம் நான் உன்னை பார்க்கிறதுக்கு முன்னாடி நடந்தது. அதையெல்லாம் மன்னிச்சுருன்னும் நான் கேட்க மாட்டேன். அது உன் விருப்பம். நீ என்னை மன்னிச்சாலும் சரி, மன்னிக்காமல் தண்டனை கொடுத்தாலும் சரி. அது உன் உரிமை. நீ என்ன சொன்னாலும், செய்தாலும் உனக்காக நான் பொறுத்துக் கொள்வேன். ஆனா நீ மட்டும் என்னை விட்டு விலகிடாதே. என்னால் அதைத் தாங்க முடியாது...''

''உங்களை மன்னிக்கவும், தண்டிக்கவும் நான் யாருங்க? எனக்கு என்ன உரிமை இருக்கு? இப்ப நீங்க எங்கிட்ட வந்து இப்படியெல்லாம் பேசினா நீங்க பொண்ணுங்களை உங்க இஷ்டத்திற்கு ஆட்டி வெச்சதெல்லாம் இல்லைன்னு ஆகிருமா? அவங்க உங்களை நம்பித் தானே தன் பெண்மையை உங்ககிட்ட ஒப்படைச்சு

இருப்பாங்க? இப்ப நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா அவங்களோட நம்பிக்கையைக் கொன்னதா ஆகாதா? அத்தோட...'' மேலே பேச விடாமல் தடுத்து அவள் வாய்மேல் கைவைத்தான் கோகுல்.

''அம்மா... பரதேவதை... உன்னோட நியாய தர்மத்தை எல்லாம் கொஞ்சம் கண்ட்ரோல் பண்ணிக்க. நீ இத்தனை சப்போர்ட் பண்ணிப் பேசற அளவுக்கு அவளுக எல்லாம் உத்தமி பத்தினிகள் இல்ல.''

''அப்படி இல்லேன்னாலும் அவங்க வாழ்க்கையை நாசம் பண்ணுகிற உரிமையை உங்களுக்கு யார் கொடுத்தது?'' ஆவேசமாகக் கேட்ட அவளைப் பார்த்து சிரிப்பு வந்தது கோகுலுக்கு.

''போடி லூசு. நானா அவளுக வாழ்க்கையை கெடுத்தேன். நான் பாட்டுக்கு இருந்தாலும் என்மேல வந்து விழுந்து என் வாழ்க்கையைத்தான் அவளுக எல்லோரும் சேர்ந்து கெடுத்தாளுக. அதற்கு ஈடாக என்ன வேணுமோ அதையெல்லாத்தையும் என்னிடம் இருந்து எடுத்துக்கிட்டும் போயிட்டாங்க. என் எதிர்கால வாழ்க்கையையும் சேர்த்துத்தான் சொல்றேன்'' வேதனையுடன் பேச்சை நிறுத்திய கோகுலை மௌன மாகப் பார்த்தாள் மோகனா.

''மறுபடியும் சொல்றேண்டி. நான் செய்தது எல்லாம் தப்புதான். ஆனா அது எல்லாம் உன்னைப் பார்த்து காதலிக்கிறதுக்கு முன்னாடி நடந்தது. உன்னை என்னிக்குப் பார்த்தேனா அன்னிக்கே என் அம்மாவிடம்



இனி நான் தப்பான வழிக்குப் போகமாட்டேன்னு சத்தியம் செய்து கொடுத்தவன்டி நான். உண்மையான அன்பு எல்லாத் தவறுகளையும் மன்னிக்கும், தண்டிக் காது. நீ என்மேல் உண்மையான அன்பை வெச்சிருக் கேங்கிறத எனக்கு நல்லாத் தெரியும். என்னை விட்டுட்டு வேறு ஒருத்தனை நீ மனதால் கூட நினைக்க மாட்டேன்னும் எனக்குத் தெரியும். நீயும் வேதனைப் பட்டு என்னையும் சித்திரவதை செய்வதற்கு என்னோட சேர்ந்து வாழ்ந்துதான் பாரேண்டி. அந்த வாழ்க்கை முழு வதும் உனக்கு உண்மையான அன்பையும் காதலையும் நான் என் வாழ்நாள் முழுவதும் கொடுப்பேன். ஒரு வேளை என்னை விட்டுப் பிரியணும்னு நீ முடி வெடுத்தா அதுக்கு அப்புறம் என்றுமே என்னை நீ பார்க்கமுடியாது. ஏன்னா இந்தக் கோகுல் அப்ப உயிரோட இருக்க மாட்டான். நான் சொல்வதெல்லாம் நம் காதலின் மீது ஆணை'' கூறிய கோகுலின் மடியில் அவனை மன்னித்து விட்டதன் அடையாளமாகப் படுத்துக் கண்ணீர் வடித்த மோகனாவை அள்ளி அணைத்துக் கொண்டான் கோகுல்.

அந்தப் பெரிய திருமண மண்டபம் முழுவதும் பெரிய பெரிய விஐபிக்களால் நிரம்பி வழிய தன் அருகில் காதலே உருவாக அமர்ந்திருந்த மோகனாவின் கழுத்தில் மாங்கல்யத்தைக் கட்டிய கோகுல் அனை வரும் அறிய அவள் கன்னத்தில் முத்தம் இட்டான். இனி அவள் கோகுலின் சொந்தம். அனைவரும் பார்க்க செல்லமாக அவனது கையில் கிள்ளினாள் மோகனா. இனி அவன் மோகனாவின் உரிமை. ஊரறிய மோகன

64599



மலரைத் தன் உடைமையாக ஆக்கிக் கொண்ட கோகுலநாதன் இனி மோகனமலரிடம் மட்டும் தேனை எடுக்கும் வண்ணத்துப் பூச்சி. அவர்கள் இருவரையும் வாழ்த்தி மனநிறைவும் ஆனந்தமும் கொண்டவர்களாக நிம்மதிப் பெருமூச்சு விட்டனர் இருவரின் பெற்றோரும். மனோன்மணியும் தன் மனம் விரும்பிய மாமாவே தன் அக்காவிற்கு கணவனாக அமைந்ததில் பெருமையுடன் கோகுலை விட்டு அகலாமல் அவன் அருகிலேயே அமர்ந்திருந்தான் அகில். சொந்தங்களின் அருமையை யும், காதலின் பெருமையையும், குடும்பத்தின் தெய்வீகத்தையும் முழுமையாக உணர்ந்த கொண்ட கோகுல் காதலுடன் மனைவியின் இடையைத் தன் னோடு அணைத்துக் கொண்டான்.